தொகுதி 9

தமிழாய்வு

பேராசிரியர் கே. என். சிவராஜபிள்ளை நூற்றாண்டு நினைவு மலர்

"திட்பமும் நுட்பமும்"

9 JUL 1991

பொதுப்பதிப்பாசிரியர்:
பேராசிரியர் டாக்டர் சி. பாலசுப்பிரமணியன்,
எம்.ஏ., எம்.லிட்., பிஎச்.டி.,
தமிழ்த்துறைத் தலைவர்,
சென்னைப் பல்கலைக் கழகம்.

உதவி:
தமிழ்த்துறை ஆசிரியர்களும் மாணவர்களும்

சென்னைப் பல்கலைக் கழக வெளியீடு
1979

தொகுதி 9

தமிழாய்வு

பேராசிரியர் கே. என். சிவராஜபிள்ளை
நூற்றாண்டு நினைவு மலர்

"திட்பமும் நுட்பமும்"

பொதுப்பதிப்பாசிரியர் :
பேராசிரியர் டாக்டர் சி பாலசுப்பிரமணியன்,
எம்.ஏ., எம்.லிட்., பிஎச்.டி.,
தமிழ்த்துறைத் தலைவர்,
சென்னைப் பல்கலைக் கழகம்.

உதவி :
தமிழ்த்துறை ஆசிரியர்களும் மாணவர்களும்

சென்னைப் பல்கலைக் கழக வெளியீடு
1979

முதற் பதிப்பு : 1979

தமிழாய்வு கிடைக்குமிடம் :

பதிவாளர், சென்னைப் பல்கலைக் கழகம்,

சென்னை - 600005

நூல்களை மதிப்பீடு செய்வதற்கும், மாற்றிக் கொள்வதற்கும் (Exchange) அனுப்ப வேண்டிய இடம் :

பதிப்பாசிரியர்; "தமிழாய்வு"

சென்னைப் பல்கலைக் கழக இணைவகம், சென்னை-5.

© சென்னைப் பல்கலைக் கழகம்,

அச்சிட்டோர் :

அவ்வை அச்சுக்கூடம்,

சென்னை, 600 013.

TAMIḺĀYVU

(Annals of Tamil Research)

"CLARITY AND PRECISION"

General Editor:
DR. C. BALASUBRAMANIAN, M. A., M. Litt., Ph. D.,
Professor and Head of the Department of Tamil,
University of Madras

Assistance
STAFF & STUDENTS OF THE DEPARTMENT OF TAMIL

DEPARTMENT OF TAMIL
UNIVERSITY OF MADRAS
1979



கெ. என். சிவராஜ பிள்ளை

பதிப்புரை

சென்னைப் பல்கலைக்கழகத் தமிழ்த்துறையின் முதல் தலைவராய் இலங்கிய கெ. என். சிவராஜபிள்ளையவர்கள் தோன்றி ஒரு நூற்றாண்டு இந்த 1979-ல் நிறைவுறுகிறது. எனவே, இந்த ஆண்டிற் குரிய முதற்பருவத் தமிழாய்வை ஆசிரியர் கெ. என். சிவராஜபிள்ளை நினைவு மலராக வெளியிடுகிறோம். சிவராஜபிள்ளையவர்கள் 1927 முதல் 1936 வரை தமிழ்த்துறையில் பணிபுரிந்தபோது மூன்று நூல் களைப் பல்கலைக்கழக வாயிலாக வெளியிட்டுள்ளார்கள். இவர் பத்திரிகைத் துறையிலும் ஆய்வுத் துறையிலும் அரும்பணியாற்றி யவர். இவர் இயற்றிய நூல்கள் பலவாகும்.

ஆராய்ச்சிப் பேரறிஞர் கெ. என். சிவராஜபிள்ளையவர்களின் வாழ்க்கை வரலாற்றை அவர்தம் தமிழ்த்தொண்டுகளோடு இணைத்து விரிவான ஒரு கட்டுரையைத் திரு. மு. சண்முகம் பிள்ளையவர்கள் எழுதியுள்ளார்கள். அடுத்து அவர் ஆக்கிய நூல்களில் காணும் அரும்பொருள்களையும் அவருடைய ஆராய்ச்சித் திறனையும் 'கெ. என். சிவராஜபிள்ளையின் மதிநலம்' என்னும் கட்டுரை விளக்கு கிறது. மூன்றாவதாகச் சிவராஜ பிள்ளையவர்கள் எழுதிய 'தமிழ்' என்னும் சொல்லுற்பத்தி பற்றிய ஆங்கிலக் கட்டுரை 'The Derivation of the word Tamil' இடம் பெறுகிறது.

'கல்கத்தாத் தேசிய நூல் நிலையத்தில் உள்ள தமிழ்ச் சுவடிகள் என்பது ஒரு செய்திக் கட்டுரையாகும். அண்மையில் திவாகரச் சுவடிகளை ஆராய்வதற்காகத் தேசியநூலகத்திற்குச் சென்றுவந்த திரு. மு. சண்முகம் பிள்ளையவர்கள் திவாகரச் சுவடிகளின் நிலைமையை நன்கு விளக்கியிருப்பதோடு, அங்குள்ள பிற தமிழ் நூல் சுவடிகள் பற்றிய பொது விவரங்களையும் தொகுத்துத் தந்துள்ளார்.' இவ்விவரம் ஆராய்ச்சியாளர்க்குப் பெரிதும் பயன்படுவதாகும்.

ஆய்வுக் கட்டுரைப் பகுதியில் இறுதியாக இடம் பெற்றிருப்பது இக்காலத் தமிழ் நாவல் ஒன்று பற்றிய சிறப்பாய்வாகும். திரு. ஜெய காந்தன் எழுதிய 'அட சும்மாகிட புள்ளே' என்னும் நவீனத்தில் இடம் பெற்ற ஒரு மனிதனின் சிறப்பியல்புகளை எடுத்து விளக்கு கிறது.

அச்சில் வாரா அருந்தமிழ் நூல் வரிசையில் கெ. என். சிவராஜ பிள்ளையவர்கள் ஐம்பது ஆண்டுகளுக்கு முன் இயற்றிய 'கம்ப

ராமாயணக் கௌஸ்துபம்' என்னும் திறனாய்வுக் கவிதை நூல் வெளியிடப்பட்டுள்ளது. அவர் பெயரால் வரும் நினைவு மலரில் அவருடைய தமிழ்ப் படைப்பு ஒன்று வெளியிடப்படுவது மிகவும் பொருத்தமாகும். இந்நூலை விளக்கக் குறிப்புகள், அகராதிகள் முதலியவற்றுடன் திரு. மு. சண்முகம் பிள்ளையவர்கள் பதிப்பித்துள்ளார்கள்.

இத்தமிழாய்வின் மூன்றாவது பெரும் பகுதி தமிழ்ப் புனைகதை ஆய்வு அடைவு என்பதாகும். தமிழில் 1978ஆம் ஆண்டு வரை வெளிவந்த தமிழ்ப் புனைகதைகளை ஆராய்ந்தறிவதற்குத் திரு. கோ. கிருட்டிணமூர்த்தியவர்கள் தொகுத்துள்ள இந்த ஆய்வு அடைவு பெரிதும் பயன்படும். இந்த ஆய்வு அடைவு சென்ற தமிழாய்வு 8ஆம் தொகுதியிலேயே வெளியிடுவதற்காக அச்சிடப் பெற்றது. அத்தொகுதிக்குரிய பக்கங்கள் விஞ்சி விட்டமையால் அடுத்து வரும் இந்த 9ஆம் தமிழாய்வில் சேர்த்து வெளியிடுகிறோம்.

மதிப்புரை மாலை, தமிழ்த்துறைச் செய்தி ஆகியவையும் வழக்கம் போல் இடம் பெற்றுள்ளன.

தமிழாய்வினை உருவாக்கும் பொறுப்பினை முழுமையாக ஏற்றுச் சீரிய முறையில் தொகுத்து அமைத்து அச்சிட்டு வெளியிடுவதற்கு அருந்துணையாயிருந்து வரும் புலவர்மணி மு. சண்முகம் பிள்ளை அவர்களுக்குத் தமிழ்த்துறையின் சார்பில் நன்றி தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

சென்னை-600 005
9—8—1979

சி. பாலசுப்பிரமணியன்

பொருளடக்கம்

I. *ஆய்வுக் கட்டுரைப் பகுதி*

1. ஆராய்ச்சிப் பேரறிஞர் கெ. என். சிவராஜ பிள்ளை
—திரு. மு. சண்முகம் பிள்ளை 1

2. கெ. என். சிவராஜ பிள்ளையின் மதிநலம்
—டாக்டர் சி. பாலசுப்பிரமணியன் 17

3. The Derivation of the word 'Tamil'
—Mr. K. N. Sivaraja Pillai 25

4. கல்கத்தாத் தேசிய நூல் நிலையத்தில் உள்ள தமிழ்ச் சுவடிகள்
—திரு. மு. சண்முகம் பிள்ளை 35

5. ஜெயகாந்தனின் 'அட சும்மாகிட புள்ளே'வில் ஒரு மனிதன்
—டாக்டர் மா. செல்வராசன் 45

II. *அச்சில் வாரா அருந்தமிழ்—9*
கம்பராமாயணக் கௌஸ்துபம்
—கெ. என். சிவராஜ பிள்ளை i—viii, 1—104

III. *தமிழ்ப்புனைகதை ஆய்வு : அடைவு* 1—44

IV. *மதிப்புரை மாலை* 1—8

V. *தமிழ்த்துறைச் செய்திகள்* 1—8

ஆய்வுக் கட்டுரைப் பகுதி

பொருளடக்கம்

1. ஆராய்ச்சிப் பேரறிஞர் கெ. என். சிவராஜ பிள்ளை — 1

—திரு. மு. சண்முகம் பிள்ளை

2. கெ. என். சிவராஜ பிள்ளை மதிநலம் — 17

— டாக்டர் சி. பாலசுப்பிரமணியன்

3. The Derivation of the word 'Tamil' — 25

—Mr. K. N. Sivaraja Pillai

4. கல்கத்தாத் தேசிய நூல் நிலையத்தில் உள்ள தமிழ்ச்சுவடிகள் — 35

—திரு. மு. சண்முகம் பிள்ளை

5. ஜெயகாந்தனின் 'அட சும்மாகிட புள்ளே' யில் ஒரு மனிதன் — 45

டாக்டர் மா. செல்வராசன்

1. ஆராய்ச்சிப் பேரறிஞர் கே. என். சிவராஜ பிள்ளை

(1879—1941)

வித்துவான் மு. சண்முகம் பிள்ளை
தமிழ் விரிவுரையாளர், சென்னைப் பல்கலைக் கழகம்.

முன்னுரை

பத்திரிகை உலகிலும் ஆராய்ச்சித் துறையிலும் நீண்ட காலம் பணிபுரிந்தவர் கெ. என். சிவராஜபிள்ளை. இவர்தம் பத்திரிகைப்பணி திருவிதாங்கூர் சமஸ்தானத்தில் நிகழ்ந்தது; ஆராய்ச்சிப்பணியோ சென்னைப் பல்கலைக்கழகத்தில் அமைந்தது. முன்னது இவர் வாழ்வின் முற்பகுதியிலும், பின்னது பிற்பகுதியிலும் நேர்ந்தது. முற்பகுயில் உழைத்த பத்திரிகைகள் காலாந்தரத்தில் நின்றுபோயின. அவற்றில் இவர் எழுதிவந்த செய்திகளையும், ஆராய்ச்சியுரைகளையும் அவர்களாலேயே பாதுகாக்க இயலவில்லை. பின்னுளில் இவர் திருவனந்தபுரத்தை விடுத்து, யாழ்ப்பாணத்திற்கும் சென்னைக்குமாகத் தமிழ்ப் பணிபுரியச் சென்றபோது, அங்கங்கே விடுக்கப் பெற்ற குறிப்புக்கள் அப்படி அப்படியே தக்க காப்பின்றிக் கரைந்து விட்டன.

சென்னைப் பல்லைக்கழகத்தில் ஆராய்ச்சித்துறையில் ஸீனியர் லெக்சரராயும், ரீடராயும் பணியாற்றியபோது எழுதிய ஆராய்ச்சி உரைகளை மூன்று தொகுதிகளாகச் சென்னைப் பல்கலைக் கழகத்தார் வெளியிட்டுள்ளனர். 1935-ல் தாம் பாடிய கவிதைத்தொகுதிகளுள் ஒன்றுன 'நாஞ்சில் வெண்பா' என்னும் நூலை இவரே அச்சிட்டு வெளியிட்டார். இதற்கும் பல ஆண்டுகளுக்கு முன் (1927) நெல்லைத் தமிழ்க் கழகத்தின் வழி, தமது 'மேகமாலை' என்னும் சந்தக் கவிதை நூலை வெளியிட்டுள்ளார். மேலும், தாமும் தமது நண்பர் கவிமணி தேசிகவிநாயகம்பிள்ளை, திரு தி. இலக்குமணப்பிள்ளை, திரு. பண்டித முத்துசாமிப்பிள்ளை ஆகியோரும் பாடிய கவிதைகளைத் தொகுத்து, 'சிறுபாமாலை' என்ற பெயருடன் குழந்தைகள் பொருட்டு வெளியிட்ட சிறுநூலும் உள்ளது. ஆக, இவ்வாறுமே இன்று நூல் வடிவில் நாம் ஒருசில நூலகங்களில் காணுதல் கூடும். தாம் பல இடங்களில் பணியாற்றியபோதும், ஓய்வின் பின்னரும் எழுதிய சில ஆராய்ச்சியுரைகளும் பற்பல கவிதைகளும் இன்னும் பிரசுரமாக

வில்லை. ஆகவே, கெ. என். சிவராஜ பிள்ளையின் தமிழ்ப் பணியைத் தமிழுலகம் முழுமையாக நன்கு அறியக்கூடவில்லை. பல ஆண்டுகளுக்கு முன் காலஞ்சென்ற இவர்களோடு பழகிய நண்பர்களும் பிறரும் இன்று இல்லை. அதனால், இவர்தம் வாழ்க்கையில் நிகழ்ந்த தமிழ்ப்பணிகள் பலவும் இடையீடின்றிக் கோவையாகத் தெரியக்கூடவில்லை. எனினும், இவர்தம் புதல்வர் புதல்வியராலும், ஏனைய ஒருசில நண்பர்களாலும் பல குறிப்புக்கள் தெரியவந்தன. அவற்றைக் கருவியாகக் கொண்டு இவர்தம் வாழ்க்கை வரலாற்றைத் தொகுத்து எழுத முற்படலானேன்.

நாஞ்சில் நாடு

பண்டை நாளில் 'நாஞ்சில் நாடு' என்று போற்றப் பெற்ற தென் குமரியை அடுத்த சிறுநாட்டின் பகுதியே கெ. என். சிவராஜபிள்ளை அவர்களுடைய மூதாதையர் வாழ்ந்த நாடு. இந்த நாஞ்சில் நாடு 1956-ஆம் வருடம் நவம்பர் மாதத்திற்கு முன்னர், திருவிதாங்கூர் சமஸ்தானத்தின் தென்பகுதியாக இருந்தது. இப்பொழுதோ தமிழகத்தின் தென்கோடி மாவட்டமான கன்னியாகுமரி மாவட்டத்தின் பகுதியாய் உள்ளது.

இந்நாட்டிலும் சரி, மலையாள நாட்டின் பிறபகுதிகளிலும் சரி, அண்மையில் உள்ள திருநெல்வேலி மாவட்டத்திலிருந்து வந்து குடியேறிய வேளாளக் குடும்பங்கள் சிற்சில ஊர்களில் நிலைபெற்றன. இவர்கள் பெரும்பாலும் நீர்வளம், நிலவளம் மிக்க நாஞ்சில் நாட்டில் வேளாண்மைத் தொழில்செய்து வாழ்க்கை நடத்தவும், பிற இடங்களில் வியாபார நிமித்தமாகவும் குடியேறியவர்களாவர். இங்ஙனமாக நாஞ்சில் நாட்டில் வந்து குடியேறிய குடும்பங்களில் ஒன்று, வைணவத் திருப்பதிகள் நூற்றெட்டுள் ஒன்றுன திருப்பதிசாரம் என வழங்கும் திருவண்பரிசாரத்தை அடுத்துள்ள வீமனசேரியில் வந்து குடியேறியது. (வீமனசேரி என்பது வீமனைப்போன்ற ஆண்மையாளர் சேர்ந்து வாழும் ஊர் எனப் பொருள்படும். 'சேரி' என்பது தாழ்மையைக் குறிக்கும் எனக் கருதிய பிற்காலத்தார் 'பீமநகரி', 'வீமநகரி' என்றும் வழங்கி வருகின்றனர்.) இக்குடும்பத்தினர் ஒருசில தலைமுறைகளுக்கு முன் வந்தவர்களே; இந்த ஊரில் குடியேறினர் என்பதைவிட இந்த ஊரை இவர்களே நிறுவினுர்கள் என்றே சொல்லலாம். ஏனெனில், அன்றும் சரி, இன்றும் சரி, இவ்வூரில் உள்ள வேளாளக் குடியினர் அனைவரும் ஒரே குடும்பத்தின் கிளைகளாவர்.

பிள்ளையின் பிறப்பு

பிள்ளை அவர்களின் தந்தை பெயர் நாராயணபிள்ளை என்பது. அவருடைய சகோதரர் மூவரும் அந்த ஊரிலேயே தனித்தனிக் குடும்பங்களாக வாழ்ந்தனர். இவருடைய தந்தையாருடன் பிறந்த அத்தை, திருநெல்வேலியில் தாம்பிரவர்ணிக் கரையிலே உள்ள வண்ணார்பேட்டையில் வாழ்ந்த வையாபுரிப்பிள்ளை என்பவருக்கு

வாழ்க்கைப்பட்டார்கள். அவருக்கு மிகுதியான நிலபுலன்கள் இருந்தன. கங்கைகொண்டான் என்னும் ஊரில் நஞ்சை புஞ்சைகளோடு கூடிய பெரிய பண்ணை இருந்தது. இந்தப் பண்ணையைப் பாதுகாப்பதற்குத் துணையாகத் தமது மைத்துனராகிய நாராயண பிள்ளையை அழைத்துக்கொண்டார் வையாபுரிப்பிள்ளை சில ஆண்டுகள் கங்கைகொண்டானிலேயே நாராயணபிள்ளை வாழ்ந் திருந்தார். முத்தம்மை என்னும் பெண்மணியை வாழ்க்கைத்துணையாகக் கொண்டு இல்லற வாழ்வைத் தொடங்கினார். அங்கே அவருக்குக் குழந்தைச் செல்வங்களும் தோன்றின. வையாபுரிப் பிள்ளை, குமரேசபிள்ளை, சிவகாமிநாதபிள்ளை, சிவராஜபிள்ளை என ஆண்கள் நால்வரும், தாயம்மை என்னும் பெண் ஒருத்தியும் பிறந் தனர். சிவராஜபிள்ளை அவர்கள் பிறந்தது 1879-ஆம் ஆண்டில் ஆகும்.

குழந்தைகளின் பாலப்பருவம் கடக்கின்ற நிலையில், அவர் களுடைய கல்வியை முன்னிட்டு, வீமனசேரிக்கே நிலையாகக் குடியிருக்க வந்துசேர்ந்தார் நாராயணபிள்ளை. ஏனெனில், அண்மையில் உள்ள நாகர்கோவில் நகரில் பாடசாலைகள் இருந்தன. ஆதலால், அந்நகரில் கல்விபயிலக் குழந்தைகளுக்கு வேண்டும் ஏற்பாடுகளைச் செய்தார்.

இவருடைய சகோதரர்களில் இவரோடு குமரேசபிள்ளை என் பார் ஒருவரே அருந்தமிழோடு ஆங்கிலமும் பயின்றவர்கள். இவருடைய தமையனார் குமரேசபிள்ளை மெட்ரிகுலேசன் தேறியதும், சட்டம் பயின்று, வக்கீல் தொழில் புரியலானார். அதனால் அவரை ‘வக்கீல்பிள்ளை’ என்று குடும்பத்தார் குறிப்பிடுவது உண்டு. அவ ருக்குக் கம்பராமாயணத்தில் மிகுந்த புலமை இருந்தது. கையேடு வாசிப்பவர் ஒருவரை உடனிருத்திப் பாடல்களை வாசிக்கச் செய் வித்து, செய்யுட்களுக்கு விரிவுரைகள் சொல்லிக் கூட்டத்தினரை மகிழ்வித்து வந்தார். இவ்வாறு நிகழ்த்தும் கம்பராமாயண விரிவுரையைக் ‘கம்பராமாயண வாசிப்பு’ என்றே நாஞ்சில் நாட்டில் வழங்கிவருகின்றனர். கோடை காலங்களில் கம்பராமாயண வாசிப்புக்கள் பல ஊர்களில் இப்பொழுதும் நிகழ்கின்றன. இதற்கு முன்னோடியாக ‘கம்பராமாயண வாசிப்பு’ முறையை நாஞ்சில் நாட்டில் பிரபலப்படுத்தியவர் குமரேசபிள்ளையே. இதனால் அவர் ‘கம்பராமாயணம் குமரேசபிள்ளை’ என்றே யாவராலும் அழைக்கும் பேறும் புகழும் பெற்றார். திருநெல்வேலி முதலிய பிற மாவட்டத்து ஊர்களுக்கும் சென்று, அவர் கம்பராமாயண விரிவுரை நிகழ்த்திய துண்டு. சிவராஜபிள்ளை திருவனந்தபுரத்தில் வாழ்ந்த காலங்களில் அவரும் தம்பியுடன் அங்குச் சில வருடங்கள் வாழ்ந்திருந்தார். தமது வாழ்வின் பிற்பகுதியை அவர் நாகர்கோவிலிலேயே கழித்தார். அவருக்கு ‘லீலாவதி’ என்னும் பெண் மகவு ஒன்றே உண்டு. அவ் வம்மையார் ஆவணப்பதிவு அதிகாரியாய்ப் பணிபுரிந்த பாளையங் கோட்டை முத்தையா பிள்ளை என்பாரை மணந்து, குழந்தைச் செல்வங்களுடன் சிறப்புற வாழ்ந்து வருகின்றார்கள்.

கல்வி

அந்நாளில் கல்லூரிப் படிப்பிற்குச் சென்றவர்களில் வீமனசேரிக் குடும்பத்திலேயே சிவராஜபிள்ளையவர்கள்தான் முதல்வர் எனலாம். இவருடைய கல்லூரிப் படிப்பு நிகழ்ந்தது சென்னையில் சிறப்புற விளங்கி வரும் கிருத்துவக் கல்லூரியிலாகும். இவர் பி. ஏ. பட்டதாரி யாக ஆனார். கல்லூரியில் படிக்கும் போதே தேசப்பற்றும், மொழிப் பற்றும் நிரம்பியவராய் இருந்தார். ஆங்கிலத்திலும் ஆழ்ந்த புலமை உடையவராய் இருந்தார். அக்காலத்தில் தமக்குப் பேராசிரியராக இருந்த வெள்ளையர்களோடு வாதம் செய்து, தமது புலமையை வெளிப்படுத்தியதுமுண்டு. பேராசிரியர்களும் இவரை நல்ல மாணவர் எனப் போற்றிப் பாராட்டி, இவருடைய கல்வி ஆர்வத்திற்குத் தக்க வண்ணம் ஊக்கம் அளித்தனர். ஆனால், தமிழ்ப் பயிற்சி இவர்தம் குலவித்தையாய் இயற்கையிலேயே வளர்ந்து வந்தது.

காவல்துறைப் பணி

பி.ஏ. பட்டதாரியாக வந்த பிள்ளை போலீஸ் இன்ஸ்பெக்டராகத் திருவிதாங்கூர் அரசாங்கப்பணியில் அமர்ந்தார்கள். அந்நாளில் போலீஸ் உத்தியோகம் மிகவும் கௌரவமாக மதிக்கப்பட்டது. போக்குவரவு வாகன வசதிகள் மிகவும் குறைவான அக்காலத்தில் குதிரை சவாரி செய்தே இப்போலீஸ்பணி பார்க்க வேண்டியிருந்தது. ஆகவே, குதிரை சவாரியிலும் சிறந்த பயிற்சி பெற்றிருந்தார். இவர் குதிரைமீது சவாரி செய்து போலீஸ் உத்தியோகம் பார்த்த செய்தி களைப்பெரியோர்கள் பெருமையாகக் கதைபோலப் பேசுவது உண்டு.

ஆங்கிலமும், தமிழும் போற்றிப் பயின்று இலக்கிய இன்பம் காணும் இவருக்குப் போலீஸ் உத்தியோகம் விருப்புடையதாயிருக்க வில்லை. அதோடு வெள்ளையராய் அமைந்த மேலதிகாரி உண்மைக்கு மாருக ஒரு கொலைக்குற்றத்தில் மாற்றியுரைக்குமாறு வற்புறுத்தியதும் இவரது உள்ளத்திற்குப் பெரிதும் வேதனையளித்தது. மேலதிகாரியின் நிர்ப்பந்தத்திற்குப் பணியாது, இவர் தமது வேலையையே ராஜிநாமா செய்தார்.

பத்திரிகைப் பணி

இதன் பின்னர், 'நாஞ்சில் நேசன்' என்னும் தமிழ் வாரப் பத்திரி கையை வெளியிட்டு, மக்களிடையே அறிவுணர்ச்சியைப் பரப்ப முற்பட்டார். தாம் வேலை பார்த்த போலீஸ் இலாகாவில் நடை பெற்ற ஊழல்களையும் அதிகாரிகளின் நேர்மையற்ற செயல்களையும் துணிச்சலுடன் பத்திரிகையில் எழுதிவந்தார். சுமார் ஒரு வருட காலத்திற்கு மேல் அப்பொழுதுள்ள சூழ்நிலையில் பத்திரிகையை நடத்த முடியவில்லை.

மனோன்மணீயம் சுந்தரம் பிள்ளையின் அழைப்பு

அப்பொழுது, திருவனந்தபுரம் மகாராஜா கல்லூரியில் தத்துவப் பேராசிரியராக விளங்கிய பேராசிரியர் சுந்தரம் பிள்ளையவர்களின்

அழைப்பு பிள்ளையவர்களுக்கு வந்தது. ஒப்புயர்வற்ற மனோன்மணீய நாடகத்தையும், வேறு பல அரிய ஆராய்ச்சிகளையும் தமிழுக்குத் தந்து, என்றும் இறவாப் புகழுடன் விளங்கி வரும் சுந்தரம் பிள்ளை யவர்கள் புகழைத் தமிழ்நாட்டில் அறியாதார் யார்? அவர், 'பீபிள்ஸ் ஒப்பினியன்' என்னும் ஆங்கிலப் பத்திரிகையைத் திருவனந்தபுரத் திலிருந்து வெளியிட்டு வந்தார். இந்தப் பத்திரிகையின் துணையாசிரி யாராய் இருந்து பணிபுரிய ஏற்றவர் சிவராஜபிள்ளையே எனக் கண் டார் பேராசிரியர். அதோடு இவர் அவருக்கு உறவின் முறையினரும் ஆவர்.

அச்சமயம் இவருக்குத் திருமணமும் ஆகியிருந்தது. இவர்தம் வாழ்க்கைத் துணைவியார் பெயர் செல்லம்மாள் என்பது. தமது மனைவியாருடன் திருவனந்தபுரத்தில் தங்கிப் பேராசிரியர் சுந்தரம் பிள்ளை அவர்களோடு பத்திரிகைத் தொழில் புரிந்தார். பிள்ளையவர் கள் ஆராய்ச்சிப் பேரறிஞராக வந்ததற்கு வழிகாட்டியாய் அமைந்த வர் பேராசிரியர் சுந்தரம் பிள்ளையே. ஆதலால் பேராசிரியர் சுந்தரம் பிள்ளை சிவராஜபிள்ளையின் குருவாவார். இவர் அவரிடம் பற்பல செய்திகளையும் தெரிந்துகொண்டு ஆங்கில இதழைச் சிறப்புற நடத்தி வந்தார். பேராசியர் சுந்தரம்பிள்ளை அப்பொழுது செய்துவந்த ஆராய்ச்சிகளில் சிவராஜபிள்ளையும் உடனிருந்து வேண்டுவன செய்துவந்தார். அந்நாளில் சுந்தரம்பிள்ளை 'Directory of Archaeology' என்னும் புத்தகத்தைத் தயாரித்து வந்தார். இதில் பிள்ளை அவர்களுக்கும் பெரும் பங்கு உண்டு.

திருவனந்தை வாழ்க்கை

சில ஆண்டுகளின்பின் பேராசிரியர் சுந்தரம்பிள்ளை மறையவே, பத்திரிகைப் பொறுப்பு முழுமையும் ஏற்று இவர் நடத்தலானார். தமது குருவின் மகனாராகிய இளையர் நடராஜபிள்ளைக்குக் குருவாகவும் காப்பாளாராகவும் இருந்து பிள்ளையவர்கள், ஆசிரியரின் மறை வுக்குப் பின், அவர்தம் குடும்பத்தைக் கவனிக்கும் பொறுப்பையும் ஏற்று நடத்திவந்தார்.

திருவனந்தபுரத்திற்குப் பிள்ளையவர்கள் வந்தபோது, சில காலம் பொறுத்து, இவர் தமையனார் வக்கீல் குமரேசபிள்ளையும் அவ்வூருக்கு வந்து, தனியாக வாழத் தொடங்கினார். தமையனாருக்காக மலையில் கூப்பு குத்தகைக்கு எடுத்துக் கொடுத்தார். 'மலபார் குவார்ட்டர்லி ரிவ்யூ' என்னும் ஆங்கில முத்திங்கள் வெளியீடும் தொடங்கி நடத்தி வந்தார். மலையாள நாடெங்கும், பிற இடங்களிலும், இவர்தம் பேரும் புகழும் பரவின; மலையாள மக்களும் இவரை மதித்துப் போற்றினர்.

பேராசிரியர் வையாபுரிப்பிள்ளை முதலியோர் தொடர்பு

அங்குத் தமிழாராய்ச்சிப் பணிகளும் இவர் நிகழ்த்தி வந்தார். தமிழை விரும்பிக் கற்பதிலும், அன்பர்களுடன் கூடி ஆய்வுகள்

செய்வதிலும் விருப்பமுடைய தமிழறிஞர் பெருமக்கள் சிலரும் அங்கு வாழ்ந்தனர். பேராசிரியர் எஸ். வையாபுரிப்பிள்ளை அப்பொழுது திருவனந்தபுரத்தில் வக்கீல் தொழில் புரிந்து வந்தார். தமிழ்க் கவிமணி தேசிகவிநாயகம் பிள்ளை, பண்டித முத்துசாமிப்பிள்ளை, இசையரசு தி. இலக்குமண பிள்ளை முதலியோரும் அப்பொழுது அங்கு வாழ்ந்த தமிழறிஞர்களில் முக்கியமாகக் குறிப்பிடத்தக்கவர்கள். நீதிபதி கே. ஜி. சேஷையரும் தமிழறிஞர்களுடன் கலந்து பழகி வந்தார். இப்பெரியார் ஆராய்ச்சி முறையில் பல உரைகளும் வெளியிட்டார். இங்ஙனம் தமிழ் விருப்பமுடையார் ஒருங்கு கூடித் தமிழாராயும் பொதுச்சபையாகப் புத்தன்சந்தையிலுள்ள 'சைவப் பிரகாச சபை' விளங்கியது. வாரம் தவறாது தமிழ்க் கூட்டங்களும் இங்கு நடைபெற்று வந்தன. இவ்வாறு தமிழ்க் காதலால் உந்தப்பட்டோர்களின் ஊக்கத்தால் தமிழ்நூற் கல்வியும் ஆராய்ச்சியும் பொழுது போக்காக வளர்ந்துவந்தன. இவர்களில் பலரும் ஆங்கிலப் புலமையும் மிக்குடையவராதலின் மேனாட்டாரின் புது முயற்சிகளையும் கண்டு தெளிந்து செவ்விய முறையில் ஆராய்ச்சித் துறையில் பல உத்திகளையும் கையாண்டு வந்தனர்.

பிள்ளையின் புலமை

1922 ஆம் ஆண்டு வையாபுரிப்பிள்ளை பேராசிரியர் சுந்தரம் பிள்ளையின் மனோன்மணீயத்திற்கு இரண்டாம் பதிப்புக் கொண்டு வந்தார். இந்தப் பதிப்பு, திருந்திய முறையில் ஆராய்ச்சி அம்சங்களோடு கூடி வெளிவந்தது. இதில் பதிப்பாசிரியரின் வேண்டுகோளின்படி அந்நாடக நூல்பற்றி ஆங்கிலத்தில் ஆராய்ச்சியுரை ஒன்றைச் சிவராஜபிள்ளை எழுதினார். இவருடைய ஆய்வுரை மனோன்மணீய நாடகத்திற்கு அமைந்த சிறந்ததொரு மதிப்புரையாகும். பேராசிரியர் சுந்தரம்பிள்ளையின் வரலாறும், கல்வியின் பரப்பும் விளக்கியதோடு அந்நாடக அமைப்பின் மாண்புகளையும் பலபட ஆராய்ச்சி நோக்கில் வகுத்து எழுதியதாகும் இவ்வுரை. இது சிவராஜ பிள்ளையின் ஆராய்ச்சி வன்மைக்குச் சிறந்ததோர் எடுத்துக்காட்டுமாகும்.

இம்மனோன்மணீயப் பதிப்பாசியர் எஸ். வையாபுரிப்பிள்ளை தமது பதிப்புரையில் சிவராஜபிள்ளை தமக்குச் செய்த நன்றியைப் பாராட்டிக் கூறிய பகுதியும், அவருடைய பெருமையைப் புலப்படுத்துகிறது. அது வருமாறு:

> "இப்பதிப்பிற்குச் சிறந்த ஆபாரணமாக விளங்கும் முன்னுரையையுதவியவர்கள் ஸ்ரீமான் கெ. என். சிவராஜ பிள்ளை யவர்கள். பிள்ளையவர்களோடொத்த கல்வியாளர் தமிழ் நாட்டில் மிகச் சிலரேயுள்ளார். இவர்களால் நூலாசிரியர்களது ஜீவிதசரித்திரம் ஒன்றுஆங்கிலத்தில் எழுதப்பட்டிருக்கின்றது. இதனையே இப்பதிப்பில் சேர்த்துக் கொள்ள எண்ணி அநுமதி பெற்றிருந்தேன். இதன் கையெழுத்துப் பிரதி, மலையாள பாஷையில் மொழிபெயர்த்தற் பொருட்டு

> ம-ா-ா ஸ்ரீ வித்வான் கிருஷ்ணபிள்ளையவர்களிடம், (அம்பலப் புழை எக்ஸைஸ் இன்ஸ்பெக்டர்) ஒப்புவிக்கப்பட்டிருந்தது. எனது பதிப்பிற்கு உபகாரமாகும்படி தம்மிடத்திருக்கும் பிரதியைச் சீக்கிரம் எனக்கு அனுப்புவதாகக் கிருஷ்ணபிள்ளையவர்கள் நேரில் உறுதி சொல்லியிருந்தார்கள். ஆனால், கடைசிவரை அப்பிரதி கிடைக்கவில்லை. பின்னர், வேறொரு முன்னுரை எழுதித்தர வேண்டுமென்று ஸ்ரீ சிவராஜபிள்ளையவர்களைக் கேட்டுக்கொண்டேன். பல்வேறு முயற்சிகளால் சாவகாசம் சிறிதுமில்லாத நிலையிலும், நான் விரும்பியபடி ஆராய்ச்சியுரை யொன்று மனமுவந்து எழுதியளித்தார்கள். இவர்களது மாறாத அன்பிற்கு நான் பெரிதுங் கடமைப்பட்டுள்ளேன்.''

இதனால் பிள்ளையவர்கள் எழுதியவை மறைந்தவிதமும், சோர்வின்று எழுதும் மாண்பும் நமக்குத் தெற்றெனப் புலனாகின்றன. இலக்கிய இலக்கணங்களையும் நன்குகற்றதோடு அவற்றை வரலாற்று நோக்குடன் பார்த்துச் சில அரிய கட்டுரைகளைத் தமது பத்திரிகையின் வாயிலாக வெளியிட்டு வந்தார் சிவராஜபிள்ளை. அந்த நாளில் அகில இந்தியாவில் பெயர்பெற்ற ஆங்கில எழுத்தாளர்களும் தமது கட்டுரைகளை இவருடைய பத்திரிகை வாயிலாக வெளியிட்டு வந்தனர். இலங்கையைச் சார்ந்த யாழ்ப்பாண அறிஞர் பொன்னம்பலம் பிள்ளை இராமாயணம் பற்றிய தமது ஆங்கிலத் தொடர் கட்டுரையை எழுதிவந்தார். அவர்தம் கட்டுரை அக்காலத்தில் பெரும் பரபரப்பை உண்டாக்கியது. 'இராவணன் ஆரியனா? திராவிடனா?' என்ற பிரச்சினை முதன்முதல் ஆரம்பிக்கப்பட்டது அவரால்தான்.

திருவனந்தபுரத்தில் சில முக்கிய நிகழ்ச்சிகள்

திருவிதாங்கூரில் படித்தவர்களின் இடையிலும் அரசாங்க அதிகாரிகளின் இடையிலும் சிவராஜபிள்ளை அவர்கள் தமது எழுத்து வன்மையால் ஒரு தனி மதிப்பையும், எழுத்து உலகில் ஓர் உன்னதமான நிலையையும் அடைந்தார். கனம் கிருஷ்ணா நாயர் திருவிதாங்கூர்த் திவானாக இருந்த காலத்தில், சிவராஜபிள்ளைக்குப் பெருஞ் செல்வாக்கு இருந்து வந்தது.

திருவனந்தபுரத்தில் 'Literary Club' என்பதின் சார்பாகப் பல அறிஞர்கள் ஒன்றுகூடித் தங்கள் கருத்துக்களை வெளியிட்டு வந்தனர். பேரறிஞர்கள் பலர் இந்தச் சங்கத்தில் அடிக்கடி உரை நிகழ்த்தினர். விவாதக் கருத்தரங்குகளும் நிகழ்வதுண்டு; ஆராய்ச்சிக் கட்டுரைகளும் படிக்கப்படுவதுண்டு.

ஒரு சமயம் இந்தச் சங்கத்தில் அப்பொழுது திவானாக இருந்த இராசகோபாலாச்சாரி தலைமையில் கூட்டம் ஒன்று நடைபெற்றது. இதில் Indian Social Idol என்னும் பொருள்பற்றிய கட்டுரை ஒன்றை சிவராஜபிள்ளை வாசித்தார். அக்கூட்டத்தில் வருணாசார தருமத்தை ஆதரித்து அன்றைய சீனியர் தேவசுவம் பேஷ்கார் ஸ்ரீ சுப்பிரமணிய

அய்யர் M. A., பேசினர். அவரது கருத்துக்களைப் பிள்ளையவர்கள் தக்கவகையில் விமர்சித்துப் பேசினர்கள். அதுமட்டுமின்றிப் பின்னர், "Indian Social Idol—a Review" என்ற தலைப்பில் சுமார் 200 பக்கங்கள் கொண்ட நூல் ஒன்றையும் எழுதி வெளியிட்டார். இதில் வருணசார தருமத்தை மிகக் கடுமையாக எதிர்த்ததோடு இது பிற்காலத்தில் இந்தியாவை எப்படி எப்படிப் பாதிக்கும் என்பதையும் தெளிவு படுத்தியுள்ளார். தமது கொள்கைகளுக்கு ஆதாரமாக உலக அறிஞர்களின் கருத்துரைகளைப் பலவாக எடுத்துத் தந்துள்ளார்.

திருவனந்தபுரத்தில் "Civic Rights League" என்ற அமைப்பு ஒன்று ஒன்று இருந்தது. இவ்வமைப்பின் முதல் மகாநாட்டின் வரவேற்புக் குழுத்தலைவராகத் சிவராஜபிள்ளை அவர்கள் பொறுப்பேற்று அரியதொரு சொற்பொழிவு நிகழ்த்தினர். இவர்தம் பேச்சை அகில இந்தியப் பத்திரிகைகள் முழுமையாக வெளியிட்டுப் பாராட்டி எழுதியிருந்தன.

கெய்க்குவார் பரோடா மகாராசா அவர்கள் 'Caste' — என்னும் பொருள்பற்றி ஆராய்ச்சி உரை எழுதுவார்க்கு 500 ரூபாய் பரிசு அளிக்கப்படும் என்று அறிவித்திருந்தார். இப்போட்டியில் இந்திய அறிஞர்களோடு உலக அறிஞர்களும்கூடக் கட்டுரைகளை அனுப்பி இருந்தனர். பிள்ளையவர்களும் அப்போட்டியில் கலந்து கொண்டார். அப்போட்டியில் முதற் பரிசும், பாராட்டும் பிள்ளையவர்கள் அடைந்தார். இதன் மூலம் இவரது பெயரும் புகழும் இந்தியா எங்கும் வெளிப்பட்டதோடு உலக அறிஞர்களிடையேயும் பரவலாயிற்று.

அமெரிக்காவிலுள்ள இலக்கிய சமூகப் பத்திரிகைகளில் சில இவர்தம் கட்டுரைகளைத் தாங்கி வெளிவந்தன. Monist என்ற அமெரிக்கத் திங்கள் இதழில் இவருடைய தத்துவக் கட்டுரைகள் பல தொடர்ந்து வெளிவந்தன. Indias objectives என்னும் பொருள்பற்றி இவர் ஐந்து பெரிய கட்டுரைகள் எழுதியிருந்தார். அவை ஒரு நூலாக அமைரிக்கப் புத்தக வெளியீட்டகம் ஒன்றின் வாயிலாக வெளிவந்துள்ளது. இக்கட்டுரைகளால் இவர் மகா மேதை என்று பாராட்டப்பட்டார்.

பிள்ளையவர்களின் எழுத்தாற்றலைக் குறித்து, திருவனந்தபுரம் P. S. நடராசபிள்ளையவர்கள் (இவர்கள் பேராசிரியர் சுந்தரம்பிள்ளையின் புதல்வர். திருவிதாங்கூர் சட்டசபையில் அங்கத்தவராகவும், அமைச்சராகவும் இருந்தவர்.) தாம் காலமாவதற்குச் சிலநாட்களுக்கு முன் சொன்னபோது, "அவருடைய அறிவின் ஆற்றலைப்பற்றி சொல்வதாயிருந்தால் இந்தியப் பேரறிஞர்களிலே அவர் ஒருவர். தமது வயதான காலத்திலும்கூட அவர் எழுதுவதில் தயங்கியது கிடையாது. அந்நாளில் அவர் எழுதி அச்சில் வராது போன தமிழ் ஆங்கில நூல்கள் பலவற்றை நான் அறிவேன். அவருடைய கட்டுரைகளுக்கு அமெரிக்கப் பத்திரிகைகளில் நல்ல வரவேற்பு இருந்தது" என்று அறிவித்தார்.

திருவனந்தபுர வாழ்க்கையில் இவருக்கு ஒருசில இடையூறுகளும் நேர்ந்தன. கூப்புக் குத்தகையில் பேரிழப்பு ஏற்பட்டது. அந்தப் புதிய துறையில் கருத்துச் செல்லவே, பத்திரிகை வெளிவருவது நின்றுவிட்டது. பத்திரிகைகள் நின்றுநின்று சில காலம் வெளிவந்தன. ஆயினும், முன்போலத் தக்க ஆதரவு அவற்றிற்கு வாய்க்கவில்லை. நட்டம் வரும் நிலையில் பத்திரிகையைத் தொடர்ந்து நடத்தவும் இயலவில்லை. இதனால், சிலகாலம் வாழ்க்கைக்கு வேண்டும் வருவாய் குன்றிச் சிரமநிலையில் குடும்பத்தை நடத்திச் செல்ல நேர்ந்தது. ஆகவே, அச்சுக்கூடம் முதலியவற்றையும், பிற சாமான்களையும் வீமனசேரிக் குடும்ப வீட்டிற்கு மாற்றிச் சிலகாலம் அங்கு வசிக்கவும் தலைப்பட்டார். அப்பொழுது வீமனசேரியில் பொது நூலகக் கட்டடம் ஊரார் முயற்சியால் கட்டச்செய்து, தாம் சேர்த்து வைத்திருந்த நூல்களையும் அந்நிலையத்திற்கு அளித்தார். வழக்கம் போல் படிப்பும் ஆராய்ச்சியும் இடையறாது நடைபெற்று வந்தன. மதுரைத் தமிழ்ச் சங்கத்திலிருந்து வெளிவரும் 'செந்தமிழ்'ப் பத்திரிகை வாயிலாக ஆராய்ச்சிக் கட்டுரைகளும், கவிதைகளும் வெளியிட்டு வரலாயினர்.

இலங்கையில் கம்பன் பணி

இந்த நிலையில் இலங்கை யாழ்ப்பாணத்தில் அப்பொழுது பிரபலராய் வாழ்ந்த சர் பொன்னம்பலம் இராமநாதன் அவர்களிடமிருந்து அழைப்பு ஒன்று பிள்ளையவர்களுக்குக் கிடைத்தது. இராமநாதன் கம்பராமாயணம் குறித்து ஆங்கிலத்தில் ஆய்வுரை ஒன்று எழுதியிருந்தனர். அதனைத் திருத்தமுற அமைத்து அச்சிடும் பணிக்காகப் பிள்ளையவர்கள் அழைக்கப்பெற்றனர். குடும்பத்திற்கு வேண்டும் பொருள் வருவாயை நினைந்து, அவ்வழைப்பினை ஏற்று, பிள்ளையவர்கள் தாம் மட்டும் இலங்கைக்குச் சென்றார். அங்கே சுமார் இரண்டு ஆண்டுகாலம் வதிந்து, தாம் ஏற்ற பணியைச் சிறப்புற நிறைவேற்றி, 1925ஆம் வருடம் தாய்நாடு திரும்பினர். பல வசதிகளை முன்னிட்டு நாகர்கோவிலில் வசித்து வரலானார்.

அக்காலத்தில் இவர் பாடிய 'மேகமாலை' என்னும் கவிதை நூலைப் பெற்றுத் திருநெல்வேலிப் புத்தக வியாபாரம் எஸ். முத்தையபிள்ளை அவர்கள் வெளியிட்டார். இந்நூல் 'நெல்லைச் செந்தமிழ் மாலை' வரிசையின் முதல் மலராகப் பூத்தது.

சென்னையில் தமிழ்ப்பணி

பேராசிரியர் எஸ். வையாபுரிப்பிள்ளை 1926-ஆம் ஆண்டு நவம்பரில் தமிழ் லெக்ஸிகன் பதிப்பாசிரியராகச் சென்னைக்கு வந்து சேர்ந்தார். அவர் மூலம் சிவராஜபிள்ளையின் ஆராய்ச்சிப் புலமை சென்னைப் பல்கலைக்கழகத்திலும் பலருக்குத் தெரியவந்தது. அப்பொழுது புதிதாகத் தொடங்கப்பட்டுள்ள தமிழாராய்ச்சித் துறைக்குத் தக்க ஒருவரைப் பல்கலைக் கழகம் நாடியது. பிள்ளையவர்களின் பணிகளை உணர்ந்த அதிகாரிகள் ஆராய்ச்சித்துறையில் பணிபுரியப் பிள்ளையவர்களை அழைத்தனர். இவரும் அதனை ஒப்புக்கொண்டு,

குடும்பத்துடன் சென்னைக்கு வந்தார். 1927-ல் ஸீனியர் லெக்சரராகப் பணியேற்றார். பின்னர் சில காலம் ரீடராகவும் இருந்தார். இவர் காலத்தில் அனவரத விநாயகம் பிள்ளை தமிழ் ஆராய்ச்சித்துறையில் ரீடராக இருந்தார். வேங்கடராஜுலு ரெட்டியார் (தமிழ்) அச்சுத மேனன் (மலையாளம்) முதலியோர் கீழ்த்திசை ஆராய்ச்சிப் பகுதியில் அந்நாளில் பணி புரிந்தவர்களாவர்.

இக்காலத்தில் சிவராஜபிள்ளை சங்க நூல்கள் குறித்தும், தமிழ்ச் சொற்கள் குறித்தும் முக்கியமாய் ஆராய்ந்து வந்தார். பல்கலைக் கழகத் தமிழ்ப் பாடப் புத்தகக் குழுவிலும், தமிழ்ப் பரீட்சைக் குழு முதலியவற்றிலும் உறுப்பினராயிருந்தார். அப்பொழுது பல்கலைக் கழகத்தில் ஆக்கப்பெற்றுவந்த லெக்ஸிகனின் கௌரவ உதவியாளராகவும் இருந்து, இயன்ற வரையில் உதவிவந்தார்.

1929-ல் ' உந்து என்னும் சொல்லாராய்ச்சி அல்லது புறநானூற்றின் பழமை' என்னும் ஆய்வு நூலைத் தமிழில் வெளியிட்டார். தமிழிலக்கியம் பற்றிய பல ஆய்வுக் குறிப்புக்களை அவ்வப்போது ஆங்கிலத்திலும் எழுதி வந்தார். தர்க்க ரீதியாக நடுநிலையுடன் பொருள்களை ஆராய்ந்து, தமது கருத்துக்களை அஞ்சாது வெளியிட்டு வந்தார். பிறருடைய கருத்துக்கள் குறித்தும் விருப்புவெறுப்பு இன்றித் தமது கருத்துக்களைத் துணிவுடன் எழுதிவந்தார்.

பல்கலைக் கழகத்தின் வழி, 'தமிழ் நாட்டில் அகத்தியர்' Agastya in the Tamil Land) என்னும் நூலை 1930-லும், பழந் தமிழரின் காலக் கணிப்பு (The chronology of the Early Tamils) என்னும் நூலை 1932-லும் வெளியிட்டார். இவ்விரு நூல்களும் ஆங்கிலத்தில் அமைந்த ஆராய்ச்சி உரைகளாம். பழந்தமிழர் காலக்கணிப்பு நூலின் பிற்சேர்க்கையாகத் தாம் அவ்வப்பொழுது ஆங்கிலத்தில் எழுதிவந்த ஆய்வுகளில் சிலவற்றையும் தொகுத்துத் தந்துள்ளார். இவர்தம் ஆய்வுரைகளில் கண்ட முடிவுகளுள் ஒருசில இக்காலத்தில் கிடைக்கும் புதிய சான்றுகளாலும் ஆய்வுகளாலும் மாறுபடினும், ஆய்வுரை எழுதும் முறைக்கு இவர்தம் நூல் சிறந்ததோர் எடுத்துக் காட்டு ஆகும்.

மீண்டும் ஊரில்

சென்னைப் பல்கலைக் கழகத்தினின்று 1934-ல் ஓய்வு பெற்றபின், நாகர்கோவிலுக்குக் குடும்பத்துடன் சென்று வசித்துவந்தார். அங்கே சிதம்பர நகரில் தேசிக விநாயகர் உயர்நிலைப் பள்ளியை அடுத்ததோரிடத்தில் தமக்கென ஒரு வீட்டைக் கட்டிக் கொண்டு ஆய்வுப் பணிகளைத் தொடர்ந்து செய்துவந்தார். அப்பொழுது ' ஜநமித்திரன் ' என்னும் தமிழ்ப் பத்திரிகையையும் தொடங்கிச் சில காலம் நடத்திவந்தார். தமது அந்திய காலத்தை அருங் கலை விநோதங்களில் போக்கினார். திருவிதாங்கூர்ப் பல்கலைக் கழகம் ஏற்பட்ட போது, அப் பல்கலைக்கழகத்தில் தமிழ்த்துறை வளம்பெற ஆவன

செய்தார். இவருடைய ஆய்வுக்குத் திருவிதாங்கூர் அரசாங்கமும் மாத ஊதியம் அளித்துவந்தது.

பிள்ளையின் வழித்தோன்றல்கள்

குழந்தைச் செல்வத்திலும் பிள்ளையவர்களுக்குக் குறைவு இல்லை. நாராயணன், இரத்தினசாமி என்ற இரு புதல்வர்களும், சரஸ்வதி, விஜயலட்சுமி என இரு புதல்வியரும் வாய்த்தனர். பிள்ளைகளுக்குப் பெற்றோர் செய்ய வேண்டும் உதவிகளையும் இவர் குறைவறச் செய்தார். இவருள் எல்லோருக்கும் மூத்தவர் நாராயணபிள்ளை; ரயில்வேயில் உத்தியோகம் பார்த்து இப்பொழுது ஓய்வு பெற்றுள்ளார்; பழனியில் வசித்து வருகிறார். இரண்டாவது புதல்வர் இரத்தினசாமி திருமணமான சில வருடங்களில் தாய்தந்தையரின் வாழ்நாளிலேயே மறைந்துவிட்டார். இது பிள்ளையவர்களின் ஓய்வு வாழ்க்கையில் பேரதிர்ச்சியைத் தந்த ஒரு நிகழ்ச்சியாகும். புதல்வியர்களைத் தக்க இடங்களில் வாழ்க்கைப்படுத்தினர். எல்லோருக்கும் சந்தானங்களும் உள. தந்தை வழியில் தமிழில் பெயர் சொல்லும் வாய்ப்பு இவர்களுள் மூத்த புதல்வியாகிய சரஸ்வதியம்மையாருக்கே வாய்த்தது. இவ்வம்மையார் இயல் இசை நாடகப் புலமையுடையார். தத்துவ சாஸ்திரத்தில் ஆழ்ந்த பயிற்சி யுடையார். இப்பொழுது துறவு வாழ்க்கையில் வாழ்ந்து வருகின்றார். பல ஆண்டுகளாகச் சென்னையில் உள்ள அகில இந்திய வானொலி நிலையத்தில் மாதர் பகுதியில் பணியாற்றி வந்தார். இவர்கள் தம் பேச்சாலும் எழுத்தாலும் தமிழுக்குப் பணிபுரியும் வாய்ப்புப் பெற்றது பரம்பரைப் பண்பின் தொடர்பேயாகும்.

பிள்ளையின் தமிழ்ப் பணி

நூல்களைக் கற்பதும் ஆய்வுகள் நிகழ்த்துவதும் பொழுது போக்காயிருந்தது போலவே, கவிபாடுவதும் பேராசிரியர் சிவராஜபிள்ளைக்குப் பொழுதுபோக்கு ஆகும். திருவனந்தபுரத்தில் வாழ்ந்த காலத்தில் சிற்சில கவிதைகளைப் பற்பல காலங்களில் பாடியுள்ளார். அவற்றுள் ஒரு சிலவற்றை அச்சிட்டதும் உண்டு. 'மேகமாலை' என்னும் சிறு கவிதைநூல் பற்றி முன்பே பார்த்தோம். 'நாஞ்சில் வெண்பா' என்னும் கவிதைத் தொகுதியைத் தாமே, நூல் வடிவில் அச்சில் வெளியிட்டனர் (1935). இங்ஙனமாக அச்சில் வெளிவந்தன மிகச் சிலவே.

அச்சில் வெளிவராது கையெழுத்துப் படிகளாகவே நின்று போனவை பல. அவற்றுள் ஒரு சிலவற்றை அன்பர்கள் விலைக்குப் பெற்று வெளிப்படுத்த முயன்றதும் உண்டு. இதில் ஒரு நிகழ்ச்சி முக்கியமாகக் குறிப்பிடத்தக்கது. திருநெல்வேலித் தென்னிந்திய சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகம் தோன்ற மூலகாரணமாக இருந்தவரும், நெடுநாட்களாக அதனை நிர்வகித்து நடத்திய வருமான வ. திருவரங்கம் பிள்ளை அவர்கள், சிவராஜபிள்ளையவர்கள் குறட்பாவில் பாடியுள்ள 'வாழ்க்கை நூலை' விலைக்குப் பெற்று

வெளியிடப் பெரிதும் முயன்றார். ஆனால் நூற் பிரதியைக் குறித்த ஒரு தொகைக்கு விற்பதைவிடத் தாமே அச்சிட்டு வெளிப்படுத்தினால் பலமடங்கு பொருள் வருவாய் நல்கும் என எண்ணி அவர்தம் வேண்டுகோளுக்கு அப்பொழுது பிள்ளையவர்கள் உடன்படவில்லை.

பின்னர், நோயும் சேரவே சற்றுச் சோர்வு ஏற்பட்டது. அதோடு இக்காலத்திற்போல அரசாங்கமோ செல்வர்களோ பொருளுதவவும் முன்வராத சூழ்நிலையில் அவர்கள்தம் எண்ணம் கடைசிவரையில் ஈடேறவில்லை. திருவிதாங்கூர் அரசாங்கத்திற்கான தமிழ்ப்பணி மட்டும் தொடர்ந்து நடைபெற்று வந்தது. 1941ஆம் ஆண்டு பிள்ளை அவர்கள் காலமான பின்னும் அந்நூல்களை வெளிப்படுத்த ஒருசில முயற்சிகள் நடைபெற்றதுண்டு. எனினும் அவை எக் காரணத்தாலோ தடைபட்டு நின்று போயின. இங்ஙனம் இவர்கள் விட்டுச் சென்றவற்றுள் கவிதை நூல்கள் பல; சொல்லாய்வுகள் பற்றிய உரைநடைகளும் சில உள. இவற்றை முறையே நோக்குவோம்.

வாழ்க்கை நூல்

கவிதை நூல்களில் பெரியவை குறட்பாவாலாகிய 'வாழ்க்கை நூலும்','கம்பராமாயணக் கௌஸ்துபம்' என்னும் கவிதைத் திறனாய்வு நூலும் ஆகும். 'வாழ்க்கை நூல்' பொதுவியல், இல்லொழுக்கவியல், தன்னொழுக்கவியல், சமுதாய வொழுக்கவியல், இயற்கையியல், ஒழிபியல் என ஆறு இயல்களையும், 160 அதிகாரங்களையும். 2118 குறட்பாக்களையும் கொண்டது. திருக்குறளிற்போல அதிகாரத்திற்குப் பத்துப் பாடல்கள் என்னும் வரையறையின்றிக் குறைந்தது ஐந்து முதல் கூடுதல் முப்பது வரையில் பல்வேறு எண்தொகைகளில் பாடல்களை ஆக்கியுள்ளார். அந்தந்த அதிகாரத்தின் பொருள் போக்கிற்கும் தம் கருத்திற்கும் ஏற்ப அதிகாரங்களில் பாடல்களின் எண்ணிக்கையை அமைத்துள்ளார்.

இந்த நூலின் பெயரைப் பின்னர் 'வாழ்க்கை வளாகம்' என்றும் ஒருசில இடங்களில் பிரதியில் குறித்துள்ளார். 'வளாகம் என்னும் சொல் 'பரப்பு', 'உலகம்', 'சூழ்விடம்', 'சோலை' முதலிய பல பொருள் தருவது. 'வாழ்க்கை வளாகம்' என்பதற்கு வாழ்க்கைச் சூழல் அல்லது வாழ்க்கைச் சோலை என்று பொருள் கொள்வது பொருத்தமாகும். மாந்தர்தம் வாழ்க்கைச் சூழலின் பற்பல கூறுகளையும் ஆசிரியர் தமது நுண்மாண்நுழை புலத்தால் நோக்கி நோக்கித் தமது கல்வி கேள்வியால் பெற்ற பேரனுபவத்தைக் கொண்டு ஆக்கியது இப்பெரு நூல். ஷேக்ஸ்பியர், ஷெல்லி, மில்டன் முதலிய மேனாட்டறிஞர் கருத்துக்களை உட்கொண்டும் அங்கங்கே சிற்சில பாடல்களை ஆக்கியுள்ளார். இது பற்றிய குறிப்பும் ஆசிரியர் கொடுத்துள்ளார் வள்ளுவப் பெருந்தகை வையத்துள் வாழ்வாங்கு மக்கள் வாழ வழி காட்டுவது போலக் குறட்பாவினால் அறம், பொருள், இன்பம், வீடு என்னும் உறுதிப்பொருள்களை விளங்கத் தருகிறது இந்த வாழ்க்கை நூல்.

கம்பராமாயணக் கௌஸ்துபம்

'கம்பராமாயணக் கௌஸ்துபம்' விருத்தப் பாவாலாகியது. இது கம்பனது பெருங்காவியத்திற்குக் கவிதையில் அமைந்த ஒரு விமர்சனநூல். முன்னுரைப் படலம், ஆக்கியோன் படலம், உவமைப் படலம், இயற்கை வருணனைப் படலம், கதை மக்கட் படலம், மெய்ப் பாட்டு வருணனைப் படலம், சொல், நடைவனப்புப் படலம், புலமைத்திறன் படலம், அறவுரைப் படலம், கவி இலக்கணப்படலம் எனப் பத்துப் படலங்களாகப் பாகுபடுத்தப் பெற்றது. நூலுள் அமைந்த செய்யுள் தொகை 422. உதாரணமாக எடுத்துச் சேர்த்துள்ள கம்பராமாயணப் பாடல்கள் 40. ஆக 462 பாடல்கள் இந் நூலில் உள. காரைக்குடியிலிருந்து முன்பு வெளிவந்த குமரன் பத்திரிகையின் 1927 ஆம் ஆண்டு வெளிவந்த ஆண்டுமடலில் முதல் 12 பாடல்கள் வெளிவந்தன. ஆகவே, 1927ஆம் ஆண்டே இந்நூலை ஆசிரியர் முற்றுவித்திருந்தார் என்பது தெரியவரும். பின்னர், இவற்றுள் முதல் 105 செய்யுட்கள் செந்தமிழ்ப் பத்திரிகை இருபத் தெட்டாம் தொகுதியில் மூன்று பகுதிகளாக வெளிவந்துள்ளன. அவற்றில் ஒருசில பாடங்களை ஆசிரியர் மாற்றித் திருத்தம் செய்தும் தமது மூலப்பிரதியில் வைத்துள்ளார். சிற்சில இடங்களில் கம்பர் வாக்குகளை வேற்றுமையின்றியும், ஒரு சில இடங்களில் சிறு மாறு பாட்டோடு கொண்டும் தமது விமர்சனக் கவிதைகளில் பயன்படுத்தியுள்ளார் ஆசிரியர். கம்பர் வாக்குகளை வேற்றுமையின்றித் தரும் பொழுது அவற்றை இரட்டைத் தலைப்புள்ளி (" ") அமைத்தும் (quotation marks) சிறிது வேறுபாட்டோடு தரும்பொழுது ஒற்றைத் தலைப்புள்ளியுள் (' ') அமைத்தும் குறியீடு செய்து தந்துள்ளார்.*

பிற நூல்கள்

இந்நூல்களையும் வேறு சிலவற்றையும் தனித்தனித் தொகுதிகளாகவும், ஒருசில சிறு கவிதைகளைச் 'சிறுநூற்றிரட்டை' என்னும் பெயருடனும் ஆசிரியர் வெளியிடக் கருதியிருந்தார் என்பது அவர் எழுதியுள்ள சிற்சில குறிப்புக்களால் தெரியவருகின்றன. தனி நூல்களாக ஆசிரியர் வெளியிடக் கருதிய கவிதைத் தொகுதிகள் வருமாறு: (1) இயற்கைப் பாவினமும் சில்லறைப்பாக்களும் (2) நாட்டுக் கண்ணிகளும் சந்தப்பாக்களும் (3) இசைப்பாட்டுக்கள் (தேசம், சமயம், ஒழுக்கம் இவற்றைக் குறித்தவை). இவற்றுள் முதல் இரண்டும் குழந்தைகளுக்கேற்ற கவிதைத் தொகுதிகளாம். இயற்கைப் பொருள்களின் அழகினை வியந்து பாடிய பாடல் முற்பகுதியிலும், பல்வகைப் பொருள்களைப் பற்றிய தனிப்பாக்கள் பிற்பகுதியிலுமாகப் பெற்றுள்ளன. இயற்கைப் பாவினமும் சில்லறைப் பாக்களும் என்னும் தொகுதி. நாட்டுப்பற்றையும் சுதந்திர ஆர்வத்தையும் ஊட்டத்தக்க பாடல்கள் நாட்டுக் கண்ணி

---

* இத்தமிழாய்வில் இந்நூல் முழுமையாய் முதன் முறையாக வெளிவருகிறது.

களில் உள்ளன. இசைப் பாட்டுத் தொகுதி முற்றும் கீர்த்தனைப் பாடல்கள். அவற்றிற்குரிய இராக, தாளக் குறிப்புக்கள் சந்த மெட்டுகள் ஆகியவற்றை ஆசிரியரே குறிப்பிட்டுள்ளார். இதனால் ஆசிரியர் இசைக்கலையையும் நன்கு தெரிந்தவர் என்பது புலனாகிறது.

சிறு நூற்றிரட்டை

'சிறு நூற்றிரட்டை' என்னும் தொகுப்பில் ஆசிரியர் ஐந்து கவிதைப் பகுதிகளைச் சேர்க்கக் கருதியிருந்தனர். அவையாவன: அருவியன்காதை, உலகவாழ்க்கை, இயற்கைநலம் அல்லது அழகு முப்பது, புதுஞானக்கட்டளை, மேகமாலை என்பன வாம். இவற்றுள் 'அருவியன்காதை' ஒரு கிரேக்கக் கவிதையினைத் தழுவிய சிறு காவியம். கால தேசத்திற்கேற்பச் சில மரபுகளும் இதில் கையாளப் பட்டிருக்கின்றன; விருத்தப் பாவில் அமைந்தது; 122 பாடல்கள் கொண்டது. 'உலக வாழ்க்கை' என்னும் கவிதை, 'உலகத்தொழிலை விண்டு சுயநலங்கருதல், உலகத்தொழிலைக் கொண்டு சுயநலங்கரு தல் ஆகிய இவ்விதக் குற்றங்களை நீக்கி, பொது நலம் கருதலே மேலான சுயநலம் கருதல் என்னும் அரிய உண்மையைக் கொண்டு யாவரும் ஒழுகத்தூண்டுவது. பேராசிரியர் சுந்தரம்பிள்ளை மனோன் மணீயத்துள் வகுத்த 'சிவகாமி சரிதை'யைப் போன்ற தாழிசை நடையில் உள்ளது. 'இயற்கை நலம் அல்லது அழகு முப்பது' இயற்கைப் பொருட் காட்சிகளைக் கண்டு வியந்து வருணிப்பது; சந்தநடை; விருத்தப்பாவாலாகியது. இது இயற்கை நலப் பெருமிதம், இயற்கை நலவின்பம், இயற்கை நலவொழுக்கம் என்னும் முப்பகுதி யாய் உள்ளது.

புதுஞானக் கட்டளை

'புது ஞானக் கட்டளை' என்பது கட்டளைக் கலிப்பா வாலாகியது. ஞானப் பொருளின் உண்மையை உலகவாழ்க்கையுடன் ஒப்பிட்டுப் பேசுவது. ஏற்கெனவே ஆசிரியரால் அச்சிடப்பெற்ற சிறு கவிதைகள் 'மேகமாலை', 'நாஞ்சில் வெண்பா' என்னும் இரண்டுமாம். இவற்றுள் மேகமாலை தமிழில் ஒரு புதுமுறைப் புனைவு. இது மேகத்தைப்பற்றிய இயற்கை வருணனைக் கவிதைகளைக் கொண்டது. ஒரு செய்யுளில்தானே உணர்ச்சி வேறுபாடுகளைக் குறிக்கப் பல சந்தங்கள் விரவிவரக் கவி இயற்றியுள்ளார். இந்த மேகமாலையில் ஐம்பது சந்தங்களை ஆசிரியர் மேற்கொண்டுள்ளார். இவற்றின் இசைப்போக்கும், பொருட்பொலிவும் கற்பார்க்குக் கழிபேருவகை தருவனவாம். தத்துவக் கருத்துக்களையும், முன்னோர் மொழி பொருள் உண்மைகளையும் இதன்கண் அங்கங்கே கொண்டு கூறும் திறம் வியந்து பாராட்டற்குரியது.

நாஞ்சில் வெண்பா

'நாஞ்சில் வெண்பா' 1935-ல் ஆசிரியரால் பதிப்பிடப் பெற்ற நூல்; 240 வெண்பாக்கள் கொண்டது; உரைக் குறிப்பும் நூலிறுதியில் சேர்க்கப்பட்டிருக்கிறது. இந்நூல் நாஞ்சில் நாட்டின் வளங்களையும்,

அங்கு வாழும் மக்களின் பழக்க வழக்கங்கள், சமூகநிலையங்கள் முதலியவற்றையும் விளக்கியுரைக்கின்றது. இதனை நாஞ்சில் நாட்டின் நில இயலும், சரித்திரமும், நாஞ்சில் மக்களின் வரலாறும், மக்களின் பழக்கவழக்கங்களும் கூறும் வரலாற்று நூல் என்று கூறுதல் மிகவும் பொருந்துவதாம். இந்நூல் குறித்துக் கவிமணி தேசிகவிநாயகம் பிள்ளை அவர்கள் பாடிய சாற்றுக் கவிகளாலும் இதன் சிறப்புக்கள் புலனாகும். அவை வருமாறு:

'செந்தமிழ் நங்கை திரைகொண்ட செல்வம் கை
வந்ததென உள்ளம் மகிழ்ந்தனளால் — முந்துமென்
நண்பா! சிவராஜ நாவலா! நின்நாஞ்சி
வெண்பாவைக் கேட்டு வியந்து.'

'முன்னைய நாஞ்சி முதுமகளிப் பாவணிந்த
பின்னை யொரு பேரிளம் பெண்ணானாள் — மன்னிரத
வாதியரின் ஆய்ந்த கவி வாணர் பெரிய ரென்று
ஓதுவதும் பொய்யுரை யாமோ?'

சில தமிழ்ச்சொல் ஆராய்ச்சி

சிவராஜ பிள்ளை நூலாராய்ச்சியும், பண்டை வரலாற்று ஆராய்ச்சி யும் செய்து, பற்பல புதுக் கருத்துக்களைத் தெளிந்து கூறியதோடு, சொற்பொருள் ஆராய்ச்சியிலும் பெரிதும் நாட்டம் செலுத்தி வந்துள்ளார் என்று தெரியவருகிறது. சொல்லாய்வுக்காக இவர் எழுதி வைத்துள்ள பற்பல குறிப்புகள் உள்ளன. முக்கியமாக, 'சில தமிழ்ச் சொல்லாராய்ச்சி' என்னும் தலைப்பின்கீழ் புறநானூற்றுப் பாடல்களில் பயின்ற ஒருசில சொற்பொருள்கள்பற்றி ஆராய்ந்து விளக்கம் தந்துள்ளார். சொற்களுக்குப் பண்டை உரையாசிரியர் தரும் பொருள், பதிப்பாசிரியர் குறிப்பு முதலியவற்றைச் சங்க இலக்கியப் பிரயோகங்களுடன் ஒப்பு நோக்கி ஆராய்ந்து, பொருள் வரையறை செய்கின்றார். சங்க இலக்கியச் சொற்களுக்கு எவ்வெம் முறைகளைப் பின்பற்றிப் பொருள் காண வேண்டும் என்னும் முறை யினை வகுத்துக் காட்டுகின்றன இவ்வுரைகள். தமிழ் பயில்வார்க்கும் ஆராய்ச்சியாளர்க்கும் முன்னோடியான ஒரு துணைநூல் இது என்ன லாம். இந்தச் சொல்லாராய்ச்சி நூலில் ஒருசிலவிடத்துச் சில உரிச் சொற்களின் பொருள் விரிவை 'எனது தொல்காப்பிய உரிச்சொல்லா ராய்ச்சியிற் காண்க' என்று குறிப்பிட்டுள்ளார்கள். ஆகவே தொல் காப்பிய உரிச்சொற்கள் பற்றியும் இவர் சிறந்ததோர் ஆராய்ச்சியுரை எழுதியிருந்தார்கள் என்று தெரிகிறது. ஆனால், இப்பிரதி இப்பொழுது கிடைத்திலது. இந்த ஆராய்ச்சி உரை இவர் பல்கலைக்கழகத்தில் பணியாற்றிய நாளில் எழுதப்பட்டு அச்சில் வெளியிடுவதற்காகப் பல்கலைக்கழகத்தாரிடம் ஒப்படைக்கப்பட்டிருக்கவேண்டும் என்று எண்ணுவதற்கு இடமாயுள்ளது. 'சில தமிழ்ச் சொல்லாராய்ச்சி' என்னும் இந்த உரை நடைநூல் சென்னையில் உள்ள பேராசிரியர் சிவராஜபிள்ளை நினைவு மன்றத்தாரால் 1968ஆம் ஆண்டு வெளி யிடப்பட்டது.

நிறைவுரை

இங்ஙனமாக, சிவராஜபிள்ளை திருவனந்தபுரத்தில் பேராசிரியர் சுந்தரம்பிள்ளையை அடுத்த நாளிலிருந்து, தமது ஆயுட்காலம் பூராவும் ஆய்ந்து கற்று எழுதியவற்றுள் பற்பல பல்வேறு ஏதுக்களால் மறைய நேர்ந்தன என்பது குறித்து முன்பும் கண்டோம். போனதுபோக இப்பொழுது கிடைக்கப் பெற்றிக்கும் கையெழுத்துப் பிரதிகள் அச்சிடப் பெறுமாயின் அவை என்றும் நிலைத்துத் தமிழுலகிற்குப் பயன்பட்டு வரும். இதில் வெற்றிகிட்ட ஆண்டவன் அருள் பாலிப்பானாக! தமிழன்னை முன்நின்று இதனை முற்றுவித்து வெற்றி நல்குவாளாக! பேராசிரியர் சிவராஜபிள்ளையவர்களின் பெயரும் தமிழன்னையின் தவப்புதல்வர்கள் வரிசையில் என்றும் நிலைபெற்று விளங்குவதாக!

2. கே. என். சிவராஜ பிள்ளையின் மதிநலம்

டாக்டர் சி. பாலசுப்பிரமணியன்
எம். ஏ., எம். லிட்., பிஎச். டி.,
தமிழ்த்துறைப் பேராசிரியர்—தலைவர்,
சென்னைப் பல்கலைக்கழகம்,
சென்னை—600 005.

முன்னுரை

நாஞ்சில் நாடு தந்த நன்மக்களுள் ஒருவர் கெ. என். சிவராஜ பிள்ளை. காவல்துறையில் தம் பணியைத் தொடங்கிய இவர் பத்திரிகையாளராய்ச் சிறந்து, சென்னைப் பல்கலைக்கழகத் தமிழ்த் துறையின் தலைவராக உயர்ந்தார். 1927 முதல் 1936ஆம் ஆண்டுவரை (ஒன்பது ஆண்டுகள்) இவர் தமிழ்த்துறையில் இருந்தகாலை இவரது மதிநலம் ஒளிநலம் காட்டிற்று. இவர் தமிழ்த்துறையில் பணியாற்றிய காலத்தில் எழுதிப் பல்கலைக்கழக வெளியீடாக வெளிவந்த நூல்களே ('உந்து' என்னும் இடைச்சொற் பிரயோகம் அல்லது புறநானூற்றின் பழமை—1929; தமிழ்நாட்டில் அகத்தியர்—Agastya in the Tamil land—1930; பழந்தமிழரின் காலவரிசை—The Chronology of Early Tamils—1932) இவர்தம் நுண்மாண் நுழைபுலத்தையும், பரந்துபட்ட உலக அறிவையும் காட்டி, இவரை அறிஞர் எனத் தமிழ்கூறு நல்லுலகிற்கே காட்டின. 1968 ஆம் ஆண்டு கெ. என் சிவராஜ பிள்ளை நினைவுமன்றத்தாரால் (சென்னை) வெளியிடப்பட்டுள்ள 'சில தமிழ்ச்சொல் ஆராய்ச்சி' என்னும் நூல் இவருடைய சங்க இலக்கியப் புலமைக்குச் சான்று பகரும்.

'நாஞ்சில் நேசன்', 'மலபார் குவார்டர்லி ரிவ்யூ' (Malabr Quarterly Review) போன்ற இதழ்களின் ஆசிரியராய் இருந்து பல்வேறு ஆய்வுக்கட்டுரைகளை எழுதிப் பெருமை பெற்ற இவர், 'மதம்' என்னும் பொருள் பற்றிச் சிறந்த கட்டுரையினை எழுதிப் பரோடா மன்னரிடம் ஐந்நூறு ரூபாய் பரிசிலும் பாராட்டும் பெற்றார். 'மானிஸ்ட்' (Monist) என்ற அமெரிக்கத் திங்கள் இதழில் தத்துவக் கட்டுரைகளை எழுதி வந்த இவர், 'இந்தியாவின் குறிக்கோள்' (India's Objectives) என்னும் பொருள்பற்றி ஐந்து கட்டுரைகளை எழுதினார். இவர்தம் மதிநலம் சிறப்புறும் ஆய்வுக் கட்டுரைகளால் இவர் "மகாமேதை" எனப் புகழப்பட்டார். மனோன்மணீயம் சுந்தரம் பிள்ளை, கவிமணி தேசிக

விநாயகம் பிள்ளை, பண்டித முத்துசாமிப்பிள்ளை, தி. இலக்குமணப் பிள்ளை, எஸ். வையாபுரிப்பிள்ளை போன்ற பெருமக்களுடன் இவர் கொண்டிருந்த நெருங்கிய தொடர்பும், இலக்கிய ஆய்வும் இவரை ஆராய்ச்சிப் பேரறிஞராக உருவாக்கியது. தம் மதிநலம் துலங்கும் வண்ணம் ஆராய்ச்சி நூல்களை எழுதிய கெ. என். சிவராஜ பிள்ளை அவர்கள் சிறந்த கவிஞராகவும், கட்டுரையாளராகவும், பேச்சாளராகவும் விளங்கினர். எல்லாத் துறையிலும் தம் மதிநலம் காட்டி ஒளி வீசிய பிள்ளை அவர்களை அவர்தம் ஆராய்ச்சி நூல்களே குன்றிலிட்ட விளக்காய் உலகிற்குக் காட்டின.

புறநானூற்றின் பழமை

'உந்து என்னும் இடைச்சொற் பிரயோகம் அல்லது புறநானூற்றின் பழமை' என்னும் நூலில் ஆசிரியர் 'உந்தீற்று'ச் சொல்லின் பழமையை உறுதி செய்து, பின்னர்ப் புறநானூற்றின் பழமையை நிலை நாட்டுகிருர். உந்தீற்றுச் சொல்லினை ஆராய்கின்றபொழுது வினைமுற்று, உந்தீற்று வினைச்சொற்கள், புறநானூற்றில் உந்து விகுதி வருகை, உந்தீற்றுச் சொற்கள் வழக்கிழந்த நிலை, உந்தீற்றுச் சொல் பற்றித் தொல்காப்பியர் நன்னூலார் கருத்து, திராவிட மொழிகளில் உந்தீற்றுச் சொற்களின் நிலை, பண்டைத் தமிழ் இலக்கியத்தில் உந்து பயின்று வருதல், உந்து விகுதி உற்பத்தி என்பன போன்ற பல்வேறு நிலைகளில் ஆசிரியர் உந்தீற்றுச் சொல்லின் பழமையை ஆராய்கின்ற பொழுது அவருடைய பரந்துபட்ட சங்கநூற் புலமையை அறிய முடிகிறது.

சங்கத் தமிழ் மொழியில் திணை, பால், இடம் சுட்டாத வினைமுற்று விகுதி உண்டு என்றும், அவ் வினைமுற்று விகுதி 'உந்து' என்றும் புறநானூற்றிலிருந்து சான்று காட்டுகிருர். புறநானூற்றிலடங்கிய 400 பாடல்களில் ஏழு புலவர்களால் பாடப்பட்ட பத்துப் பாடல்களிலும், புலவர் பெயர் தெரியாத ஒரு பாடலிலும் 'உந்து' பயன்படுத்தப்பட்டிருப்பதைச் சான்று காட்டி, புறநானூற்றின் பழமையை நிலைநிறுத்துகிருர் ஆசிரியர். உந்தீற்றுச் சொற்கள் பெயரெச்சமா அன்றி வினைமுற்ரு என்பதற்குப் புறநானூற்றிற்கு உரை எழுதிய உரையாசிரியர்களின் கருத்தை மறுத்து வினைமுற்று என்று கொள்வதும், தொல்காப்பியர் உந்தீற்று வினைமுற்றிற்குச் சூத்திரம் யாண்டும் கூறவில்லை என்று அதற்குக் காரணமும் கூறி, அதனுல் தொல்காப்பியம் உந்தீற்றுச் சொற்கள் கையாளப்பட்ட புறநானூற்றிற்குப் பிற்பட்டது என்று கூறுவதும் கருதத்தக்கன.

உந்தீற்றுச் சொற்கள் தமிழ்மொழியில் பயின்றுவரும் நிலை பற்றி ஆராய்வதோடு அமையாது மலையாளம், தெலுங்கு, கன்னடம் போன்ற திராவிட மொழிகளில் பயின்று வருவதையும் எடுத்துக் காட்டி நிறுவுவது அவர்தம் பன்மொழிப்புலமையைக் காட்டும்.

நிகழ்கால வினைமுற்று

தமிழ்	கன்னடம்	தெலுங்கு
நான் போகிறேன்	நானுது ஹோகுத்தேனே	நேனு போவுத் சுன்னனு
நாங்கள் போகிறோம்	நானுது ஹோகுத்தேவே	மேமு போவுத் சுன்னமு

நிகழ்கால வினையெச்சம்

தமிழ்	கன்னடம்	தெலுங்கு
போக (going)	ஹோகுத்த	போவுத்சு
கட்ட (tying)	கட்டுத்த	கட்டுத்சு

''இவ்விதம் உந்துருவைக் காட்டத்தகும் நிகழ்கால வினையெச்சம் தமிழில் இல்லாது போயினும், ஏனைய திராவிட மொழிகள் அதனைப் பெற்று நிற்கின்றன'' எனச் சான்று காட்டி நிறுவி, அதன் பழமையை நிலைநாட்டும் ஆசிரியர் மதிநலம் மதிக்கத்தக்கது.

கோவூர்கிழார், பரணர் ஆகிய ஏழு புலவர்களின் செய்யுள், சொல் நடை, பொருள்போக்கு, கோவூர்கிழாரின் சமகாலப் புலவர்களின் காலம் இவற்றைக் கொண்டு புறநானூறு தொல்காப்பியத்திற்கு முந்தியது என்ற கருத்திற்கு வருகிறார் ஆசிரியர். ஆய்வு முடிவு எப்படி இருப்பினும் ஆய்வுப் போக்கு அவர்தம் புலமையைக் காட்டுவதாயுளது.

1. ஆரியம் கலவாத் தனித்தமிழ்ச் சொற்களால் யாக்கப்பட்ட செய்யுட்கள்.
2. ஆரியச் சொற்கள் உருமாறிக் கலந்த தமிழ்ச் சொற்களால் யாக்கப்பட்டவை.
3. ஆரியச்சொல் உருவ வேறுபாடுறாது கலந்த தமிழ்ச் சொற்களால் யாக்கப்பட்டவை.

என மூன்று பிரிவுகளாகப் பண்டைத்தமிழ் இலக்கியங்களைப் பகுத்துக் கொண்டு மூன்றாவது பிரிவில் புறநானூறு அடங்கவில்லை எனக் காரணம் காட்டிப் புறநானூற்றின் பழமையைச் சுட்டுவது அருமை.

தமிழ் மண்ணில் அகத்தியர்

அகத்தியர்பற்றிக் கூறப்படும் கதைகளுக்கிடையே உள்ள முரண்பாடுகளைச் சுட்டிக்காட்டி, அகத்தியர் ஒருவரா, பலரா என்பதற்கு விடை காணும் நிலையில் எழுதப்பட்டதே தமிழ்நாட்டில் அகத்தியர் என்னும் நூல். அகத்தியர் பிறப்பு ஐயப்பாட்டிற்குரிய தென்றும், குடமுனி, கலசயன், கலசீசுதன், கும்பயோனி, கும்பசம்பவன், கடோத்பவன் போன்ற அகத்தியரின் மறுபெயர்களை

ஆராய்ந்து, இவர்தம் பிறப்பு இயற்கைக்கு மாறுனது எனக் கூறுகிருர். அகத்தியர் இமயமலேயில் வாழ்ந்து இருக்குவேதம் மற்றும் சில மருத்துவ நூல்களை எழுதினர் என ஆரியரும், பொதிய மலேயில் தங்கித் தமிழ் இலக்கண, மருத்துவ நூல்களை எழுதினர் எனத் திராவிடரும் கூறும் புனைகதைகளை எடுத்துக்காட்டி, இவற்றிற்கிடையே யுள்ள முரண்பாடுகளைச் சுட்டிக்காட்டுவது அவர்தம் ஒப்பியலறிவை யும் வடநூல் அறிவையும் ஒருங்கே புலப்படுத்துவதாயுளது.

பண்டார்கரின் 'தென்னகத் தொடக்க வரலாறு' (Early History of Deccan) மாக்ஸ்முல்லரின் 'பண்டைய சமஸ்கிருத இலக்கிய வரலாறு' (History of Ancient Sanskrit Literature) வாஸ்பர்ன் ஹாப்ஹின்ஸின் 'இந்தியாவின் பெருங்காப்பியம்' (The Great epic of India) ஆகிய வரலாற்று நூல்களைச் சான்றுகாட்டி அகத்தியர் வாழ்ந்த காலத்தின் முரண்பாட்டைச் சுட்டிக்காட்டுவது இவர்தம் வரலாற்றறி வினைத் தெள்ளிதின் காட்டுகின்றது.

ஆரியர் வருகைக்குப் பின்னரே தமிழ் நிலத்தார் அகத்தியர் கதையை அறிந்திருந்தனர் என்பதற்குச் சான்ருகத் திருஞானசம் பந்தர் தேவாரம், திருநாவுக்கரசர் தேவாரம், திருவிளையாடற்புராணம், காஞ்சிப் புராணம், சீகாளத்திப் புராணம், தாண்டவராய சுவாமிகள் பாடல் முதலியவற்றைச் சான்றுகள் காட்டி நிறுவுவது இவர்தம் பரந்துபட்ட தமிழ் இலக்கிய அறிவை வெளிப்படுத்துகின்றது. அகத்தியர் பார்ப்பன ஆரிய இனத்தைச் சேர்ந்தவராயிருத்தல் கூடும் எனக் காரிகிழார், நெட்டிமையார், ஆலத்தூர் கிழார், தாமப்பல் கண்ணனர் ஆகிய புலவர்களின் புறநானூற்றுப் பாடலே வைத்துக் கொண்டு முடிவு செய்கிருர். வால்மீகி இராமாயணத்தில் கூறப்படும் அகத்தியர் கதையின் முரண்பாட்டையும், தொல்காப்பியனும், பனம்பாரனும் அகத்தியரைக் குறிக்காமல் விட்டதையும் சுட்டிக் காட்டிச் சிந்தனையைத் தூண்டுகிருர். அகத்தியர் எழுதியதாகக் கூறப்படும் 'ஊழிக்காற்றுச் சூத்திரம்', 'அகத்தியர் பூரண சூத்திரம் இருநூற்றுப் பதினறு', அகத்தியர் கலைஞான சூத்திரம் ஆயிரத்து இருநூறு','அகத்தியர் வைத்திய நூறு', 'அகத்தியர் எட்டு','அகத்தியர் சூத்திரம் இருநூற்றுப்பத்து', 'அகத்தியர் தீக்ஷாவிதி', 'அகத்தியர் வைத்தியம் பதினறு' போன்ற நூல்களின் சூத்திரங்களைச் சான்று காட்டி இவை ஒரு கற்றறிந்த முனிவரால் எழுதப்பட்டவை அல்ல என்று மறுக்கிருர். மேலும், அகத்தியர் எழுத்து, மொழி, கூற்று ஆகியவற்றை வகைப்படுத்தும் முறையையும், எழுத்துக்களின் பால் தன்மையை,

"குறிலாண் பாலு நெடில்பெண் பாலுமாம்"

"ஆயுதமும் மெய்யு மலியெனப் படுமே" (பக். 40)

என்று வகைப்படுத்துவதோடு, எழுத்துக்களை 'அமிர்தவெழுத்து', 'நஞ்செழுத்து' என்று பாகுபாடு செய்வதையும் நையாண்டி செய் கிருர் ஆசிரியர்.

"ஐந்தொழி யெழுத்தெலாம் வடவெழுத் தாகும்" (பக். 41)

என்ற நூற்பாவைச் சான்று காட்டி இவையெல்லாம் தமிழ்ப்பற்று மிக்க ஒரு முனிவரால் எழுதப்பட்டவை அல்ல என நிறுவுவது இவர் தம் நுண்மாண் நுழைபுலத்தைக் காட்டுகிறது.

பன்னிருபடலப் பாயிரம், புறப்பொருள் வெண்பாமாலைப் பாயிரம், அகப்பொருள் விளக்கப் பாயிரம், திவாகரம் போன்றவற்றி லிருந்து அகத்தியர்பற்றிய குறிப்புகளும், கந்தபுராணம், காசிக் காண்டம், திருக்குற்றலப் புராணம், திருவேங்கடத்தலபுராணம், திருநெல்வேலித் தல புராணம், குடந்தைப் புராணம், மயிலைப் புராணம், வேதாரணியப் புராணம் போன்றவற்றில் அகத்தியர் வரலாறு எந்த அளவிற்குக் கதைகளில் உருவாக்கப்பட்டுள்ளது என்றெல்லாம் சான்றுகள் காட்டி ஆசிரியர் நிறுவுவது அவர்தம் பரந்துபட்ட தமிழ் இலக்கியப் புலமைக்குச் சான்று பகரும்.

ஆரியப் பண்பாட்டைப் பரப்ப அகத்தியர் பலர் இருந்திருக்க வேண்டும் என்று கருதி இருக்குவேத அகத்தியர், இராமாயண அகத்தியர் இவர்களைத் தவிரக் கர்நாடகம், இந்தோனிசியத் தீவுகள், தமிழகம், கம்போடியா இவைகளை ஆரிய மயமாக்கப் புறப்பட்ட நான்கு அகத்தியர்கள் இருந்திருக்க வேண்டும் என்று ஆசிரியர் கருதுவது கருதத்தக்கது.

அகத்தியரைப் பற்றி ஆய்வு செய்யத் தொடங்கிய ஆசிரியர் அகத்தியர் பற்றிக் கூறப்படும் இலக்கியச் சான்றுகளையும், வரலாற்றுச் சான்றுகளையும், புராண இதிகாசச் சான்றுகளையும் ஒப்பு நோக்கி, அகத்தியர் பற்றிய பல்வேறு கருத்துகளில் உள்ள முரண் பாடுகளைச் சுட்டிக்காட்டி, அகத்தியர் பலர் என நிறுவுவது அவர்தம் மதிநல மாண்பினைக் காட்டும்.

பண்டைத் தமிழர்களின் காலவரிசை முறை

சங்க இலக்கியத்தின் பெற்றியைப் பேசுவதற்கு எழுதப்பட்ட நூலே இவர்படைத்த பண்டைத் தமிழர்களின் காலவரிசை என்னும் நூல். பழந் தமிழர்களின் வரலாற்றை எழுதப் புகுவோர் சங்க இலக்கியங்களைச் சான்ருகக் கொள்ளாது தம் மனம் போன போக்கில் வரலாறு எழுதத் துணிகின்றனர் எனக் கருதிய ஆசிரியர், சங்க இலக்கியங்களில் கூறப்பட்டுள்ள செய்திகள் உண்மையானவை எனக் கூறி, அவற்றைச் சான்ருக வைத்துத் தமிழர்தம் வரலாற்றை உள்ளவாறு ஆராய்கிருர்.

நான்கு பெருந்தலைப்புகளில், எண்பத்தேழு உள்தலைப்புகளிட்டு தமிழர்தம் வரலாற்றை ஆராய்கிருர் ஆசிரியர். வரலாற்றுக் காலத் திற்கு முற்பட்ட திராவிடர்கள், அவர்தம் பண்பாடு முதலியவற்றை யும் ஆராய்கிருர். சங்க இலக்கியம் பற்றியும் குறிப்பிடும்பொழுது இயற்கையைக் கூறும் பிரிவில் எட்டுத் தொகையையும், பத்துப் பாட்டையும், நீதியைக் கூறும் பிரிவில் பதினெண் கீழ்க்கணக்கையும் அடக்குகிருர். சங்கம் என்னும் அமைப்பு தமிழகத்தில் இருந்திருக்க

முடியாது என்பதற்குப் பத்துக் காரணங்களைக் காட்டி மறுப்பது ஆசிரியர்தம் நுண்ணறிவினைக் காட்டும். சங்க நூல்களின் தொகுப்புப்பற்றி ஆசிரியர் கூறும் பல கருத்துகள் ஏற்புடையன.

1. இயற்கையைக் கூறும் எட்டுக்தொகை, பத்துப்பாட்டு என்பன உண்மையான சங்க இலக்கியம்.

2. எட்டுத்தொகை நூல்களுள் அகநானூறு, புறநானூறு, நற்றிணை, குறுந்தொகை, ஐங்குறுநூறு என்னும் ஐந்து தொகுதிகளுக்கு மட்டும் காப்புச் செய்யுள் பாடிய பாரதம் பாடிய பெருந்தேவனாரே இந்நூல்களைத் தொகுத்திருக்கலாம்.

3. கலித்தொகையைத் தொகுத்த நல்லந்துவனாரே கலித்தொகையை இயற்றியிருக்க வேண்டும்.

4. பரிபாடல், ஐங்குறுநூறு இரண்டும் பிற்காலத்தில் எழுதப்பட்ட நூல்கள்.

5. குறுந்தொகை, நற்றிணை, அகநானூறு ஆகிய நூல்கள் பொருளாலும், பாவாலும், அளவாலும் தொகுக்கப்பட்டிருத்தலால் ஒரே காலத்தில் ஒரே பதிப்பாளரால் தொகுக்கப்பட்டிருக்க வேண்டும் என்பன போன்ற பல்வேறு கருத்துகள் ஆசிரியர்தம் ஆழ்ந்த புலமைக்குச் சான்று பகருகின்றன.

சங்க இலக்கியத்தை முதல் தரச்சான்றுகள், இரண்டாந்தரச் சான்றுகள் எனப் பகுத்துக்கொண்டு, பழந்தமிழகத்தில் ஆட்சிபுரிந்த சேர,சோழ, பாண்டிய அரசர்கள், குறுநில மன்னர்கள் ஆகியோரைப் பற்றி ஆராய்கிறார்.

சங்க இலக்கியத்தில் குறிப்பிடப்பெறும் மன்னர்களைப் பத்துத் தலைமுறையாக வரிசைப்படுத்தி, ஒவ்வொரு தலைமுறையிலும் வாழ்ந்த சேர, சோழ, பாண்டிய மன்னர்களையும், குறுநில மன்னர்களையும் சங்க இலக்கியச் சான்று கொண்டு நிறுவுகிறார். முதல் தலைமுறையைப் பற்றிக் கூறும்பொழுது வெளியன்தித்தன் என்னும் சோழ மன்னன் அரசாண்டான் எனவும், இவனே சோழப் பேரரசை நிறுவினான் எனவும், உறையூர்மீது போர் தொடுத்து அதைக் கைப்பற்றினான் எனவும், நற்றிணை, குறுந்தொகை நூல்களிலிருந்து சான்றுகள் காட்டி நிறுவுகிறார். அழிசி என்னும் குறுநில மன்னன் இத் தலைமுறையில் குறிப்பிடப் பெறுகிறான். சேர, பாண்டிய மன்னர்களைப் பற்றி இத்தலைமுறையில் கூறுவதற்குச் சான்றுகள் இல்லையெனினும் கொற்கையைத் தலைநகராகக்கொண்டு பாண்டியர்கள் ஆண்டனர் என்று கூறுவதற்குச் சான்றுகள் உண்டு எனக் கூறுகிறார். சோழ மன்னன் கோச்செங்கணான், சேரமன்னன் கணைக்காலிரும்பொறை ஆகியோர் பத்தாவது தலைமுறையினராகக் குறிப்பிடப்பட்டுள்ளனர்.

பத்துத் தலைமுறையினரின் காலத்தை ஆராய்கின்றபொழுது, பெரிப்புளூஸ், தாலமி, போன்றோரின் கருத்துகளுடன் ஒப்புநோக்கி,

பத்துத் தலைமுறையினரின் காலம் கி. மு. 50 முதல் கி. பி. 200 வரை என முடிவு செய்கிறார். பந்தமிழ் மன்னர்களின் காலம், கி. மு. 50 முதல் கி. பி. 200 வரை என்ற இவரது முடிவிற்கு அறிஞர்களி டையே கருத்து வேறுபாடு இருப்பினும் இவர்தம் ஆய்வுப் போக்கு பாராட்டிற்குரியது. இலக்கியங்களை முதலில் கால வரிசைப்படி பகுத்துக்கொண்டு, பின்னர் அவ்விலக்கியங்களை முதல்தரச் சான்று கள், இரண்டாந்தரச் சான்றுகள் என மேலும் பகுத்துக் கொண்டு, தம் கருத்தோடு தொடர்புடைய பிற கருத்துகளையும் ஆராய்ந்து, வரலாற்று அறிஞர்களின் குறிப்புகளையும் ஆராய்ந்து, மாறுபட்ட கருத்துகளைச் சான்றுகளுடன் மறுத்து, ஆய்வுக்கு எடுத்துக் கொண்ட பொருளை வகை தொகை செய்து வளம் காணும் ஆசிரியர் தம் மதிநலம் மாட்சிமைக்குரியது.

பொருள்காணும் புலமை நோக்கு

புறநானூற்றுச் செய்யுளில் உள்ள சில சொற்களுக்கும், தொடர் களுக்கும் பண்டையுரையாசிரியர்களும் டாக்டர் உ. வே. சாமிநாதை யரும் சரியான பொருளைக் கூறாது விட்டனர் எனக் கருதி அச்சொற் களுக்கு உண்மைப்பொருளைச், சான்றுகளுடன் காணும் நோக்கில் எழுதப்பட்டதே ஆசிரியரின் 'சில தமிழ்ச்சொல் ஆராய்ச்சி' என்னும் நூல். இந்நூலில் எழுபத்தொன்பது சொற்களையும், தொடர்களையும் குறித்துப் பொருள் ஆராய்ச்சி செய்கிறார் ஆசிரியர். 'பறைந்தன' என்பதற்கு 'தேய்தல்' என்று உரையாசிரியர் பொருள் கூறியதனை மறுத்து அகநானூறு, புறநானூறு, தேவாரம் ஆகியவற்றிலிருந்து சான்று காட்டி 'நீங்குதல்' என்னும் பொருள் தருகிறார். 'உன்னமரம்' என்பதற்கு 'உன்னம்-இலவ மரமென்பது மலைநாட்டு வழக்கு' என்று டாக்டர் உ. வே. சாமிநாதையர் தந்த குறிப்புரையினை மறுத்துப் பதிற்றுப்பத்து, பாலைக்கலி, ஐங்குறுநூறு ஆகியவற்றிலிருந்து மேற் கோள் தந்து, 'உன்னமரம் வேறு, இலவமரம் வேறு' என்று நிலை நாட்டுகிறார். இதுபோன்றே அனைத்துச் சொற்களுக்கும் அகராதி, நிகண்டு, தமிழ் இலக்கியங்கள் இவற்றிலிருந்து சான்று காட்டி உண்மைப் பொருளை நிலைநாட்டுகிறார். ஒரு சொல்லின் உண்மைப் பொருளைப் காண்பதற்கு அச்சொல் பயின்றுவரும் இலக்கியங்களைச் சான்று காட்டி, அப்பொருளோடு தொடர்புடையவற்றையும் விளக்கி, முரண்பாட்டையும் சுட்டி, தாம் எடுத்துக்கொண்ட சொல் லின் பழைய பொருள் எது என்றும், புலவர் எப்பொருளை மனத்தில் கொண்டு செய்யுளைப் படைத்திருப்பார் என்றும், இடப் பொருண்மை நோக்கி எப்பொருளைச் சுட்டவேண்டும் என்றும் ஆழ்ந்து நோக்கிச் சிந்தித்துப் பொருள் கூறியிருப்பது அவர்தம் ஆழ்ந்த புலமையையும் ஆய்வு வேட்கையையும் புலப்படுத்துவதாய் அமைகிறது.

சிறந்த கவிஞராக விளங்கும் ஆசிரியர் அவர்கள், 'தமிழ்க்கவி வாணருக்கு ஒரு விண்ணப்பம்' என்னும் ஆய்வுக் கட்டுரை எழுதி யுள்ளார்கள். கவிதை பற்றியும் தமிழிலக்கியங்களில் குறைபாடுகள் பற்றியும், கவிதை இன்பம் குறைந்ததற்கான காரணம் பற்றியும்,

கவிஞர்கள் மேற்கொள்ள வேண்டிய பண்பு பற்றியும், கம்ப ராமாயணச் சிறப்புப் பற்றியும் ஆசிரியர் கூறும் கருத்துகள் சிந்தனையைத் தூண்டுவன. தேர்ந்த ஆராய்ச்சியாளராக விளங்கிய பிள்ளை அவர்கள் சிறந்த சுவைஞராகவும் கவிஞராகவும் விளங்கிக் கவிதைத் துறையிலும் தம் புலமை நலம் காட்டிப் புகழ் பெற்றிருக்கிறார்.

முடிவுரை

கெ. என். சிவராஜபிள்ளை அவர்களின் ஆய்வுமுறை வியப்பிற்குரியது. ஒப்பியல் ஆய்வு வளராமல், முன்னோர் சொன்ன கருத்தை அப்படியே ஏற்றுக்கொள்ளும் காலக்கட்டத்தில், தெளிவான ஆய்வுப்போக்கை ஏற்படுத்தியவர் பிள்ளை அவர்கள். இவர்தம் ஆய்வுப் போக்கு பின்வரும் நிலைகளில் அமைந்திருக்கிறது.

1. ஆய்வுக்கு எடுத்துக் கொண்ட பொருளைப் பற்றி நன்கு அறிந்து தெளிதல்.
2. ஆய்வுக்குரிய பொருளின் இலக்கியச் சான்றுகள் முழுவதையும் திரட்டித் தருதல்.
   (அ) முதல்தரச் சான்றுகள்
   (ஆ) இரண்டாந்தரச் சான்றுகள்
3. ஆய்வுக்குரிய பொருளோடு தொடர்புடைய பிற கருத்துகளை ஆராய்தல்.
4. வரலாற்றுக் கண்ணோட்டத்துடன், வரலாற்று ஆசிரியர்கள் குறிப்புகளைப் பயன்படுத்தி ஆராய்தல்.
5. கால ஆராய்ச்சி செய்தல்.
6. சான்றுகளை முதலாவது, இரண்டாவது என வகுத்தும் தொகுத்தும் தருதல்.
7. தம்முடைய முடிவை முதலிலேயே கூறிவிட்டுப் பின்னர் அதற்குச் சான்றுகள் காட்டி நிறுவுதல்.
8. மாறுபாடுடைய கருத்துகளைச் சான்றுகளுடன் மறுத்துத் தம் கருத்தை நிறுவுதல்.
9. இலக்கியங்களில் காணப்படும் குறைகளை ஆழ்ந்து நோக்குதல்.
10. அறிவியல் கண்கொண்டு இலக்கிய ஆராய்ச்சி செய்தல்.

தம் மதிநலத்தால் இலக்கிய வானில் ஒளி வீசிய பிள்ளை அவர்களை 'ஆராய்ச்சிப் பேரறிஞர்' எனக் கூறுதல் தகும்.

3. THE DERIVATION OF THE WORD 'TAMIL'

A Philological Causerie

By

Mr. K. N. SIVARAJA PILLAI.*

The name Tamil, which denotes the most prominent of the Dravidian languages prevalent in South India, has for a long time past been giving rise to numerous attempts at philological unravelling. The result, however, is by no means satisfactory ; nor is it even commensurate with the varied efforts till now put forth. The word still remains a riddle except to those who have allowed the demands of their balanced judgement to be outurn by those of a greater and more insistent order, an intense love of their mother tongue. Scholars of this type seem prepared to stake their whole reputation on the correctness of their various pet derivations, provided these are sufficiently flattering and tend to add to the prestige of their dearly loved language and redound to the high name and fame of the race they belong to. A false sense of patriotism has blinded them to the fact that the very antiquity to which the name 'Tamil' mounts should necessarily preclude from its significance any advanced notions ethical, philoso phical, religious, etc., which we have later on come to associate with it. They also forget that Philology, unless handled by experts well versed in the science of languages in general and of the history and development of certain languages in particular, is apt to become a danger and a snare to the general scholar. The very ease with which one could enter this special field and spin out any edifying story to one's liking, should serve as a warning that, after all, the matter is not so simple as it looks. The present paper is mainly intended to drive home this particular truth which many of us here seem some times to forget.

2. I shall, for the purpose of clearness and consecutive treatment, distribute and arrange most of the derivations thus far offered

*First published in *Dr. S. Krishnaswamy Aiyangar Commemoration Volume* on his sixty sixth Birthday 15th April, 1936, pp. 339-347.

under certain broadly-marked groups. They fall under four great classes—:

I. Derivations due to the consideration of the Phonetic decay of the word 'Tamil'.

II. Derivations due to the application of Semantics to the word 'Tamil'.

III. Derivations due to religious motives.

IV. Derivations due to mystical and symbolic motives.

3. It may be noted that while the opinions of the fiirst two classes have at least a trace of reason and scientific procedure about them to recommend them for our serious consideration, those of the last two have clearly no such justification. These, after all, may be myth, poetry, reverie, anything but sober science. Yet I deal with these also here only to give the reader an idea of what a vast deal of ground some Tamil scholars have still to cover before they can be said to touch the fringe of the scientific problem implicated in the derivation of such an ancient word as 'Tamil'. Their complimentary, if sometimes, queer expositions, if they do not add to the world's scientific store of information, may at least serve to amuse the reader in a region where he has to plunge into and wade through mere dry--as-dust linguistic facts.

4. In the first class I have to give the place of honour to the derivation generally offered by the Sanskritists. Moved by a motive exactly the opposite of the one actuating certain Tamil scholars mentioned above, these would not rest satisfied till almost every language and literature in India was brought in some way or other under the protecting wings of Sanskrit. To single out a prominent figure of this group, I instance Subrahmanya Dikshitar. the author of the Prayogavivekam, who holds that 'Tamil' is a corrupt form of the Sanskrit word 'Dravida'. What 'Dravida' means in Sanskrit is nowhere stated, and we are as much in the dark as ever. According to this view, 'Dravida' became later on 'Dramila', and that again even; tually gave us the form 'Tamil'. Dr. S. Krishnaswami Aiyangar in his Beginnings of South Indian History, writes in the same vein. and supports this all too well-known view. Why the word 'Tamil' itself could not have given birth to 'Dramila', and that again to 'Dravida' and the order of this historical succession be completely reversed, none of tbese has seriously considered. They may argue that, then, they could not explain the later interpolation of the 'r' sound in the

word 'Tamil'. If so, following the same line of reasoning, they have to assert that the name 'Turk' is not the original but a descendant of the form 'Turuska', because it too stands without that peculiar sound SK. If, however. the fact is remembered that most of the languages, including Sanskrit, in borrowing foreign words, play ducks and drakes with their phonetics according to their individual peculiarities and genius, I am sure that their philologizing would seem to require revision. Another important consideration which has escaped their notice is that the group of languages known as the Dravidian existed without a name till its speakers came into contact with the later Aryan invaders or colonists, and it was only after long ages had elapsed since its birth that it was christened for the first time by the Aryan incomers. The very fact that the term 'Dravida' in Sanskrit does not carry an intelligible sense, is a conclusive evidence that it is a loan word from a foreign tongue.

5. A second derivation in this class is that proposed by Dr. Pope that 'Tamil' is a corrupt form of the significant phrase 'ten-moli' (தென்மொழி) the southern language, as distinguished from Sanskrit or 'vada-moli' the northern tongue. Considered as a mere accident in the field of Tamil Phonology, where even fantastic contractions of words in course of time have developed and still develop, one cannot urge that Ten-moli is incapable of giving us 'Tamil' as one of its vagaries. The difficulty of accepting this derivation however lies elsewhere. Dr. Pope proceeds on the impossible assumption that the Tamil language had no name of its own till it encountered the northern tongue. It seems to me that Dr. Pope succumbed to the easy temptation of holding that the relative terms Vada-moli and Ten-moli are coeval in their origin and are of equal historical age. As a matter of high probability Vada-moli is the first name that should have come into use in the language., and Ten-moli should have been coined much later merely as its antithetic companion. We have a right to inquire what should have been the name of this southern language before the coinge of this later name. Further, Tenmoli, being a pure Tamil name, it is but reasonable to suppose that it should have been coined by the Tamil people themselves. But is it at all likely that the Tamils would have waited long without a name for their language, and that, when it came to naming, they would have pitched upon a name with a direction-signifying epithet as Tenmoli simply out of the sheer necessity of distinguishing it from another direction-signifying name Vada-moli? If, on the other hand, we suppose that Tenmoli came into currency long before and without any reference to Vada-moli, perforce we have then to father its origin on the northern race, the Aryas. But the Tamil character of the name 'Ten-moli' stands

opposed to such a view. In this connection, I may refer to the parallel instance of 'Vadapulam' (northern country) appearing in the Sangam poems, as the name of the border countries just to north of Tamilagam. This certainly did not give rise to the name Tenpulam for the Tamil country. When the three kingships developed in course of time into full-fledged monarchies, the Pandya ruler who bore sway in the south was called Tennavan (the southern ruler), but his country was never called Tenpulam, which, when coined, was applied to the land of Yama, the dread Lord of the dead in the southern region.

6. Coming to the second class of derivations arising from the semantic explanation of the term, I may instance four of them here. The first and the most popular is the one givien by Sabhapati Navalar in his work 'Dravidaprakasika' that Tamil means sweetness (இனிமை) i.e., that this particular language is an incomparably sweet mellifluous tongue. Verses like

"தமிழ் தழீஇய சாயலவர்"
"தமிழ்ப் பாட்டிசைக்குந் தாமரையே"

from the writings of later poets are quoted ad nauseam to support this philology. Apart from the flattering nature of this derivation, there is nothing else to recommend it. A poet has ample ground to belaud the chief instrument of his art, language, as a veritable fountain of nectar; but sober linguists should pass it by as a mere instance of poetic license and fancy. The scholars who harp on the sweetness of Tamil seem to forget one plain fact, that to every man or woman, his or her language sounds as the sweetest tongue imaginable, and that all other languages are insipid. It is only those who have studied languages in a scientific way that are not victims to this natural bias. Moreover, 'Tamil' as meaning 'sweet' by a figure of speech. labours under the disadvantage of having been twisted out of its natural meaning by the literati, and not by the common people; nor even among the literati do we find any one of the earlier group, the Sangam poets for instance, extending the meaning of 'Tamil' to embrace 'Sweetness'. If the name 'Tamil' was coined and in circulation to denote a language at a period of time long anterior to the evolution of any literature in it, as every well-informed fairminded scholar should hold, it would be simply absurd to assert that the first christeners had anything like the later idea of sweetness in their minds while they thought of naming their language. So far from that being the case, the name itself, one should assume, must have been the result of accidental historical associations now beyond our reach, and can

hardly be ascribed to any conscious effort at naming. This much is sufficient to dispose of the sweetness - theory about the origin of Tamil.

7. The other three theories coming under the Semantic class are all more or less allied to the one noted above. Pupala Pillai, the author of Tamil-varalaru (தமிழ் வரலாறு) takes Tamil to mean beauty (அழகு) i.e., a language which has all the elements of natural beauty in it, whatever that may mean. The commentator of Vira-soliyam (வீரசோழியம்) and the late Damodaram Pillai interpreted Tamil as derived from the root தமி meaning the incomparable, the unique, and carrying with it the meaningless suffix ழ் as in such words as இமிழ், உமிழ், குமிழ், etc. A slightly varied version of this is that of a modern school which interprets தமி the root of தமிழ், as 'solitary' (தனிமை) i.e., unconnected with any other family of languages in the world. All these derivations are surely highly flattering; but one and all of them suffer from the defect which characterises the sweetness theory, and are, on that account absolutely valueless from the standpoint of sober philology.

8. Turning from these hypotheses, which at least seem worthy of some critical examination, I have to take the reader through the vagaries of certain other scholars who prostitute philology for their own ends. In this third group come the religious savants, who convert everything round them to take on a religious colour or be inspired by a religious motive. These scholars forget that religion, in the sense in which they take the word, is a system of beliefs and practices of immensely tardy growth, and that at the opening stages it was wholly innocent of all those fine-spun moral and metaphysical doctrines which later on came to gather round it. Some of these opine that த being a divine letter it begins the name Tamil (தமிழ்), and thus plainly denotes the divine origin of that language. Another school, not oblivious to human interests, declares that த and ம, the two vital sounds in the name, signify both the perfection of divinity and the imperfection of humanity, த being divine and ம human in their phonetic properties. A third school goes still further, and wields the analytic weapon with a vengeance. It says that the word 'Tamil' (தமிழ்) is made up of five elementary sounds த்+அ+ம்+இ +ழ் which do duty for the five letters of the mystic Pancaksharam of the Saivite religion. What should be Vaishnavites and other religionists do while thus being deprived of any claim to their mother-tongue seems to have in no way troubled these. It is unnecessary, I think, to offer any serious criticism of these strange, not to say, startling derivations.

9. Next in the fourth class come an interesting series of philological attempts[2] due to mystical or symbolic motives. By a perusal of these the reader can at once guage to what a sorry pass Philology has come in the hands of this mystic coterie. I shall simply enumerate them in an order without stopping to discuss in detail their relative merits which after all amouut to nothing. (i) த in தமிழ் denotes தகரவித்தை, a mystic mantra, the significance of which is beyond the capacity of ordinary mortals to comprehend or even conceive. (ii) த is an ambrosial letter (அமுத வெழுத்து) and thus begins the name of a language sweet in every fibre of its make-up. (iii) The word தமிழ் begins with the first vowel, அ, the easiest to pronounce by the mere opening of one's mouth and blowing the breath through it. Thus the utter simplicity of the Tamil phonetics is justified by its very name. *(iv)* As human society is made up of the two sexes, male and female, the word தமிழ் is formed of both male and female letters. (v) The name தமிழ் is made up of two parts, the first part being composed wholly of natural letters இயற்கை எழுத்து and the last ழ் standing for a peculiar, artificial and highly intricate sound (செயற்கை எழுத்து). The rationale of the classification of letters into the natural (இயற்கை) and the artificial (செயற்கை) need not detain us just now. (vi) Instead of looking at the name from the point of view of letters, another group goes in for a syllabic presentation. It assets with all solemnity that தமிழ் is a mono-syllable, and refers to a language wherein monosyllabic words predominate. The first framers of the name, one has to suppose, sat in solemn conclave to take a census of the words appearing in the language for a comparsion of their syllabic character, before they began seriously to give a name to their language. What a grand conclave it should have been to shame the speakers of other languages in not having hit upon such a strikingly original method of naming! (vii) Not satisfied with the tinkering on the surfaces as exhibited by the two previous schools in confining their attention to letters and syllables, another school gets deeper into phonology and says that the word தமிழ் is made up of three sounds த,மி,ழ், and hence represents in order the three types of sounds, hard, soft, and intermediate (வல்லோசை, மெல்லோசை, இடைப்பட்டவோசை). I concede some ingenuity to these philologers who press into service the three-fold classification of the consonantal sounds by the Tamil grammarians, வல்லினம், மெல்லினம், and இடையினம் for success in their philological venture. (viii) Not content with any of these derivations, another class, mystically inclained, takes தமிழ் as a mere symbol wherein the mystic

2. I am indebted to Mr. Pupala Pillai's Tamil-varalaru for this group of derivations.

number 'three' functions to their great satisfaction. If that singularly fertile number 'three' can appear in connection with முப்பொருள், மூலவுலகு, முத்தமிழ், முக்காலம், முக்குணம், etc., why can it not function, ask they, in the name of the language. Hence, தமிழ், in the view of these theorists, should be taken as a symbolic representation of the mystic number 'three'. (ix) The next and last class, not being satisfied with any of the mundane derivations, aspires to draw philological inspiration from the heavenly spheres. Kartikeya Mudaliyar, the protagonist of this schools, holds that 'Tamil' is a corruption of the word தாமம் light, the name of Surya, the Sun-God ! After the Ptolemaic system of astronomy was overthrown by the helio-centric theory of Copernicus, who is there to doubt the solar origin of the name Tamil? It would be interesting also to note in this connection the very gigantic effort of this last-named philologer to derive every word in the Tamil language from that solitary root or primitive word சுல் (sul), the Sun. If each and every word in the Tamil language can thus boast of a solar ancestry, it would be preposterous on our part to refuse a like descent to the name of the language itself.

10. I do not think that this bunch of interesting, if somewhat quaint, derivations exhausts the list. There may still be more of a like brand. But most of them, as the reader may have already noticed, are beneath serious examination. To others objections have been urged which, in my view, are really serious. Still the most fatal objection of them all I have not adverted to till now, and shall now state in detail and wind up this article.

11. Each one of the numerous philologists mentioned above has gone on the assumption that Tamil is primarily the name of a language, and has tried to shape his derivation to suit the requirements of a language. On the other hand, the facts disclosed by general history all the world over and by Early Tamil Literature in particular establish beyond the shadow of a doubt that such an assumption is purely gratuitous, nay even fundamentally erroneous. That the name 'Tamil' denoted primarily a people or race, and only secondarily and derivatively the conutry inhabited by such people and the language spoken by them, can easily be established by an appeal to the history of other peoples and to the ancient history of the Tamils themselves. A glance at the names of peoples outside India and in India is enough to convince the reader that the names of languages and of countries are mostly derived from the names of peoples or races speaking such languages and inhabiting such countries. For instance, the names of the languages and coun-

tries of such peoples as the Danes, the Swiss, the Irish, the Poles, the Finns, the Angles, the Franks etc., are all derivatives from race-names. When at a later period territorial political divisions came to the established we find people called after the names of their countries, as for instance, the Australians, the Canadians the Newzealanders, etc. In India, the names Rajaputs and Rajaputana, Andhra and Andhra-desa illustrate the first principle, and the name Maharastra and Mahratta. Kannada and the Kanares people show the second and later principle of nomenclature. Both these principles of nomenclature preclude, however, the possibility of a language name taking precedence of a race-name or a country—name in point of antiquity. The reason for this is not far to seek. In national life, languages gain in importance and significance only after the birth of writing and development of literatures in them. Even the idea of speaking of languages in their pre-script pre-literary stage as separate entities would not have shot through the brains of their speakers. As in all languages writing and literatures develop comparatively at a much later period, it would not be reasonable to hold that the races had to wait the naming of the languages before they thought of naming themselves. On the other hand, one would be amply justified on grounds of general history that the languages derive their names from the races they belong to.

12. Turning to the name of Tamil language, which has given room to so much fruitless philological speculation, we find that, in the usage of the early Sangam poets, the name occurs as denoting the people in the first place, and also the country occupied by them. Nowhere do we come across a single instance of an early poet using it as a language name. I don't argue from this that the language had no name then as distinguished from the names of their languages prevalent in adjacent countries. But evidently at the spoken stage it did not acquire so much importance as it did when fairly arrived at the stage of writing. The word 'Tamil' in the following verses of the early Sangam poets,

1. தமிழ்தலை மயங்கிய தலையாலங் கானத்து,

— குடபுலவியனார் in Puram 19-2.

2. ...... வாய்வாட்
டமிழகப் படுத்த விமிழிசை முரசின்
வருநர் வரையாப் பெருநா ளிருக்கைத்
தூங்கல் பாடிய வோங்குபெரு நல்லிசைப்

பிடிமிதி வழுதுணைப் பெரும்பெயர்த் தழும்பன்
கடிமதில் வரைப்பி னூனூ ரும்பர்

—நக்கீரர் in Agam 227.

refers to the Tamil army of the soldiers belonging to the Tamil race. And in the following the same word denotes the country inhabited by the Tamils.

i. வையக வரைப்பிற் றமிழகங் கேட்ப

—கருவூர் கந்தப்பிள்ளை சாத்தனார் in Puram 168-18.

ii. மண்டிணி கிடைக்கைத் தண்டமிழ்க் கிழவர்
முரசுமுழங்கு தானை மூவ ருள்ளும்

—வெள்ளைக்குடி நாகனார் in Puram 35 : 3-4

iii. தமிழ்கெழு மூவர் காக்கு
மொழிபெயர் தேஎத்த பன்மலை யிறந்தே

—மாமூலனார் in Agam 31.

Even on the assumption that the language too of the Tamil people must have had a name at that time, it is only reasonable to suppose that the language must have received its name from the people speaking it and not the people from the language. Thus from the usage of the early Sangam poets we have a right to conclude that 'Tamil' as a race-name is more ancient than Tamil as a language-name.[3] We find also that this conclusion is in consonance with the facts disclosed by the general history of peoples in the other parts of the world. If so, all the linguistic derivations that have been hazarded till now about the origin and significance of the word 'Tamil' should necessarily fall to the ground. All of them take for granted, as a matter of course, that the name Tamil denoted primarily a language and not a race, which is just the reverse of truth. If at all a correct derivation of their name, it should be ethnic and not linguistic.

13. Now we have to turn to the explication of this race-name 'Tamil'. Like the names of many other races in the world this name too should stand unexplained for the present. The time of its origin

3. The authority of the Tolkappiyam, a comparatively late work for the period we speak of, cannot help us in the settlement of this question of ancient history.

naturally transcends all historical periods, and takes us to an antique world which saw the birth and expansion of the various races and peoples now inhabiting the earth. Leaving all history hehind, it points to a prehistoric time far back into the depth of human antiquity, a time about which Ethnology merely dreams and has yet come to a definite conclusion. And it is into the secrets of such a word as this—one of the oldest in the whole range of the language—that these philologers attempt to pierce with the vain hope of wresting its meaning. A perusal of this article may have prepared the reader to judge as to which of the two classes mentioned above, the question of deriving the term 'Tamil' belongs. That word, taking its very early origin into consideration., should for the present stand inexplicable, and it would be only the part of wisdom in this connection to abide by the warning conveyed by the following line of Einstein written confronted with a like insoluble problem in the field of Physics. "It seems to me much better" wrote the great scientist "to give in to our present inability rather than be satisfied by a solution that is only apparent".

4. கல்கத்தாத் தேசிய நூல்நிலையத்தில் உள்ள தமிழ்ச் சுவடிகள்

மு. சண்முகம் பிள்ளை

தமிழ் விரிவுரையாளர், திருக்குறள் ஆராய்ச்சிப் பகுதி,
சென்னைப் பல்கலைக்கழகம்.

அகராதிகளுக்கெல்லாம் முன்னோடியானதும் நிகண்டு நூல்களுள் முதலில் தோன்றியதும் பழமையானதுமான திவாகர நிகண்டு நூலைச் செம்மையுறப் பரிசோதித்து ஓர் ஆராய்ச்சிப் பதிப்புக் கொண்டுவரும் முயற்சியில் ஏறத்தாழ மூன்றாண்டுகளாக முயன்று வருகிறேன். இம்முயற்சிக்குப் பல்கலைக்கழக மானியக் குழு பொருளுதவி செய்து வருகிறது. 1977-ல் கேரளப் பல்கலைக்கழக நூலகத்துள்ள சுவடிகளும் 1978-ல் தஞ்சாவூர்ச் சரஸ்வதி மகாலில் உள்ள சுவடிகளும் ஆராயப்பட்டன. இந்த ஆண்டுக் கோடை விடுமுறையில் ஜூன் மாதம் கல்கத்தாத் தேசிய நூல் நிலையத்திற்குச் சென்றிருந்தேன். துணை ஆய்வாளராய் இம்முயற்சியில் என்னுடன் பணிபுரிந்துவரும் டாக்டர் இ. சுந்தரமூர்த்தி அவர்களும் வந்திருந்தார்கள். 18 நாள்கள் (11-6-79—28-6-79) தங்கியிருந்து அங்குள்ள திவாகரச் சுவடிகளை ஆராய்ந்தோம். அதோடு அங்குள்ள பிற நூல் சுவடிகள் எவையெவை என்பது குறித்தும் ஓரளவு மதிப்பிட இயன்றது.

இத் தேசிய நூல்நிலையத்தின் தமிழ்ப்பகுதி குறித்தும், அங்குள்ள சுவடிகள் அச்சு நூல்கள் குறித்தும் ஆய்வாளர் தெரிந்துகொள்ளும் வகையில் ஒரு குறிப்பினை வெளியிட விரும்பினேன். நெடுந் தொலைவில் உள்ள இந் நூல்நிலையத்திற்குச் சென்று அங்குள்ள நடைமுறைக்கு ஏற்ப நூலகத்து நூல்களைப் பயன்படுத்தி வருதல் அத்தனை எளிதன்று. எனினும் முக்கியமான ஆய்வுகள் செய்யும் போது அங்குள்ள தமிழ்க் கருவூலங்களையும் ஆய்வாளர்கள் பயன்படுத்த வேண்டுவது அவசியமாகுமன்றோ? எனவேதான் தேசிய நூல் நிலையத்தின் தமிழ்ப்பகுதிபற்றிப் பொதுவாகவும், ஏட்டுச் சுவடிகள் குறித்துச் சிறப்பாகவும் இங்கு எழுத முற்படுகிறேன்.

கல்கத்தாவில் நிறுவப்பெற்றுள்ள தேசிய நூல் நிலையம் மிகமிக அழகியதாய் விளங்கும் பெருமாளிகையில் அமைந்துள்ளது. ஒரு காலத்தில் இது இராசப்பிரதிநிதியாகிய வைஸ்ராய்மார் வசித்த பெரு

மாளிகை. இம்மாளிகையைச் சுற்றிலும் பெரும்பரப்புடைய தோட்டம் கண்ணுக்கினிய காட்சி நல்குகிறது. 1948ஆம் ஆண்டு தொடங்கப்பெற்ற இந்நூல் நிலையம் 31 ஆண்டுகளில் படிப்படியாய் வளர்ந்து கொண்டிருக்கிறது. பாரத நாட்டில் உள்ள எல்லா மொழிகளுக்கும் உரிய நூல்களும் இங்கு உள. 1954ஆம் ஆண்டு ஏற்பட்ட நூலகச் சட்டத்தால் நம் நாட்டில் அச்சாகும் எந்த ஒரு நூலுக்கும் உரிய பிரதி இந்த நூலகத்திற்குத் தவறுது உரிமையாளர் அனுப்பி வைத்தாக வேண்டும். ஆதலால் இங்கு எல்லா நூல்களும் வந்து சேர வாய்ப்பாய் இருக்கிறது.

ஆண்டுதோறும் வெளிவரும் நூல்களுக்கு விவரம் தயாரித்து 'இந்தியத் தேசிய நூல் விவரப் பட்டியலை' (Indian National Bibliography) ரோமன் எழுத்தில் வெளியிட்டும் வருகிருர்கள். தமிழ்ப் பகுதி பற்றிய விவரங்கள் தனியாகவும் சில ஆண்டுகளுக்குத் தொடர்ந்து வந்துள்ளன. 1958-ஆம் ஆண்டிலிருந்து 1963 வரை ஆண்டு தோறும் இப்பட்டியல் வெளிவந்தது. பின்னர், ஐந்தாண்டுத் தொகுதியாக (1963-1967) இது வெளிப்போந்தது. அதன் பின்னர் ஏழாண்டுத் தொகுதியாக (1968-1974) இப்பொழுது வெளிவர இருக்கிறது. இந்த ஏழாண்டுத் தொகுதி தமிழ்நாட்டு அரசாங்க அச்சகத்தில் அச்சிடப்பட்டு வருகிறது. இந் நூல்விவரத் தொகுதிகள் தமிழ் நூல் வரலாற்றுக் களஞ்சியமாகும்.

இந் நூல்நிலையத்திலே தொடக்க நாளில் தமிழ் நூல்கள் மிகக் குறைவாகவே இருந்தன. அப்பொழுது இத்தமிழ்ப் பகுதிப் பொறுப்பாளராயிருந்த திரு. பி. நா. வேங்கடாச்சாரியார் அவர்கள் முயற்சியால் பழம் பதிப்புகள் முதலிய அரிய தமிழ் நூல்கள் இங்கு வந்து சேர்ந்தன. தமிழ் நாட்டில் நூல்களைப் போற்றி வந்த வில்வாரணிப் பச்சையப்பனுர், கொடுமுடி ராசகோபாலன் போன்ருேர் தம்மிடமுள்ள பழம் பதிப்புகளையும் அரிய நூல்களையும் இந்நூல் நிலையத்திற்கு என விலைக்குத் தந்தனர்.

இவ்வாறு விலைக்கு வாங்கி நூல் தொகுதிகளைச் சேர்த்தது ஒருபாலாக அறிஞர்கள் நன்கொடையாகத் தரும் நூல்களையும் பெற்று அவரவர்கள் பெயரால் தனிப்பகுதியாக வைத்தும் இங்குப் போற்றி வருகிருர்கள். தமிழ்ப் பகுதிக்குக் கிடைத்த பெரிய நன்கொடை பேராசிரியர் எஸ். வையாபுரிப் பிள்ளையவர்கள் தொகுத்து வைத்துப் போற்றிய நூல்களாகும். பேராசிரியர் காலஞ்சென்றபின் (1956) அவர்கள் போற்றிய அச்சுப் புத்தகங்கள் அனைத்தையும் நன்கொடையாகத் தந்ததோடு அவர்கள் தொகுப்பிலுள்ள 300-க்கு மேற்பட்ட ஓலை ஏட்டுச்சுவடிகளையும் 1960ஆம் ஆண்டு அவர் தம் கால்வழியினர் இந் நூல் நிலையத்திற்கு அளித்துள்ளனர்.

பேராசிரியர் எஸ். வையாபுரிப் பிள்ளையவர்கள் தொகுப்பிலுள்ள 4500க்கு மேற்பட்ட நூல்கள்* மூன்று பெரிய இரும்பு அடுக்குப்

---

* தமிழ் 2943, ஆங்கிலம். பிரஞ்சு, ஜெர்மன் நூல்கள் 1543, சம்ஸ்கிருதம் 113, மலையாளம் 16.

பேழைகளில் அவர்தம் பெயர் பொறித்து வைக்கப்பட்டுள்ளன. இவற்றோடு பேராசிரியர் அவர்கள் அவ்வப்போது தொகுத்து எழுதி வைத்திருந்த பற்பல குறிப்புகள், அகராதிகள், சிற்சில நூல்களுக்கு ஏடு பார்த்து எழுதிவைத்த காகிதப் பிரதிகள் ஆகியவையும் உள.

இவை ஒருபாலாக, இனி ஏட்டுச் சுவடிகள் பற்றிய கணிப்புக்கு வருவோம். ஏட்டுச் சுவடிகள் காற்றடக்கம் செய்யப்பட்ட (Air-conditioned) அறையில் பல அடுக்கு இரும்பு நிலைப் பேழையில் வைத்துக் காக்கப்பட்டு வருகின்றன. இத்தொகுப்பில் சங்க நூல்கள் தொடக்கமாகப் பிற்காலப் பிரபந்தங்கள் வரையில் பல்வேறு காலத்தும் தோன்றிய நூல்களின் சுவடிகள் 340-க்கு மேல் உள. ஒரு சுவடியிலேயே வேறு நூல்கள் சேர்ந்து அமைந்துள்ள சுவடிகளும் பலவாகும். இவற்றையும் தனித்தனியே பிரித்து நோக்கினால் நூல்களின் எண்ணிக்கை மிக அதிகமாகும்.

பேராசிரியர் சென்னைப் பல்கலைக்கழகத் தமிழ்ப் பேரகராதிப் பதிப்பாசிரியராகப் பணியேற்ற பின்பே ஏடுகளைத் தொகுப்பதில் நாட்டம் மிகக் கொண்டார். முதலில் அகராதிக்குப் பயன்படும் நிகண்டுச் சுவடிகளை முயன்று தேடினார். தேடியது மாத்திரமன்றி, 'தமிழகராதியின் ஆதார நூற்றொகுதி' என்னும் பொதுத்தலைப்பில் பல நிகண்டுகளைப் பரிசோதித்து அச்சிட்டும் வெளியிட்டார். நாம தீப நிகண்டு, பொதிகை நிகண்டு, கயாதர நிகண்டு, அரும்பொருள் விளக்க நிகண்டு ஆகியவை முதன்முதலாக அச்சுருவம் பெற்றன. இவைபோன்ற அகராதிமோனைக்ககராதி எதுகை, கைலாச நிகண்டு, பல்பொருட்சூளாமணி, விரிவு நிகண்டு முதலியன இன்னும் அச்சிடப் பெறாமல் இருந்துவருகின்ற நிகண்டுச் சுவடிகளாகும்.

அச்சில் வந்த நிகண்டு நூல்களாகிய திவாகரம், பிங்கலம், உரிச் சொல் நிகண்டு, சூடாமணி நிகண்டு, அகராதி நிகண்டு, ஆசிரிய நிகண்டு ஆகியவற்றிற்கும் சுவடிகள் பலவாக உள்ளன. எல்லா நிகண்டுகளிலும் திவாகரத்திற்குரிய சுவடிகள் மிக அதிகமாகும்.

இங்குள்ள திவாகரச் சுவடிகள் 27. தமிழ்நாட்டுச் சுவடி நிலையங்கள் எல்லாவற்றிலும் உள்ள ஏடுகளைச் சேர்த்து நோக்கினாலும் கூட இந்தத் தொகையை எட்டாது. இவற்றுள் முற்றும் பூர்த்தியான ஏடு 17; ஒருசில தொகுதிகள் குறைவுபட்டு அபூர்த்தியாயுள்ளவை 10. பேராசிரியர் தம் கைப்படப் பாடபேதக் குறிப்புடன் பிரதி செய்து வைத்துள்ள கையெழுத்துப் பிரதி ஒன்றும் இங்குக் காணப் படுகிறது.

இவற்றைப் பரிசோதித்ததில் திவாகரத்தின் முதல் நூற்பா அருகன் பெயர் பற்றியது என்பதும் அச்சிட்ட நூல்களில் சிவன் பெயரில் தொடங்குவது பின்வந்தோர் செய்த மாற்றம் என்பதும் விளக்கமாயிற்று. பிற சமயத்தாரால் எழுதப்பட்டதும் வெவ்வேறு பிரதேசங்களைச் சார்ந்ததுமான ஆறு ஏடுகள் அருகன் பெயர்த் தொடக்கமாக உள்ளமை கவனிக்கத்தக்கது.

சிறப்பாக ஒருசொல் பல்பொருள் உரைக்கும் பதினொன்றும் தொகுதியில் ஏற்பட்டிருந்த ஐயங்களை இங்குள்ள பிரதிகளே தீர்த்து வைத்தன. அகராதிபோலச் சொற்பொருள்களைத் தொகுத்துத் தருவது இந்தத் தொகுதியே. இத்தொகுதியில் நூலாசிரியர் ஆதியில் அமைத்திருந்த நூற்பா அடைவு முறை எதுகை மோனை அமைதியில் செல்லும் ஒருவகை முறையாகும் என்பது தெளிவாகத் தெரிய வந்தது.

அகராதிகள் வழக்கத்திற்கு வரத்தொடங்கிய காலத்தில் இத் தொகுதியைப் பயன்பாடு கருதி ஆதியிற் பொருள் அந்தத்துப் பொருள் என்று இருகூறுக்கி, அவ்வப்பகுதியில் அமைவதற்குரிய சூத்திரங்களையும் பெரும்பாலும் அகராதியாக அமைக்கலாயினர். கி.பி. 1702ஆம் ஆண்டில் எழுதப்பெற்ற திவாகர ஏடே ஆதியிற் பொருள் அந்தத்துப் பொருள் என்னும் பாகுபாட்டில் உள்ளது. இதன் மேலும் ஒன்பது ஏடுகள் இம்முறையில் எழுதப்பட்டவை இங்கு உள. இப்பொழுதுள்ள அச்சு நூல்களில் இப்பகுப்பு முறை காணப்பட்ட போதிலும் ஏடுகளில் காணப்படும் சூத்திர அடைவு முறைக்கும் அச்சு நூல்களுக்கும் வேறுபாடு மிகுதியாக உள்ளன. திவாகரத்தை ஆதியில் அச்சிடத் தொடங்கியோர் இரு பகுதிகளிலும் உள்ள அகராதி வரிசையை இக்காலக் கொள்கைக்கு ஏற்ப மாற்றி அமைத்துள்ளனர் என்பதும் நன்கு தெளிவாகிறது.

இதன் மேலும் இப்பதினொன்றும் தொகுதியில் உள்ள சூத்திரங் கள் அனைத்தையுமே பொருள் விளக்க மூலச் சொற்கள் அகராதி யாக அமையும் வகையில் அமைத்து எழுதப்பட்ட ஏடு ஒன்றும் (3263) இங்கு உள்ளது. இம்முறை பேராசிரியர் மு. இராகவையங்கார் அவர்கள் எழுதிவைத்துள்ள கையெழுத்துப் பிரதியில் காணப்படு கிறது. ஆகவே, இம்முறைக்கு ஆதரவாகவும் சில ஏடுகள் நாட்டி லிருந்திருக்க வேண்டும் என்பதும் தெளிவாயிற்று. இவ்வாருகத் திவாகரத்தின் பதினொன்றும் தொகுதியில் ஆசிரியர் அமைத்த முறை ஒன்ருகவும், அதனை அகராதி போலப் பயன் கொள்ளப் பின்வந் தோர் மாற்றியமைத்த முறை இருவேறு வகையாகவும் உள்ளமையை இங்குள்ள ஏடுகள் தெளிவுபடுத்துகின்றன.

திவாகரத்தைப் போலவே மிகவும் அதிகமான சுவடிகள் கொண்ட மற்ருெரு நூல் கம்பராமாயணம். கம்பராமாயணச் சுவடி களை நோக்கிப் பேராசிரியர் பலகாலம் பாடபேதங்களைக் குறித்து வைத்திருந்தார். பாடபேதக் குறிப்புகளுடன் கம்பராமாயணத்திற் குத் திருந்திய பதிப்பொன்றைக் கொண்டு வரவும் அவர்கள் வாழ் நாளெல்லாம் முயன்று வந்தவர்கள். பால காண்டத்தின் முதல் ஏழு படலங்களும் (1937), யுத்த காண்டத்தின் முதல் மூன்று படலங்களும் (1932) மாதிரிக்காக அவர்களால் வெளியிடப்பட்டன. அவர்கள் தொகுத்த பாடபேதக் குறிப்புகள் இங்கு உள. தாம் தொகுத்து வைத் துப் போற்றிய குறிப்புகளைக் கம்பராமாயணம் முழுமையும் உரை யுடன் பலமுறை வெளியிட்ட பெரியார் வை. மு. கோபாலகிருஷ்ண

மாச்சாரியருக்குப் பேராசிரியர் உதவினுர். பேராசிரியர் குறிப்புகளைப் பயன்படுத்தியமைகுறித்து அவர் தம் பதிப்பு முகவுரைகளில் நன்றியுடன் குறித்துள்ளார். பேராசிரியர் வையாபுரிப் பிள்ளையவர்கள் தொகுத்து வைத்துள்ள கம்பராமாயணச் சுவடிகள் 77.

இங்குள்ள நிகண்டு ஏடுகள் 65, அகராதி ஏடுகள் 7; இவ்வகராதிகளில் பலவும் வீரமாமுனிவரின் சதுரகராதி பற்றியவை. 3138ஆம் எண் இடப்பெற்ற ஏடு சதுரகராதியினின்றும் வேறுபட்டது. 'அகக்காழ் - உள் வயிரம்' என்பது தொடக்கமாக 'வெளவியம் - துன்பம்' என்பதுவரை இருப்பதால் இது நிறைவு பெற்றதோர் தனி அகராதியே.

'விகடப் பிரசங்கப் பழமொழி' என்பது பழமொழிகளின் ஒரு தனித் தொகுப்பு. அகரவரிசையில் ஒவ்வோர் எழுத்துக்குமுரிய பழமொழிகள் தனித்தனிப் பகுதிகளாகப் பிரித்து ஏட்டில் எழுதப் பட்டுள்ளன. பெயரிலிருந்தே வேடிக்கையாகப் பிரசங்கம் புரிவார் எடுத்து இயம்புவதற்குரியவை இவை என்று ஊகிக்கலாம். இது, 'அகங்கண்டதைப் புறஞ்சொல்லாதே' என்பது தொடங்கி, 'வைத்த பண்டம் பார்த்து வயிறெரிந்து நின்றது போல' என்னும் பழமொழி வரையுள்ள ஒரு பழமொழி அகராதி.

இலக்கண நூல்களுள் பழமையான தொல்காப்பியத்திற்கு மூல ஏடு ஒன்றும் உரை ஏடுகள் 9ம் உள்ளன. இளம்பூரணர் உரை ஏடுகளில் எழுத்ததிகார உரை ஏடுகள் 3; சொல்லதிகாரம் 1; பொருளதிகாரம் 1. தொல்காப்பியப் பொருளதிகார இளம்பூரணர் உரைக்கு ஆதாரமான ஏடு தமிழ் நாட்டிலேயே இஃது ஒன்றேதான். இதனை வ.உ. சிதம்பரம் பிள்ளையவர்களும் பேராசிரியர் வையாபுரிப் பிள்ளையவர்களும் முதல்முதலாகச் சென்னை வாவிள்ளா ராமசாமி சாஸ்துருலு அண்ட் ஸன்ஸ் கம்பெனி வாயிலாக வெளியிட்டனர் (1936). பின்வந்த பதிப்புகள் இதனைப் பார்த்து அச்சிடப்பட்டவையே. பொருளதிகார நச்சினுர்க்கினியர் உரையேடு 4; பேராசிரியர் உரையுடன் கூடிய ஏடு 1.

மற்றும் நேமிநாதம், வீரசோழியம், நன்னூல், யாப்பருங்கலக் காரிகை, தண்டியலங்காரம், நாற்கவிராச நம்பி அகப்பொருள், இலக்கண விளக்கம், பிரயோக விவேகம். நவநீதப் பாட்டியல், விசாகப்பெருமாளையர் அணியிலக்கணம் என்னும் இலக்கண ஏடுகள் 27. இவற்றுள் நன்னூலுக்கும் (6) இலக்கண விளக்கத்திற்கும் (9) ஏடுகள் பலவாக உள்ளன. நன்னூல் விருத்தியுரை ஏடு ஒன்று கொல்லம் 857-ல், அதாவது கி. பி. 1682-ல் எழுதப்பட்டதாகும்.

சங்க நூல்களில் பத்துப்பாட்டு, அகநானூறு, பதிற்றுப்பத்து ஏடுகள் உள. திருவள்ளுவர் திருக்குறளுக்கு மூல ஏடு ஒன்றும் உரை ஏடுகள் 6ம் உள. உரை ஏடுகளுள் பரிமேலழகர் உரையேடு 3. பரிமேலழகர் உரையை ஒட்டி எழுதப்பெற்ற எளிய உரை ஏடு 1; எளிய முறையில் அமைந்த பொழிப்புரை ஏடுகள் 2. பரிமேலழகர்

உரைக்கு விளக்கம் தரும் திருமேனி இரத்தின கவிராயர் எழுதிய 'நுண்பொருள் மாலை' ஏடு ஒன்றும் காணப்படுகிறது. திருக்குறள் வெண்பா வரிசையில் 'திருவேங்கட வெண்பா' என்பது குறிப்பிடத் தக்கது. இஃது இதுவரை அச்சில் வாராத ஒன்று. இதுபோன்றே 'திருக்குறள் திருவிருத்தம்' என்னும் பெயரில் உள்ள குறள் விளக்க நூல் ஒன்றும் உளது.

திருவள்ளுவர் குறள், திருவள்ளுவமாலை, நாலடியார் என்னும் பெயரில் அமைந்த ஏடு ஓர் ஆராய்ச்சியுரை ஏடாகும். கி. பி. 1812ல் மேலே சுட்டிய பெயரில் நூல் அச்சாகியுள்ளது. இந்த அச்சு நூலைக் குறித்து,

> 'இது பொத்தகம் கலியுகாப்தம் 4900-க்கு ஆங்கிரீசளு தொண்டை மண்டலம் சென்னைப் பட்டணத்தில் தஞ்சை நகரம் மலையப்ப பிள்ளை குமாரன் ஞானப் பிரகாசனுல் அச்சிற் பதிப்பிக்கப்பட்டது. மாசம தினச் சரிதையின் அச்சுக்கூடம். ஆண்டு 1812'

என்று விவரம் குறிக்கப்பட்டுள்ளது. இந்த அச்சு நூலை அந்நாளில் வாழ்ந்த வித்துவான்கள் பலர் கூடி ஆராய்ந்து அதில் உள்ள பிழைகளை எடுத்துக்காட்டி, திருத்தங்களும் குறித்துள்ளார்கள். இது பற்றி ஏட்டில் காணும் விவரம் பின்வருமாறு :

> "திருநெல்வேலி அம்பலவாண கவிராயர் பிழை தீர்த்துச் சென்னப்பட்டினத்துக்கு அனுப்பிவிச்சு அவ்விடத்திலிருந்த திருவாவடுதுறை ஆதீன வித்துவான் அம்பலவாணத் தம்பிரான், சீகாழி வடுகநாத பண்டாரம் அவர்கள் மறுபடிக் கண்ணோட்டத்துடன் ஆராயப்பட்டு அச்சிற் பதிப்பித்த காயிதப் பொத்தகத்தை ஆழ்வார் திருநகரியில் தேவர்பிரான் கவிராயர் ஆதிநாத பிள்ளை தலத்தேடுகள் வைத்துச் சோதித்து வேறேடு எழுதியிருப்பது. மறுபடி திருநெல்வேலியில் அம்பலவாண கவிராயரிடத்தில் தீர்மானமானது."

இந்த ஏடு ஒரு பாட வேறுபாட்டு ஆராய்ச்சி ஏடு ஆகும்.

பதினெண் கீழ்க் கணக்கு நூல்களுள் திருக்குறளேயன்றி நாலடியார் (5), பழமொழி (1), நான்மணிக்கடிகை (1) முதலிய நூல்கள் (5) உள்ளன. எல்லாவற்றிற்கும் உரையேடுகளும் இங்கு உள. புறத்திரட்டு ஏடுகள் 3 உள்ளன. இந்நூல் பேராசிரியர் வையாபுரிப் பிள்ளையவர்களால் சென்னைப் பல்கலைக் கழக வெளியீடாக வெளியிடப்பட்டுள்ளது (1938).

மாதர் நீதி என்னும் ஒரு சிறு நூல் ஏடு கி. பி. 1914-ல் அச்சிடப்பட்ட அச்சுப் புத்தகத்தைப் பார்த்து எழுதப்பட்டது. இது போன்றே உரிச்சொல் நிகண்டு ஏடுகளுள் ஒன்று புதுவைமாநகரம் குவேற்னமா அச்சுக்கூடத்தில் துத்தென் துரையவர்களால் 1840-ல் பதிப்பிக்கப்

காலப்பழமையான ஏடுகள்







1. சீவக சிந்தாமணி—நச்சிஞர்க்கினியர் உரையுடன் — கொல்லம் 786, கி. பி. 1611.
2. நன்னூல்—விருத்தியுரை — கொல்லம் 857, கி. பி. 1682.
3. திவாகரம் — கொல்லம் 877, கி. பி. 1702.

பட்ட புத்தகம் பார்த்து எழுதியதாகும். இதன் விலை ரூ. முக்கால் என்னும் விவரத்தையும் எழுத்தாளர் ஏட்டில் பொறித்துள்ளார். சதுரகராதி ஏடுகள் அச்சு நூலைப் பார்த்து எழுதப்பட்டனவாக இருத்தல் கூடும். அச்சுப் புத்தகம் வந்த பின்பும் புத்தகம் கிடைப்பதன் அருமை நோக்கி ஏட்டில் எழுதி வைத்துக்கொண்டார்கள் என்று தோன்றுகிறது.

சிலப்பதிகாரம், சிந்தாமணி, சூளாமணிக் காவிய ஏடுகள் உள. இவற்றுள் சீவக சிந்தாமணி உரையேடு ஒன்று கொல்லம் 786-ல் அதாவது கி. பி. 1611-ல் எழுதப்பட்டதாகும். இங்குள்ள ஏடுகளில் காலக் குறிப்புடையவற்றை வைத்து நோக்கும் போது இதுவே பழமையானதாகக் காணப்படுகிறது. இதிலிருந்து இங்குள்ள ஏடுகளுள் 400 ஆண்டுகளுக்கு மேற்பட்ட பழமையுடையனவும் உள்ளமை புலப்படும். சிலப்பதிகாரத்தைத் தழுவி அமைந்த கோவலன் கதை என்னும் அம்மானை ஏடு இதுவரை அச்சில் வாராத ஒன்றாகும்.

தேவாரம், திருவாசகம், திருவிசைப்பா முதலிய திருமுறை ஏடுகளும் நாலாயிரப் பிரபந்த ஏடுகளும் உள (11). அருணகிரிநாதர் திருவகுப்பும் உளது. சேக்கிழார் பெரிய புராணம், திருவிளையாடற் புராணம், வில்லி பாரதம், செவ்வைச் சூடுவார் பாகவதம், கூர்ம புராணம், திருப்பெருந்துறைப் புராணம், பிரமோத்தர காண்டம், நளவெண்பா, நைடதம், அரிச்சந்திர புராணம் முதலிய பிற்காலக் காவியங்கள் பலவாகும்.

மெய்கண்டார் முதலியோர் அருளிய சைவ சித்தாந்த சாத்திரம், இரு சமய விளக்கம், நாஞஜீவ வாதக் கட்டளை, ஞானவாசிட்டம் முதலிய தத்துவ நூல்களும் காணப்படுகின்றன. சமண சமய தத்துவ விளக்க நூலாகிய ஜீவஸம்போதனை ஏடுகள் இரண்டு இங்கு உள.

சிறு பிரபந்த ஏடுகளும் பலவே. பிள்ளைப் பெருமாளையங்கார் நூல்கள், தஞ்சைவாணன் கோவை, கலிங்கத்துப் பரணி முதலியன குறிப்பிடத்தக்கன. மற்றும் அந்தாதி, பிள்ளைத்தமிழ், விசித்திர மடல், வண்ணம், விருத்தம், ஊசல், அம்மானை, உலா, விலாசம், மாலை, வருக்கக் கோவை, சதகம், கலம்பகம், தூது, பள்ளு, வெண்பா. கலித்துறை, குறவஞ்சி முதலியவை பற்றிய நூல்கள் உள. இவற்றுள் சில இன்னும் அச்சிடப் பெறுதனவாகும்.

முத்துத் தாண்டவர் பதம், சிற்றின்பப் பதங்கள், இராம நாடகக் கீர்த்தனை முதலிய இசை நூல்களோடு பரத சாஸ்திரம் பற்றியும் இரண்டு ஏடுகள் உள்ளன. சோதிட நூல்களாகிய குமாரசுவாமியம், உள்ளமுடையான், சினேந்திர மாலை ஆகியவையும் கணக்கதிகார ஏடுகளும் உள. 'பகவற் கீதை வசனம்' என முழுவதும் உரைநடையாய் அமைந்த ஏடு ஒன்றும் உளது. இவ்வாறாக இங்கு உள்ள ஏடுகளின் பொதுநிலையை ஒருவாறு கணிக்க இயலுகிறது. இவை ஒவ்

வொன்றையும் நன்கு பரிசோதித்தால் மேலும் பற்பல செய்திகள் தெரியவருதல் கூடும்.

இவற்றுள் இதுவரை அச்சாகாத நூல்களை முற்பட எடுத்து அச்சில் வரச்செய்வது ஓர் அரிய பணியாகும். 'நென்னற் கண்ட திருமேனி இன்று பிறிதா நிலை தளரும்' என்று இராமபிரானைக் குறித்துக் கம்பன் கூறியாங்குப் பழமையான ஏட்டுச் சுவடிகள் ஒரு நாளைக் கொருநாள் தளர்வுற்றுக் கொண்டிருக்கின்றன. ஏட்டை உண்டே நெடுங்காலம் வாழும் பூச்சி வகைகள் அவற்றுடன் வாழ்ந்து கொண்டிருக்கின்றன. அடிக்கடி எடுத்துப் பிரித்துப் பார்க்கப் படாததால் சில ஏடுகள் ஒன்றோடு ஒன்று ஒட்டிக் கொண்டு பிரிக்க முடியாத நிலையையும் எய்தியுள்ளன. இத்தகைய நிலைமை மாறி இங்குள்ள ஏட்டுக் கருவூலங்கள் தக்க முறையில் கண் காணிக்கப்பட்டுப் பயன்படுத்தக்கூடிய காலம் மலர வேண்டும்.

ஏட்டுச் சுவடிகளின் நிலைமையை அறிவதற்குத் துணை செய்தவர் களுக்கு நன்றி பாராட்டி இவ்வறிமுகவுரையை நிறைவு செய்வது பொருத்தமாகும். தேசிய நூல் விவரப் பட்டியலின் தமிழ்ப் பகுதியைத் தொடக்கக்கால முதல் தொகுத்து வெளியிட்டு வருபவர் திரு. பி. நா. வேங்கடாச்சாரியர் அவர்களாவர். நான் தமிழ் நாட்டு அரசாங்கத் தின் தமிழ் நூல் விவர அட்டவணைப் பொறுப்பிலிருந்த போது (1960-1969) தொடக்கத்திலேயே திரு. ஆச்சாரியர் அவர்களோடு தொடர்பு கொண்டிருந்தேன். நான் தொகுத்த அட்டவணைத் தொகுப் பிற்கு அவர்கள் வெளியிட்டிருந்த இந்தியத் தேசிய நூல் விவரப் பட்டியல் நூல்கள் வழித்துணையாய் அமைந்தன. அவர்களோடு கலந்து தமிழ் நூல் விவர அட்டவணைக்கான முறையை வகுத்தமைத் தேன். அதுமுதல் அவர்கள் தொடர்பும் நட்பும் பல காலமும் வளர்ந்து வருகின்றன. கல்கத்தாவிற்குச் செல்லப் பல மாதங் களுக்கு முன் நான் திட்டமிட்டு அவர்களோடு கடிதத் தொடர்பு கொண்டேன். அங்கு வந்து தங்கிப் பணிபுரிவதற்கான வசதிகளைச் செய்து தருவதாக அறிவித்திருந்தார்கள். அதுபோலவே அங்குத் தங்கிப் பணிபுரிய வசதியான ஏற்பாடுகளைச் செய்துதவினார்கள்.

தங்குவதற்கு வசதியான இடம் வாய்ப்பது கல்கத்தா நகரத்தில் எளிதல்லவே? பேராசிரியர் வையாபுரிப்பிள்ளை யவர்களின் மூன்றா வது மகள் வயிற்றுப் பேரன் திரு. பாலகிருஷ்ணன் என்பார் அங்கே மெக்கான் கம்பெனியில் பொறியாளராய்ப் பணியாற்றி வருகிறார். அவரும் அவருடன் பணிபுரியும் பொறியாளர்களான திருவாளர்கள் நாராயணன், டி. டி. சாரி, பழநியப்பன் என்பவர்களும் வசதியான வீடு ஒன்றில் (77, தாலுகஞ்சு சர்குலர் ரோடு, புது அலிப்பூர்) தங்கி வருகின்றனர். அந்த இடத்தில் திரு. வேங்கடாச்சாரியர் எங்களுக்குத் தங்க ஏற்பாடு செய்துதந்தார். என் மனைவி சரஸ்வதியும் உடன் வந்திருந்ததால் உணவுப் பிரச்சினையும் ஏற்பட வில்லை. தேசிய நூல் விவரப் பட்டியல் தொகுப்பில் உதவியாளரா யிருந்துவரும் திரு. மகாலிங்கம் என்பவர் வேற்று மொழி வழங்கும்

ஊரில் எங்களுக்குப் பக்கத் துணையாய் இருந்தார். கல்கத்தாவிலேயே பல ஆண்டுகள் தேசிய உயர்நிலைப்பள்ளியில் தமிழாசிரியராயிருந்துவரும் திரு. ஜெக. சீநிவாஸன் அவர்களும் அவ்வப்போது உதவி வந்தார்கள். தமிழன்பர்களின் உதவியினால் சென்னையிலிருப்பது போலவே எவ்வித சிரமுமின்றித் தங்கியிருந்து பணியாற்ற இயன்றது. இத்தகு அன்பர்களுக்கு எங்கள் நன்றி என்றும் உரித்தாகும்.

தேசிய நூலகத்தின் தமிழ்ப் பகுதிப் பொறுப்பில் இப்பொழுது இருந்து வருபவர் திருமதி புஷ்பவேணி கோபி அவர்களாவர். இவர்கள் நான் தொகுத்து வெளியிட்ட தமிழ் நூல் விவர அட்டவணையின் முதல் தொகுதிக்கு மதிப்புரையைத் தேசிய நூலக இதழில் வழங்கியவர். அது முதல் இவர்களும் அறிமுகமாயிருந்தார்கள். இவர்களும் இவர்களுடன் பணிபுரியும் திரு. பாலசுப்பிரமணியன், குமாரி சத்திய பாமா ஆகியோரும் செய்த உதவிகளும் நன்றியுடன் போற்றத்தக்கவை.

பேராசிரியருடைய ஏட்டுச் சுவடிகள் வகைப்படுத்தப்படாமல் வைக்கப்பட்டிருந்தன. அவற்றை எடுத்து இதுவரை யாரும் பயன்படுத்தியதும் இல்லை. திவாகரச் சுவடிகள் இத்தொகுப்பில் எங்கெங்கோ மறைந்து கிடந்தன. ஏற்கெனவே அவர்கள் எண்ணிட்டு வைத்துள்ள முறையை மாற்றித் திவாகரச் சுவடிகளைத் தெரிந்தெடுத்துக் கொள்ள அனுமதியளித்தனர். அதுமட்டுமன்றி எல்லா ஏடுகளையுமே திவாகரத்தைத் தேடும்போது இனம் பிரித்துத் தருமாறும் கேட்டுக் கொண்டார்கள். அதோடு ஏடுகளைப் பிரித்து ஒழுங்கு செய்வதில் தம்முடன் பணிபுரியும் திரு. பாலசுப்பிரமணியன், குமாரி சத்தியபாமா இருவரையும் உடனிருந்து உதவுவதற்கும் ஏற்பாடு செய்தனர். சிற்சில சமயம் தேசிய நூல் விவரப் பட்டியல் தொகுப்புப் பகுதி திரு. மகாலிங்கம் அவர்களும் உதவினர். மற்றும் தேசிய நூலகத்தின் இந்தப் பகுதிக்குப் பொறுப்பான அன்பர்களும் உதவியாயிருந்தனர். ஏடுகளை இனம் பிரிக்க உதவியது மட்டுமன்றி ஏடுபற்றிய விவரங்களையும் சிறப்புக் குறிப்புகளையும் சொல்லச் சொல்லச் சற்றும் சோர்வின்றி உடனிருந்து எழுதி உதவிய துணை ஆய்வாளர் டாக்டர் இ. சுந்தரமூர்த்தி அவர்களின் உழைப்பு மிகப் பெரிது. 'துணையோடல்லது நெடுவழி ஏகேல்' என்னும் முதுமொழிக்கு ஏற்ப இந்நெடுந்தொலைவுப் பயணத்துக்கு ஏற்ற துணையானர் அவர். தேசிய நூலகத்தின் பொறுப்பாளர்களில் ஒருவரான திரு. நாகராசன் அவர்களும் எங்கள் பணி நன்கு நடைபெற ஆவன செய்தார்கள். இத்தகைய தமிழன்பர்களின் உதவிகளினால் தேசிய நூலகத்திலுள்ள தமிழ்ச் சுவடிகளின் நிலைமையைப் பொதுவாக ஓரளவாகிலும் நோக்க இயன்றது. எல்லாருக்கும் என் உளமார்ந்த நன்றி உரியதாகும்.

5. ஜெயகாந்தனின் 'அட சும்மா கெட புள்ளே'வில் ஒரு மனிதன்

டாக்டர் மா. செல்வராசன்
தமிழ் விரிவுரையாளர், சென்னைப் பல்கலைக் கழகம்.

இந்த நாட்டில் ஒழிக்க முடியாதவை எவ்வளவோ உண்டு. அவற்றுள் கள்ளும் ஒன்று. மனிதன் வென்றவை எத்தனையோ? ஆனால் மனிதனை வென்றவையும் உண்டு. அவற்றுள் இந்தக் கள்ளையும் பணத்தையும் கட்டாயம் சேர்த்தல் வேண்டும். சங்க காலத்தில் குடித்து மதர்த்த இந்தச் சமுதாயத்திற்குச் சிவப்பு விளக்கைக் காட்டியவர் திருவள்ளுவர். ஆனாலும்கூட இன்னும் குடி இந்த நாட்டில் நிரந்தரக் குடியாகவே இருக்கிறது. அதன் குடியுரிமையைப் பறிக்க முடியவில்லை. காந்தியடிகளால் இந்தக் கள் கட்டுப்படுத்தப்பட்டதாகக் கூறலாம். ஆனாலும் கள்ளக் கள் பல பங்கு மிகுதியாகி விட்டதைக் கண்டிப்பாக ஒப்புக்கொண்டே ஆக வேண்டும். காந்தியடிகளைப் போலவே அவருடைய கருத்துகளையும் கல்லறைக்கு அனுப்பியாயிற்று. ஆகவே இப்போது இந்தியா இரண்டு மாநிலங்களைத் தவிர முழுமையாகக் குடியுரிமை பெற்ற நாடாகத் திகழ்கிறது.

அண்மைக் காலமாகத் தமிழ்நாட்டில் கள்ளச் சாராயம் ஆறு போல் பெருகிவிட்டதாகப் பேசப்படுகிறது. சட்டத்தின் பல்லக்கில் சாராயம் உலா வருகிறது. தேநீர்போல் தெருவெல்லாம் கிடைக்கிறதாம். நிகழ்காலத்தைப் படைப்பதிலே நிகரற்று விளங்கும் ஜெயகாந்தன் இந்தச் சாராய ஓட்டத்தைத் தமது கதைக்குப் பின்னணியாக எடுத்துள்ளார். கெட்டுப் போகிற பெண்களை மையமாகக் கொண்டு எத்தனையோ கதைகள் வந்துள்ளன. சாராயம் குடிப்பது தவறு என அறிவுரை கூறத் தயங்குகிற ஜெயகாந்தன் நல்ல குடும்பத்துப் பெண் ஒருத்தி நடுத்தெருவுக்கு வந்து நாற்றமெடுத்து நிற்பதைக் காணப் பொறுக்கவில்லை. எனவேதான் பரத்தமை ஒரு தொழில் என வாழும் லீலாவைத் திருத்துகிறார். ஆனால் சாராய வாணிகத்திலிருந்து சபாபதியை விலக்கியவர் குடிப்பதிலிருந்து அவனை விலக்காமல் விட்டு விடுகிறார்.

கல்வியறிவில்லாத சென்னை நகரத்துக் கடைநிலைச் சமுதாயன் சபாபதி. ஒழுங்காகப் பள்ளிக்கூடம் போய் உருப்பட விரும்பாத

ஆயிரக் கணக்கான பிள்ளைகளுள் அவனும் ஒருவன். ஆகாத் தோம்பி ஆப்பயன் அளிப்பதே அவன் குலத்தொழில். ஆனல் அவனுக்கு அந்தத் தொழிலிலும் ஆர்வமில்லை. மாமன் மகள் உண்ணுமுலையை மணப்பதில் மட்டும் தாய் சொல்லை தட்டவில்லை. கள்ளச் சாராயம் கடத்துவதில் கைதேர்ந்த ஆளாகிவிட்டான். அவன் கற்றிருந்த கார் இயக்கம் இதற்குக் கை கொடுத்தது.

ஒரு விடுதியில் ஊர்மேல் போகிறவளாக லீலாவைச் சந்தித்த போது அவன் துடித்துப் போகிறன். சின்னவயதில் தாய்க்கு உதவி யாகச் சில நேரங்களில் வாடிக்கையாளர் வீடுகளுக்குப் பால் கொண்டுபோய்க் கொடுத்து வருவான். அவற்றுள் முதலியார் வீடும் ஒன்று. கண்ணியமான அந்த மனிதர் தாழ்ந்துபோன தன் குடும்பம் தலை நிமிர்வதற்காகப் பண உதவியும் செய்தார். அவருடைய பெண் சிறுமி லீலாவின் அழகு இவனை அந்தச் சிறுவயதிலேயே கனவுகளில் உலாவரச் செய்திருக்கிறது. அந்த லீலாவை ஒரு பரத்தையாகக் கண்டதும் அதிர்ந்து போகிறன். அவளைத் திருத்த வேண்டும் என் பதை ஒரு தவமாக மேற்கொள்ளுகிறன். சாராயக் கடத்தலில் குண்டடிபட்டு மருத்துவமனையில் காவல் அறையின் கண்காணிப்பில் கிடப்பதாகக் கதை தொடங்கி நான்கு குழந்தைகளுக்குத் தந்தை யான நிலையிலும் லீலாவின் அன்புச்சிறையில் மகிழ்வதாகக் கதை முடிகிறது.

எல்லோரும் திருந்த வேண்டும் என அறமுரைப்பது இந்தக் கதையின் நோக்கம் அல்ல. ஆனல் திருந்துகிறவர்களுக்கு நம்பிக்கை ஊட்ட வேண்டும் எனத் தீர்மானமாகக் கருதுகிறர் ஜெயகாந்தன். அண்மையில் வெளிவந்த தப்புத்தாளங்கள் என்னும் படத்தின் முடிவு இவருக்கு உடன்பாடல்ல என்பது தெரிகிறது. கதையிலும் ஓரிடத்தில் கடுமையாகக் கண்டனம் செய்கிறர். அப்படத்து நோஞ்சான் முடிவின் தாக்குரவுகள் இந்தக் கதை எழுதக் கார ணமோ என ஐயுற நேர்கிறது. மனிதன் எப்போதும் நம்பிக்கைப் படிக்கட்டுகளிலே கால் வைக்க முயல்பவன். எனவே அவனை நொண்டியாக்கிவிட ஜெயகாந்தன் தயாரில்லை.

சட்டத்தைப் பக்கவாதத்தால் தாக்கும் ஒரு சமுதாயத்தின் சார் பாளன் சபாபதி. கள்ளச் சாராயக் கடத்தல் தொழிலில் ஈடுபட்டிருந் தாலும் கட்டின மனைவிக்குத் துரோகம் புரியாதவன். நாலு குழந்தை களுக்குத் தந்தையாகும்வரை இப்படித்தான் வாழ்கிறன். சமுதாய ஒழுக்கத்தில் தவறுகள் காண முடிந்தாலும் தனிமனித ஒழுக்கத்தில் நம்பிக்கை உடையவன்.

கணவன் தனக்கு மட்டுமே உரியவன் என்ற கருவத்துக்காகவே வாழ விரும்புபவள் உண்ணுமுலை. பெண்கள் எதை வேண்டுமாஞ லும் கணவனுக்காகப் பொறுத்துக் கொள்வரர்கள். ஆனல் கணவனின் அன்பு வேறொருத்தியின்பால் கனிவதை மட்டும் தாங்கிக் கொள்ள மாட்டார்கள்.

> 'பொம்பிளேயை நீ இன்னு அடி, ஒதி, துட்டை புடுங்கிக்கோ, நகையைப் புடுங்கிக்கோ—எல்லாத்தீயும் தாங்கிக்குவாளுவ, இன்னொரு பொம்மனுட்டி கிட்ட நீ மனசிலே பிரியமா இருக்கிறேன்னு வச்சிக்க—உன்னே தூங்கறப்போ தலேயிலே பாறுங்கல்லேத் தூக்கிப் போட்டுக் கூடக் கொன்னுடுவாளுவ'

எனச் சபாபதி சொல்வது சரியான கணிப்புத்தான். இதற்குத் தரப்பட்ட உருவகமே உண்ணுமுலே.

தன்னே ஒரு பரத்தை எனச் சாற்றிக் கொள்வதில் சிறிதும் சங்கடப்பட வில்லே லீலா. பரத்தமை ஒரு தொழில் என வெட்கமின்றிப் பகர்கிருள். சபாபதியும் உண்ணுமுலேயும் கல்வியறிவற்ற ஒரு கடைநிலேச் சமுதாயத்தைச் சார்ந்தவர்கள். ஆனுல் லீலா சாதியால் மட்டும் உயர்ந்தவள் அல்ல, சகல வசதிகளாலும் உயர் வருக்கத்தாள். நாடகம், திரைப்படம் எனக் கலேக் கனவுகளில் ஏமாந்து கற்பிழந்தவள். கலே வாழ்வில் ஒழுக்கத்தைக் கால்தூசு கூட மதிப்பதில்லே என்பதற்கு இவள்கூட ஓர் எடுத்துக்காட்டு. ஒழுக்கத்தை மலிவாக்கி உடலே விற்பதில் உயர்ந்த சாதி தாழ்ந்த சாதி என்ற வேறுபாட்டைக் காணேம். வழி தவறிப் போனவள் மீண்டும் தன் தாயால் வரவேற்கப்படாததால், வாழ்வதற்காக வழி தவறுவதையே வாழ்க்கையாக்கிக் கொள்ளுகிருள். அது அவளுக்குக் கேவலமாகத் தெரியவில்லே. சபாபதியைச் சந்தித்த பிறகு அவனே நம்பித் தனது பழைய தொழிலுக்கு விடைகொடுத்து விடுகிருள். இந்த மூன்று பேர்க்குள்ள போராட்டமே கதை.

முன்பே கண்டதைப்போல் சபாபதி முழுக்க முழுக்க நல்லவன். பரட்டைத் தலேயும் சட்டையற்ற மேனியும் அழுக்குக் கால்சட்டையுமாய்ச் சின்ன வயதில் கறுப்பாய்க் கிடந்த சபாபதியின் பிஞ்சு உள்ளத்தில் மாளிகை வளமும் மட்டற்ற வனப்புமாய்த் தோன்றிய அழகி லீலா ஒரு மயக்கத்தை ஏற்படுத்தியிருந்தாள். எட்டாக் கனி அந்த எழில் சிறுமி என்பது அவனுக்கு அந்தச் சின்ன வயதிலேயே தெரிந்திருந்தும், ஒரு தேவதைபோல் நினேத்துப் பக்தனுய்க் கிடந்தான். அவனது அடிமனத்தில் அவளேப் பற்றிய மலேப்பு ஆழமாய்ப் படிந்திருந்தது. திடீரென ஒருநாள் அவளே விடுதி அறையிலே ஒருவனேடு கண்டபோது அவனுல் தாங்கிக் கொள்ள முடியவில்லே. அவள்மீது அவள் கொண்டிருந்த அந்தப் பிள்ளேக்கால மயக்கத்தின் அமரத்தன்மை மீண்டும் சிலிர்த்தெழுகிறது. தன்னுடைய குடும்பத்திற்கு ஊன்றுகோலாக ஒரு காலத்தில் அவளுடைய தந்தை செய்திருந்த பொருளுதவி ஏற்படுத்திய நன்றியுணர்ச்சி உள்ளத்தில் மேவுகின்றது. எச்சில் பண்டமென உணர்ந்தாலும் அவள்மீது அவனுக்கு ஏற்பட்ட இதயத் தாவல் கட்டுப்படுத்த முடியாமல் போகிறது. ஆனுலும் எச்சில் பண்டமாக இருக்கும்வரை அவளேத் தீண்டவில்லே. அருவருப்பாகவே நினேக்கிருன். மனத்தளவில் இனி உன்னே மட்டுமே எனக்குப் பிடிக்கும் என்று லீலா சொன்னபிறகும் கூட அவன் தன்னே இராமனுகவே கருதி விலகி நிற்கிருன்.

'அவனுக்கு அவள்மீது உண்மையில் எல்லாவிதமான ஆசைகளும் இருந்தாலும் தனக்கு மட்டுமே உரியவளாக இல்லாத ஒருத்தியிடம் அவ்விதம் தன்னை இழந்துவிட அவன் மனம் ஒப்பவில்லை'. ஒரு கால இடைவெளியில் அவளுக்கு நெருப்புத் தேர்வு வைத்துத் தூய்மைப் படுத்திய பிறகே அவளை ஏற்கிறான்.

பிறன்மனை நோக்காத பேராண்மையாளன் சபாபதி ஒரு பரத்தையை எவ்வளவு பண்போடு நடத்துகிறான் என்பது வியக்க வேண்டிய ஒன்று. எங்காவது ஓர் ஓட்டலுக்குப் போகலாமா என இருபொருள்படக் கேட்கிற லீலாவை நெருங்காமலே நிற்கிறான். அவளாகவே நெருங்கி வந்தபோதும், அவனுக்கு உடம்பு கூசுகிறது; விலகிக் கொள்கிறான். இரவெல்லாம் ஒரே அறையில் இருந்தும், லீலா வாங்கப் போகும் பணத்துக்காகப் பச்சையாகவே அவனிடம் வேண்டியும் மறுத்து விடுகிறாள். பணத்துக்காக விலைபோன, சபாபதி நினைப்பதுபோல 'நல்லா தேறின கேசான' ஒரு பரத்தையின் உள்ளத்தில் முதல் முறையாக ஓர் ஆண்மகனைக் கண்ட வியப்பும் மதிப்பும் ஏற்படுகின்றன. 'இவன் என்ன மனிதன்...தன்னை இந்தப் படுக்கை அறையில் உட்கார வைத்துக்கொண்டு பேசிக் கொண்டிருந்துவிட்டு ஒன்றும் பண்ணாமல் கொண்டுபோய் விட்டுவிடுகிறேன் என்று சொல்லுகிறானே'' என மலைக்கிறாள். அவிசாரியாய்ப் போனவளுக்குக் கூட உண்மையான வெட்கத்தை உண்டாக்கி விடுகிறது இவனது செயல்.

சபாபதி கொச்சையான மனிதன். நாகரிகமாகப் பேசத் தெரியாதவன்; நடந்து பழகாதவன். ஆனால் லீலாவிடம் அவன் நடந்து கொள்ளுகிற நடத்தையைப் பார்க்கிறபோது இதோ ஒரு மகாத்மா என்று தான் சொல்லத் தோன்றுகிறது. எனவேதான் அவனை மட்டுமே ஒரு மனிதனாகப் படைக்கிறார் ஆசிரியர்.

சட்டத்திற்கு எதிராகச் சாராயம் கடத்தி விற்றாலும் சபாபதி ஒரு நேர்மையாளன். 'எந்தத் தொழில் செய்தாலும் அதில் ஒரு யோக்யதை வேணும்டா' என்று தன் கையாள் கன்னியப்பனிடம் அவன் சொல்வது ஒரு சான்று.

> 'ஏழைகள் கலப்படச் சாராயத்தையும் விஷத்தன்மை வாய்ந்த கலக்கலையும் குடித்துச் சாகிற செய்திகளைப் பார்த்துச் சபாபதியின் மனம் துடிக்கும். நல்ல சரக்காக இல்லாவிட்டால் நமக்கென்னவென்று கொண்டுபோய்க் காசுக்காகத் தள்ளிவிட அவனுக்கு மனம் வந்ததே இல்லை. அன்றைய தனது வருமானத்தை இழந்துவிடக் கூட அவன் தயாராகி விடுவான்'.

இவை அவன் பண்பு நலனைத் தெளிவாக உணர்த்தும்.

சபாபதியின் தோற்றம் போலவே வாய்ச்சொற்கள் கரடுமுரடாக வனப்பின்றி வந்தாலும் அவன் அடிமனத்தில் எப்போதும் அன்பு

அலைமோதும். குழந்தைகளிடம் அவனுக்குக் கொள்ளை அன்பு. மனைவி உண்ணுமுலைக்கும் அவனுக்கும் இது காரணமாகவே அடிக்கடி மோதல் எழும். மருத்துவமனையில் குண்டடிபட்டுக் கிடக்கும் போது கூடக் குழந்தைகளை ஒன்றும் செய்துவிடாதே என அவளை வேண்டிக் கொள்கிறன்.

> உண்ணுமுலை, உனக்கு எம்மா ஆத்திரம் இருக்கும், கோவம் வரும். அதுக்காகக் கொயந்தைங்களே அடிக்காதே

என வேண்டுகிறன்.

வாழ்க்கையில் அமைதியில்லாமல் ஆத்திரம் வருகிறபோதெல்லாம் குழந்தைகளை வடிகாலாக்கிக் கொண்டு அடித்துத் தீர்க்கிற அன்னையர் பலர். கல்வியறிவில்லாத இந்த மடமைப் பெண்களின் கொடுமையை மூடத்தனம் என மன்னிப்பதா? சபாபதிக்குக் குழந்தைகள்மேல் ஏன் இவ்வளவு இரக்கம். உண்ணுமுலை திடீரென உணர்ச்சிவயப்படுபவள். எப்போது எரிச்சல் படுவாள் எனச் சொல்ல முடியாது.

> அவளுக்கு இருந்த மனோநிலையில் அவள் கன்னத்தைப் பிடித்து இறுகத் திருகினுள். நறுக்நறுக்கென்று தலையில் இரண்டு குட்டுகள் வைத்தாள். பல்லைக் கடித்துக்கொண்டு திட்டினுள். 'உங்கப்பனை ஒண்ணும் துண்ணுட மாட்டாங்க வா சனியனே' என்று தரதரவெனப் பெரிய பையனையும் இழுத்துக் கொண்டு போனுள். பாறேன் நீயும் உங்கப்பனை மாதிரி இந்தக் கதிக்குத்தான் போவே என்று அவனைச் சபித்து காபி வட்டாவால் நெற்றியில் மொத்தினுள்...
>
> நீயும் பூடு அப்படியே. நிம்மதியா பூடும் எனக்கு. என்று ஓட்டலில் இருந்தவர்களுக்கெல்லாம் கேட்கிற ஸ்தாயியில் ஓடுகிற பையனைக் கைநெரித்துச் சாபமிட்டாள்.

இந்த அறியாமைச் சமுதாயத்தில் குழந்தைகள் படுகிற அல்லல் கொஞ்சநஞ்சமல்ல. கைகளாலும் சொற்களாலும் அவர்கள் கசக்கப் படுகின்றனர். ஜெயகாந்தன் படைத்துள்ள இத்தகு காட்சிகளைப் படிக்கும்போது நம் சமுதாயம் எவ்வளவு தாழ்ந்து கிடக்கிறது என இந்தக் குழந்தைகள் ஆண்டிலும் கண்ணீர்விட வேண்டியிருக்கிறது.

இதில் உண்ணுமலைக்கு நேர் முரணுக இருக்கிறன் சபாபதி. குழந்தைகளை அவள் அடித்தால் அவனுல் தாங்கிக் கொள்ள முடியாது. இதற்காக உண்ணுமலையைக் கையாலும் காலாலும் அடித்து உதைக்கிறன். தன்னைச் சுட்ட காவல் அதிகாரியை லாரி ஏற்றிப் பழி தீர்க்க வேண்டும் எனச் சாராயத் தொழில் கூட்டாளிகள் வற்புறுத்தியும் சபாபதி மனிதத் தன்மையுடன் தடுத்து விடுகிறன். இந்த இரக்கமே எருமை மாடுகளுக்கிடையில் அவன் ஒரு மனிதனுகத் திகழ்வதற்குக் காரணமாகிறது.

நேர்மையும் இரக்கமும் கொண்ட சபாபதி ஓர் உண்மையாளன். மனைவி உண்ணுமுலையிடம் லீலா மீது தனக்குள்ள உறவையும் அக்கறையையும் உடைத்துச் சொல்கிறன். ஆனுல் உண்ணுமுலையின் தந்தை இராமக்கோனுன் இந்த உண்மையைக் கேலி செய்கிறன்.

மனைவிக்குத் தெரியாமல் நடந்து கொள்கிற 'தெரவசு' இல்லையே எனச் சபாபதியிடம் குற்றம் காண்கிறான். பாழாகிவிட்ட ஒரு பெரிய இடத்துப் பெண்ணுக்காக அதுவரை இழிவாக எண்ணிவந்த உண்ணாமுலையை இரக்கம் கொள்ளச் செய்கிறான் சபாபதி. ஆனால் தனக்குரிய இடம் பறிபோனது அறிந்ததும் அவள் ஆர்ப்பாட்டம் செய்து அழுது புரள்கிறாள். அந்தக் காட்சிகளைக் 'கண்ணராவி' என எழுதுகிறார் ஜெயகாந்தன். கண்ணகிபோல் அமைதியாக இருக்க அவள் கற்றாளா என்ன?

நேர்மையாளனும் இரக்க மனத்தினனும் உண்மையாளனுமான சபாபதி உறுதியானவன். பழிக்கு அஞ்சுகிற பண்பாளன். எனவே தான் உண்ணாமலையை வீட்டை விட்டு வெளியே தள்ளியவன் மீண்டும் அவளைத் தேடிச் சென்று அழைக்கிறான். குடும்பம் என்ற அமைப்பிலே அவனுக்கிருந்த பிடிப்பு நன்றாகத் தெரிகிறது. லீலாவோடு கூடக் குடும்பமாக வாழவே ஆசைப்படுகிறான். தன்னை நம்பி வந்துவிட்ட லீலாவை என்ன ஆனாலும் சரி என ஏற்றுக் கொள்ளும் உரம் அவனுக்கு உண்டு. அவளைக் காப்பாற்றியே தீர்வேன் என மனத்துள் கொள்கிறான்.

> என்னை நம்பி, ஒயிங்கா யோக்யமா வாழறதுன்னு வந்துட்டவளை—அவ தாயாதான் இருக்கட்டுமே, இதுக்கு முந்தி எத்தினி பேருகிட்ட போனவளாதான் இருக்கட்டுமே... நான் வுட்டுட்டா, அதுக்கப்புறம் அவ வேற வழி யில்லாம... இவ்வளவுதாண்டா இவனுவன்னு இன்னொரு தபா ஊர் மேலே போனான்னா—அதுக்கு இன்னா அர்த்தம்?—நானே அவளை ஊருக்கெல்லாம் கூட்டிக்கொடுத்த மாதிரிதான் ... உசிரே போனாலும் அப்படி நடக்கவுடலாமா?

சபாபதி ஒரு மனிதனாக வாழவேண்டும் என்பதில் எவ்வளவு உறுதியாக இருக்கிறான்.

பரத்தமையைத் தொழிலாகப் பாவித்த ஒரு பெண்ணின் உள்ளத்தில் அதன் இழிவைச் சபாபதி உணர்த்துகிறான்; அதில் வெற்றியும் பெறுகிறான். ஒரு பெண் தானாக இந்தத் தொழிலுக்கு வரமாட்டாள் எனத் தெளிவாக இருக்கிறான். எனவே லீலா மீது அவன் இரக்கம் கொள்வதற்குப் பொருள் இருக்கிறது.

> 'உன்னை மாதிரி ஒரு பொண்ணு நல்லா வாழறதுக்காக என்னை மாதிரி ஒரு மனுஷன் எதுவும் செய்யலாம்'

என்கிறான் சபாபதி. இதனால் அவன் வாழ்வில் அமைதி இல்லாமல் போகிறது. குடிகாரனாக மாறுகிறான்; குடும்பம் இரண்டாகிறது; கொண்ட மனைவி தாய்வீடு போய் விடுகிறாள். இந்த விலையைத் தந்த பிறகுதான் லீலாவை ஏற்க முடிகிறது. ஆனாலும் சபாபதி போன்றவர்களின் வாழ்க்கையில் லீலாக்களின் ஊடுருவல்கள் பொருள் மிக்கதாகவே தெரிகிறது.

சபாபதி வாயிலாகச் சமுதாயத்தின் பல பக்கங்களை நாம் சந்திக்கிறோம். சட்டத்தின் காவலர்களே சாராயத்தைக் குடித்துத் திரிவதும், ஊழல் மிக்கவர்களாக உலாவுவதும் அருவருப்பான காட்சிகள். உருபா எனச் சபாபதி உச்சரித்ததும் காவலிருக்கும்

காவலன் மயங்குகிற மயக்கத்தை அருமையாகப் படைத்துள்ளார் ஜெயகாந்தன். சபாபதி ஒரு காவலன் போலக் கம்பீரமாகவும் காவலன் ஒரு குற்றவாளி போலக் கூனிக் குறுகியும் நடந்து கொள்ளு கிற அவலம் சமுதாய அழுகலை வெளிப்படையாகக் காட்டுகிறது.

குடிகாரர்களோடு பழகி அவர்களைக் கூர்ந்து கவனித்த சபாபதி யின் கூற்று மிகப் பொருத்தமாக இருக்கிறது. பணக்கொழுப்பும் வறுமைக் கொடுமையுமே குடிக்கக் காரணங்கள் என அறிகிறோம்.

> அவர்கள் குடிப்பதற்கான காரணமே ஒன்று மிதமிஞ்சிய சந்தோஷத்தில் மிதக்கிற பணக்கொழுப்பு, மற்றொன்று அதற்கு நேர்மாறானது. வாழ்க்கையின் மந்தம், சகிக்க முடி யாத தரித்திர வாழ்க்கை, எதிர்காலத்தைப் பற்றிய பயம். இந்த வாழ்க்கை வெம்மையைச் சில மணி நேரமாவது மறந்திருக்க, மரத்துப்போக வைப்பதற்கு மிக அவசியமான மருந்தாக இது ஏழைகளுக்குத் தேவைப்படுகிறது.

இருவேறு வகுப்பார்க்கு இருவேறு விதமாக இந்தக் குடி பயன்படு வதை உணர்கிறோம்.

கல்லானாலும் கணவன், புல்லானாலும் புருஷன் என்னும் கருத் துலவிய நாட்டில் கடுஞ்சினம் படுகிற நேரங்களில் அவை காற்றில் பறப்பதைக் காண்கிறோம். உண்ணாமுலை போன்றவர்கள் சினந்து விட்டால் அவர்களின் வாய்களில் பாதாளச் சாக்கடைகளே பாய் கின்றன. லீலா என மயக்கநிலையில் சபாபதி உச்சரித்தபோதும் ஓட்டலில் லீலாவுடன் இருந்ததை ஒப்புக்கொண்டபோதும், உண்ணா முலை கக்குகிற இராட்சச வார்த்தைகளை அவ்வளவு எளிதாகச் செரித்துக் கொள்ள முடியாது.

கதைமாந்தர் படைப்பாலும் கதைப் பின்னலாலும் இந்தக் கதை அழகு பெறுகிறது. பொன்னியின் செல்வனில் வரும் ஆழ்வார்க்கடி யானின் கைத்தடி கூட நம்முள்ளத்தில் ஒரு பாத்திரமாகத் தோன்று கிற அளவிற்குப் படைப்பாற்றல் பெற்றிருந்தார் கல்கி. அதுபோல் இந்தக் கதையில் எருமை மாட்டைக் கூட நம்மால் மறக்க முடி வதில்லை. பச்சையம்மாள், இராமக்கோனன், கன்னியப்பன், காவ லிருக்கும் காவலன் முதலான சிறுமாந்தர்கள் கூட ஆழமாகப் பதி கின்றனர். இது ஒன்றும் ஜெயகாந்தனுக்குப் புதிய வெற்றி அல்ல.

உண்ணாமுலை அருவருப்பாகப் பேசினாலும் அதில் இருக்கிற உண்மைத் தன்மையை நாம் புறக்கணிப்பதற்கு இல்லை. இப்படிப் பட்ட பெண்களை எந்தச் சேரியில் வேண்டுமானாலும் நாம் சந்திக்க இயலும். நிகழ்கால உணர்வுள்ள ஜெயகாந்தனை மீண்டும் ஒரு முறை இந்தக் கதையில் சந்திக்கிறோம் என்பதே நிறைவு.

ஜெயகாந்தனின் நடை எப்போதும் கருத்து வேறுபாட்டுக் குரியது. அவருடைய நடையில் இடம்பெறும் சொற்களின் அரு வருப்பை நம்மால் உணராமல் இருக்க முடியவில்லை.

> உயுந்து, கம்னு வுடாமே, அய்துட்டுப் பூடலாம், இஸ்துகினு, நோங்கிக்கினு, எயவெடுத்த, கெடாசிட்டு, அதுக்கோசரம், பயிதீக்க கொயந்தைகங்களே. அய்த்தே, தபா, பேமானித்

தனம், அபிசாரி, ரூம்பு, அநாபிகலம், பொய்ப்புடா, பீச்ச கால், மயெ, சர்த்தான்வுடு

முதலான சொற்கள் கொச்சையானவையே தவிர அருவருப்பானவை எனக் கூறமுடியாது.

தமிழில் சொற்களை ஆளுவதில் ஒரு தகுதியை மரபாகவும், மதிப் பாகவும் போற்றி வந்தனர். மனிதனின் கழிவைக் கூடப் 'பகரவீ' என்றே எழுதினர். காலப்போக்கில் இவையெல்லாம் கட்டுடைந்து போகின்றன. உள்ளதை உள்ளபடியே காட்டுவதுதான் ஒழுங்கு எனக் கருதும் ஜெயகாந்தன் அருவருப்பான சொற்களை ஆற்றொழுக் காகப் பயன்படுத்துகிறார். ஆனால் அவரிடமும் தமிழ் மரபு இன்னும் வாழ்வதைக் காண முடிகிறது. "...யாப்பையா", ' . த்தா' எனச் சில இடங்களில் குறிக்கிறார். அவையல் கிளவி எனச் சிலவற்றை அவர் உணர்த்தியிருக்கிறார். ஆனாலும் இலக்கியத்தில் இந்த ஆளு கையை, வழக்கை ஏற்பதற்கு இல்லை.

> 'கதிர்கள் அடர்ந்த வயல்வெளியில், விடியற்காலைக் குளிர் காற்றில் மணிகளும் கதிர்களும் சலசலத்துக் குலுங்க, அவற்றில் முத்துமுத்தாய்ப் படிந்திருந்த பணித் துளிகள் மேலெல்லாம் நனைத்துச் சில்லிட அவன் ஓடிக் கொண் டிருந்தான்'

> 'ஏழைகளுக்கு, மிருகங்களுக்கு இணையாகவும் அதைவிடக் கேவலமாகவும் உடல் உழைப்பில் நைந்து போகிற மனித ராசிகளுக்குத் தாலாட்டுப் பாடுகிற இந்தப் போதைத் தாயின் அரவணைப்பு தேவைப்படுகிறது. அவர்கள் அந்தப் போதையின் மயக்கத்தில் ராஜாக்கள் மாதிரி கற்பனை பண்ணிக்கொண்டு நிஜ வாழ்க்கையில் பிச்சைக்காரர்களைப் போல் தரித்திரத்தில் உழன்றார்கள்.

இப்படிப்பட்ட அருமையான கவிதை நடையை நினைத்து அருவருப் பைக் கழுவிக்கொள்ள வேண்டியிருக்கிறது.

சபாபதி என்ற அருமையான மனிதனைப் படைப்பதில் ஜெய காந்தன் வெற்றி பெற்றிருக்கிறார். அட, சும்மகெட புள்ளே என் னும் தலைப்பே பொருத்தமானது.

கதை மாந்தர்களை வாய்ப்புக் கிடைக்கும் போதெல்லாம் எருமை மாடாகக் காட்டுகிறார். உண்ணுமுலையைச் சரியான நாட்டு எருமை எனச் சபாபதி ஓரிடத்தில் கடிகிறான். அவனுடைய தந்தை இராமக் கோனான் கூட ஓரிடத்தில் 'அறிவில்லாத எருமை' எனத் திட்டு கிறான். அந்த இராமக்கோனானை, 'உன்னைவிட எருமைமாட்டு ஜென்மம் உண்டோ' என மனத்துள் சபாபதி மதிப்பிடுகிறான். காவல்துறையினரை, சரியான எருமைமாட்டு ஜென்மங்க எனப் பழிக்கிறான். தன்னையே கூட 'நான் ஒரு புத்திகெட்ட எருமை மாடு' எனத் தாழ்த்திக் கொள்ளுகிறான். ஆனால் கதையின் இறுதி யில் 'என்னே அதிகாரம் பண்ணிகினு, மேய்ச்சிக்கினு திரியறதுக்கு ·· என்னெ என்னெ எருமை மாடுன்னு நினைச்சே' எனச் சிந்திக் கிறான். அவன் ஒரு நாளும் எருமை மாடாக முடியாது; ஏனெனில் அவன் ஒரு மனிதன்.

அச்சில் வாரா அருந்தமிழ்—9

கம்பராமாயணக் கௌஸ்துபம்

ஆசிரியர் :

கெ. என். சிவராஜ பிள்ளை

முதல் தமிழ்த்துறைத் தலைவர்,

சென்னைப் பல்கலைக் கழகம்.

பதிப்பாசிரியர் :

மு. சண்முகம் பிள்ளை

தமிழ் விரிவுரையாளர்,

திருக்குறள் ஆராய்ச்சிப்பகுதி,

சென்னைப் பல்கலைக் கழகம்.

சென்னைப் பல்கலைக் கழகம்

1979

முதற் பதிப்பு : 1979

இதுவரை வெளிவந்த அருந்தமிழ் நூல்கள்:

1. அப்பாண்டை நாதர் உலா
   — தமிழாய்வு I, 1972.
2. நாககுமார காவியம்
   — தமிழாய்வு II, 1973.
3. திருமேற்றிசை அந்தாதி
   — அப்பாண்டை நாதர் உலாவின் தனி வெளியீட்டுப் பிற்சேர்க்கை, 1974.
4. ஈனமுத்துப் பாண்டியன் கதை
   — தமிழாய்வு III, 1974.
5. அடிமதிக்குடி அய்யனுர் பிள்ளைத் தமிழ்
   — தமிழாய்வு IV, 1975.
6. மெய்ம்மொழிச் சரிதை
   — தமிழாய்வு VI, 1977.
7. சேலம் தாலந்தீர்த்த செழியன் மஞ்சரி
   — தமிழாய்வு VII, 1978.
8. மேருமந்தரமாலை
   — தமிழாய்வு VIII, 1978.

முகவுரை

தமிழுலகில் கவிச்சக்கரவர்த்தியாக விளங்குபவன் கம்பன். கம்பன் படைத்த இராமாவதாரம் தமிழ்க் காவியங்களுள் தலைமணி யாய் விளங்குகிறது. கற்றோர் இதயங்களை என்றும் மகிழ்வித்து இன்புறுத்தும் தன்மையது கம்பராமாயணம். உலகில் சிறந்து விளங் கும் மொழிகளுள் ஒன்றாகத் தமிழ் தலை நிமிர்ந்து நிற்பதற்குக் காரண மாய் விளங்குவது கம்பன் காவியமே என்பர்.

" பாரில் பெயரோங்கும் பன்மொழிக்கும் நாணாது
நேரில் நிமிர்ந்துதமிழ் நிற்பதுதான்—சீருயர்ந்து
ஏறுபுகழ்க் கம்பன் இராமகதை யால்வந்த
வீறுகொண் டென்று விளம்பு"

(மலரும் மாலையும் 90)

என்று கவிமணி தேசிகவிநாயகம் பிள்ளை எடுத்துரைக்கிறார்.

கம்பன் கதை நடத்தும் திறமும் அவன் கவியின் நயங்களும் தனிச் சிறப்பு வாய்ந்தவை. கம்பராமாயணம் குறித்து எத்தனையோ வகையான விளக்கங்கள் இயற்றியவர் பற்பலராவர். இவற்றுள் பேராசிரியர் கெ. என். சிவராஜ பிள்ளையவர்கள் படைத்துள்ள கம்ப ராமாயணக் கௌஸ்துபம், கம்பனுடைய பெருங்காவியத்திற்கு விளக்குப் போல் உள்ளது. கம்பன் காவியத்தின் போக்கினையும் அழகுகளையும் அறிமுகப்படுத்துவதோடு விமரிசன முறையில் அதன் பல்வேறு கூறுகளையும் எடுத்துப் பாநடையிலே விளக்கம் தருகிறார் பேராசிரியர்.

கம்பராமாயணக் கடலுள் இளமைமுதலே நன்கு திளைத்தவர் கெ. என். சிவராஜபிள்ளை. இவருடைய தமையனாரும் கம்பராமா யணப் பிரசங்கம் செய்வதையே தொழிலாகக் கொண்டு வாழ்ந்து, 'கம்பராமாயணம் குமரேச பிள்ளை என்று நாடு போற்ற வாழ்ந்தார். கம்பன் காவியத்தில் பேரீடுபாட்டோடு வாழ்ந்த தமிழ்க் குடும்பத் தில் வந்த பேராசிரியர் இந்நூலுக்கு ஓர் ஒப்பற்ற அணிகலமாகக் கௌஸ்துபத்தை ஆக்கியளித்துள்ளார். திருமாலின் பெருமை பேசும் கம்பராமாயணத்தின் அருமை பெருமைகளை எடுத்துரைத்து, அதன் ஒப்பற்ற பெரும் புகழை உலகிற்கு எடுத்துக் காட்டுவதற்காக இயற்றப்பட்ட இந்தச் சிறு காவியத்திற்குக் 'கம்பராமாயணக் கௌஸ்துபம்' என்னும் பெயரைச் சூட்டியுள்ளார்.

இச் சிறுகாவியம் கம்பராமாயணம் போலவே விருத்தக் கவியால் அமைந்தது. கௌஸ்துபத்தின் உட்பிரிவுகளுக்கும் கம்பனிற் போலப் படலம் என்னும் பெயரினையே ஆசிரியர் தந்துள்ளார். முன்னுரைப் படலம் முதலாக கவி இலக்கணப் படலம் ஈருகப் பத்துப் படலங்கள் இதில் உள்ளன. இப் படலப் பெயர்களை நோக்கினும் ஆசிரியர் கம்பனையும் அவனது பெருங்காவியத்தையும் எந்தெந்தவகையில் விளக்கிக் காட்டுகிருர் என்பது தெள்ளத் தெளியத் தெரியவரும்.

கௌஸ்துபத்தில் உள்ள பாடல்கள் 422 விருத்தங்கள். அங்கங்கே ஆசிரியர் உதாரணமாக எடுத்துக் காட்டிய கம்பராமாயணப் பாடல்கள் 39. ஆக 461 விருத்தக் கவித்திறங்கள் இதில் உள.

கம்பராமாயணப் பாடல்களை முழுமையாய் எடுத்து உதாரணங் காட்டியதோடு கம்பன் கவியின் செஞ்சொற்ருெடர்களையும் எடுத்துத் தம் வாக்கோடு இணைத்தும் இழைத்தும் தந்துள்ளார். கம்பன் வாக்குகளை மாற்றமின்றி அப்படியே எடுத்துப் பயன்படுத்திய இடங்களில் இரட்டை மேற்கோள் குறியிட்டுக் காட்டியுள்ளார். கம்பன் கவித் தொடர்களையே சிற்சில வேறுபாட்டோடு தம் பாடலில் அமைக்கும் பொழுது ஒற்றை மேற்கோள் குறியிட்டுக் காட்டியுள்ளார். இவர்தம் பாவின் போக்குகள்கூடப் பல இடங்களில் கம்பனின் நடையை ஒத்துக் காணப்படுகின்றன.

ஆராய்ச்சிப் பேரறிஞர் கெ. என். சிவராஜ பிள்ளையவர்கள் சென்னைப் பல்கலைக் கழகத் தமிழ்த்துறையின் முதல் தலைவராய் விளங்கியவர். அவருடைய நூற்ருண்டாகிய இந்த 1979 ஆம் ஆண்டு தமிழ்த்துறை வெளியிட்டு வரும் தமிழாய்வு இதழைப் பேராசிரியர் சிவராஜபிள்ளை நினைவு மலராக வெளியிடத் தமிழ்த்துறைத் தலைவர் டாக்டர் சி. பாலசுப்பிரமணியன் அவர்கள் முனைந்து திட்டமிட்டார்கள். இவ்விதழில் 'அச்சில் வாரா அருந்தமிழ்' நூல் வெளியீட்டு வரிசையில் பேராசிரியர் சிவராஜ பிள்ளையவர்களின் இதுவரை வெளிவாராத நூல் ஒன்றை வெளியிடத் திட்டமிட்டோம். அதன் விளைவாகவே கம்பராமாயணக் கௌஸ்துபம் இப்பொழுது அச்சில் வெளிவருகிறது.

'கம்பராமாயணக் கௌஸ்துபம்' என்பதனை ஆசிரியர் சிவராஜ பிள்ளை 1927 ஆம் ஆண்டிலேயே பாடி முற்றுவித்திருந்தார் என்பது அந்த ஆண்டில் காரைக்குடியிலிருந்து வெளிவந்த குமரன் என்னும் பத்திரிகையில் முதல் 12 பாடல்கள் வெளிவந்தமை கொண்டு அறியலாம். அதன் பின்னர் மதுரைத் தமிழ்ச் சங்க வெளியீடாகிய 'செந்தமிழ்'ப் பத்திரிகையின் 28 ஆம் தொகுதியில் கௌஸ்துபத்தின் முதல் 105 பாடல்கள் மூன்று பகுதியாக அச்சாயின. அச்சான பகுதிகளை மீண்டும் மீண்டும் பார்த்துச் சிற்சில இடங்களில் பாடங்களை மாற்றியும் அமைத்திருந்தார். இதன் பிற்பகுதிகள் ஆசிரியர் வாழ்ந்த காலத்தில் தொடர்ந்து வெளிவாராமலே நின்றுபோயிற்று.

பேராசிரியரின் அச்சிடப்பெறாத நூல்கள் அவருடைய குமாரர் திரு. நாராயண பிள்ளை, புதல்வி திருமதி சரசுவதி அம்மாள் ஆகியோரிடமிருந்து, இப்பொழுது அண்மையில் நாகர்கோவிலில் தோற்றுவிக்கப்பட்டுள்ள பேராசிரியர் சிவராஜ பிள்ளை நினைவு மன்றச் செயலாளர் திரு. எஸ். சிவராஜ பிள்ளையவர்களிடமிருக்கிறது. நூற்றாண்டு நினைவாகத் தமிழாய்வில் வெளியிட இந்நூலை விரும்பிக் கேட்ட பொழுது அவர்கள் மனமுவந்து மூலப்பிரதியை அனுப்பித் தந்தார்கள். மூலப்பிரதியைத் தந்துதவிய திரு. எஸ். சிவராஜ பிள்ளையவர்களுக்கும் பேராசிரியரின் சந்ததியினருக்கும் சென்னைப் பல்கலைக் கழகத்தின் சார்பாக நன்றி தெரிவித்துக்கொள்ளுகிறேன்.

ஆசிரியர் அமைத்த மூல நூலை அப்படியே பதிப்பித்ததோடு அடிக்குறிப்பில் விளக்கக் குறிப்புகளை நான் தொகுத்து அமைத்துள்ளேன். நூலிறுதியில் பாடல் முதற்குறிப்பு அகராதியும் பொருட்குறிப்பு அகராதியும் சேர்க்கப்பட்டுள்ளன.

'தமிழ்க் கவிவாணருக்கு ஒரு விண்ணப்பம்' என்னும் தலைப்பில் செந்தமிழ்ப்பத்திரிகையில் (தொகுதி 19, 1921) சிவராஜ பிள்ளையவர்கள் எழுதிய ஆய்வுரை பல்லாண்டுகளுக்குமுன் வெளிவந்துள்ளது. இது பொதுவாகத் தமிழ்க் கவிதைபற்றிய விமரிசனமாகவும் சிறப்பாகக் கம்பன் காவியப்பாங்கினை எடுத்து விளக்குவதாயும் உள்ளது. ஆகவே, ஆசிரியர் எழுதிய இவ்வுரைநடைப் பகுதி கம்பராமாயணக் கௌஸ்துபத்திற்கு ஒரு முன்னுரை போலக் காணப்படுகிறது. ஆதலால், இதனை நூல்முகப்பில் சேர்த்து அச்சிட்டுள்ளேன். இன்றைய இலக்கியத்திறனாய்வாளர்களுக்கு இந்தக் கட்டுரையும் கௌஸ்துப நூலும் முன்வழி காட்டியாய் அமைகின்றன. எனவே, இலக்கியத்திறனாய்வாளருக்கு இது பெருவிருந்தாகும்.

தமிழாய்வு ஒன்பதாம் தொகுதியில் வெளிவரும் இந்நூலைத் தனி நூலாகவும் வெளியிட வாய்ப்பளித்த துணைவேந்தர் பெருந்தகை ஜி. ஆர். தாமோதரன் அவர்களுக்கும் சென்னைப் பல்கலைக்கழக ஆட்சிக் குழுவினருக்கும் தமிழுலகம் என்றும் நன்றி செலுத்தும் கடப்பாடுடையது.

சென்னை-5
24—7—79

மு. சண்முகம் பிள்ளை

பிழை—திருத்தம்

பக்கம்	பாட்டு	வரி	பிழை	திருத்தம்
21		29	இளிய	இனிய
22		7	பராமாயணம்	கம்பராமாயணம்
25	1	4	கிறைத்தண்	கிறைத்ததண்
35	71	3	வார்க்கொண்டதோர்	வார்கொண்டதோர்
36	75	1	தணிதலருஞ்	கணிதலருஞ்
36	76	1	கவிதெரியற்	கவித்தெரியற்
39	98	2	தீயெ’ னு	தீயெனு
40	104	3	கம்பியன்	கம்மியன்
42	117	4	றுள்ளிதந்த	றுள்ளித்தந்த
70	281:1	1	பாருமேடாது	பாருமோடாது
73	288	1	யென்றனன்	யென்றனள்
75	302	1	தாயரற்பரி	தாயரிற்பரி
83	338	1	மான்விவி	மான்விழி
86	356	1	கிளவுச்	கிளவிச்
87	357	4	செல்வி	செவ்வி

பொருளடக்கம்

	தமிழ்க்கவிவாணருக்கு ஒரு விண்ணப்பம்			1
1.	முன்னுரைப் படலம்	...	...	25
2.	ஆக்கியோன் படலம்	...	...	28
3.	உவமைப் படலம்	...	...	37
4.	இயற்கை வருணனைப் படலம்	...	...	41
5.	கதைமக்கட் படலம்	...	...	47
6.	மெய்ப்பாட்டு வருணனைப் படலம்	...	...	57
7.	சொல், நடை வனப்புப் படலம்	...	...	68
8.	புலமைத்திறன் படலம்	...	...	79
9.	அறவுரைப் படலம்	...	...	89
10.	கவி இலக்கணப் படலம்	...	...	91
	பாடல் முதற்குறிப்பு அகராதி	...	...	96
	பொருட் குறிப்பு அகராதி		...	102

கம்பராமாயணக் கௌஸ்துபம்

பேராசிரியர் சிவராஜபிள்ளை கையெழுத்து

தமிழ்க்கவிவாணருக்கு ஒரு விண்ணப்பம்

கனவான்களே !

கவியின் உண்மை லக்ஷணத்தைச் செவ்விதின் உணர்ந்து நாம் இன்புறுதற்பொருட்டும், நமது தாய்மொழியாகிய தமிழில் அவ்வகை லக்ஷணங்கள் நிரம்பிய செய்யுளிலக்கியம் கிளையோடி வளர்தற் பொருட்டும், இப் பிரசங்கம் செய்ய நான் முன்வந்துள்ளேன். பிரசங்கம் ஒன்றினால் எனது நோக்கம் நிறைவேறுமோவெனின், ஒருவாறு நிறைவேறு மென்றே நம்புகிறேன். ஒரு நிலத்திற் பயிர் செழித்து உண்டாகவேண்டுமானால் அதற்கு நிலத்தின் வளமும் வித்தின் நலமும் முக்கியமானவையாம். வித்துவோன் எத்தன்மையனாயிருந்தாலும் விளைவைப் பாதிக்கமாட்டாது. அதுபோலத் தங்களைப்போன்ற பண்புமிக்கோரது மனதிலே சில உண்மைக் கருத்துக்களை விதைத்தால் அது மிக்க பயனைக் கொடுக்கும் என்பதே எனது துணிபு.

நமது தமிழ்ப்பாஷையின் பழமையினையும் பெருமையினையும் குறித்து நான் தங்களுக்கு விரித்துரைக்க வேண்டிய ஆவசியகமில்லை. இந்தியபாஷைகளில் வடமொழியோடு ஒப்பிடக்கூடியது தமிழ் ஒன்றே. வட இந்தியாவில், சமஸ்கிருதமும் அதன் கிளைகளாகிய பங்காளிமுதலிய பாஷைகளும் எப்படிப் பரவி நிலைபெற்றிருக்கின்றனவோ அப்படியே தென்னிந்தியாவில் தமிழும் அதைச் சேர்ந்த இதர திராவிடபாஷைகளும் நின்று நிலவுகின்றன. இதனாலேயே தமிழின் பெருமை இனிது விளங்கும். மேலும், வடமொழிபோல தமிழ் உலகவழக்கு அழிந்துவிடவில்லை. இலக்கியவழக்கோடு ஜனங்களிடையில் இன்றும் உயிர்த்து உலாவுகின்ற 'நாடோடி' பாஷையென்னும் பெருமையும் வாய்ந்துள்ளது நம் தமிழ். இதுபற்றியன்றோ புராதனர்களுள்ளே கல்வியிற்பெரிய கம்பரும், ஆதுனிகர்களில் தமிழ்ப் புலமைசான்ற மனோன்மணீய நூலாசிரியரும் தமிழைக் கீழ்வருமாறு புகழ்ந்துரைக்கின்றார்கள் :

---

* இது 1898-ல் திருவநந்தபுரம் சாலைச் செந்தமிழ்க் கழகத்திற் செய்த பிரசங்கக் குறிப்பினின்றும் விரித்தெழுதப்பட்டது. 'செந்தமிழ்' — தொகுதி 19, பகுதி 6, பக். 169-198-ல் 1921 ஆம் ஆண்டு வெளிவந்தது. இது கவிதைபற்றிய ஒரு விமரிசனமாகும்.

'உழக்குமறை நாலினு முணர்ந்துலக மோதும்
வழக்கினு மதிக்கவினி னும்மரபி னுடி
நிழற்பொலி கணிச்சிமணி நெற்றியுமிழ் செங்கட்
டழற்புரை சுடர்க்கடவு டந்ததமிழ் தந்தான்'

—இராமாயணம்.

'ஆரியம்போ லுலகவழக் கழிந்தொழிந்து சிதையாவுன்
சீரிளமைத் திறம்வியந்து செயன்மறந்து வாழ்த்துதுமே'

—மனோன்மணீயம்.

வடமொழிபோல் தென்மொழிக்கு இலக்கியவிரிவு இல்லையெனினும் முன்மொழி மனிதர்களது நித்தியவியாபாரத்துக் குபகரிக்குந்தன்மையுடையதா யிருக்கின்றது. இது தமிழ்மொழியின் வளர்ச்சிக்குரிய காரணங்களில் முக்கியமானதொன்றென்று நீங்களறிவீர்கள். உலக வழக்கத்திலிருக்கிற ஏனைய திராவிடமொழிகளோடு நமதுமொழியை ஒத்து நோக்கினும் அதன் பெருமை மேம்பட்டே நிற்கும். திராவிட பாஷைகளுக்கெல்லாம் மூலபாஷையாய் நின்றது நமது தமிழ் என்றே பாஷாசாஸ்திர விற்பன்னர்கள் துணிகின்றார்கள். இதன் உண்மை எவ்விதமாயினும் ஆகுக. வயது முதிர்ச்சியாலும் இலக்கியவிரிவினாலும் ஒலி இன்பத்தினாலும் தமிழ் மற்றைய திராவிடபாஷைகளைவிட உயர்ச்சி பெற்றதாகவே இருக்கிறது. இது கேவலம் அபிமானத்தாற் சொல்லும் புனைந்துரையென்று நினையாதீர்கள்.

ஆயினும் நமது பாஷையிலுள்ள செய்யுளிலக்கியங்களிற் சிற்சில குறைபாடுகள் ஏற்படாதிருக்கவில்லை. பிரபந்தங்களின் ரூபத்தை யொட்டியோ அல்லது அவற்றிற் கூறப்படும் பொருளையொட்டியோ ஆராய்ச்சி செய்வோமாகில் இருவிதத்திலும் இலக்கியங்களின் குறை மலையிற்றீபம்போல் மிக்கு விளங்கும்.

நமது பாஷையில் இயற்றப்பட்டிருக்கிற நூல்களெல்லாம் செய்யுள் ரூபத்தில் அமைக்கப்பட்டிருக்கின்றன; வசனரூபத்தில் அமைத்த நூல்கள் இல்லையென்றே கூறவேண்டும். வசனநூல்கள் இல்லாதது தமிழ்ப்பாஷைக்கு ஒரு பெருங்குறைவே. அவைகளின்மையாற் சாதாரண ஜனங்களிடையில் அறிவு பரவுவதற்கு இடமில்லாமற்போனது மாத்திரமல்ல; பாஷையே வளரமாட்டாது ஒரே நிலையில் நின்றுவிட்டது. எவ்வெவ்வழிகளில் நூதனமான சொற்கள் அமையப்பெற்று வழக்கிற் புகுந்து பாஷையை வளர்க்கவேண்டுமோ, அவ்வவ்வழிகளிற் றடைகள் ஏற்பட்டுச் சொல்வளங் குன்றிச் சொல்வனப்பு, சொல்லாற்றல், முதலிய புகழ்தற்குரிய குணங்கள் விருத்தியடையாது போயின. தற்காலத்திற் சிலர் 'நாவல்' என்னும் புதிய கதை நூல்களியற்றி இக் குறையை நீக்க ஆரம்பித்திருக்கின்றனர். இனி வசனநூல், கதை மாத்திரத்தில் நில்லாது சரித்திரம், ஜீவியசரித்திரம், வியாசம், மதிப்

புரை முதலிய பலபிரகாரங்களில் வெளிவரவேண்டும். பிரகிருதி சாத்திரங்களோ, இயற்கையுண்மை மேலெழுந்த தத்துவசாஸ்திரங்களோ, சரித்திரங்களோ, கலைநூல்களோ நம்மிடம் இல்லை. இக்குறைகளும் தக்க வசனநூல்களால் நீக்கப்படவேண்டும். தமிழ்நூல்கள் பெரும்பாலும் செய்யுள்ரூபமாக இருப்பது ஒரு சரித்திர உண்மையை நமக்கு விளக்குகின்றது. ஒவ்வொரு தேசத்தாருடையவும் ஒவ்வொரு சமுதாயத்தாருடையவும் பூர்வ இலக்கிய சரித்திரத்தை ஆராய்ச்சிசெய்தாற் செய்யுள்நடை நூல்களே முதன்முதலில் மிகுதியாக இருந்ததாகக் காணப்படுமென்று மெக்காலே என்னும் ஆங்கிலேய ஆசிரியர் கூறுகின்றார். இவ்வுண்மை நமது பாஷைக்கும் பொருத்தமுடையதாகவே யிருக்கின்றது. நமது பூர்வீகர்கள் இருந்த நிலையினின்றும் நாம் சிறிதும் பெயராது முன் இருந்தபடியே யிருப்பதனாற்றான் நமது இலக்கியமும் ரூபத்தால் மாறுதலடையாது அதன் ஆரம்பகாலத்திலிருந்த நிலையிலேயே இன்றும் இருக்கிறது. ஆனால் தற்காலத்திற் பரவிவரும் நல்லுணர்ச்சியினால் வெகு சீக்கிரத்தில் இக்குறை நிவிர்த்தியாய்விடுமென நம்புவதற்கு இடமுண்டு.

பெரும்பாலும் செய்யுள்ரூபமாகத் தமிழ்நூல்கள் இருப்பதுடன் பொருளைக் கவனிக்குமிடத்து அவை, இதிகாச புராணங்கள், ஞான சாஸ்திரங்கள் என்ற இரண்டில் ஒன்றின்கண் அடங்கியொழிகின்றன. நீடித்தகாலம் நம்மிடம் வெளிநோக்குமியல்பு குறைந்து உள்நோக்குமியல்பு அதிகரித்தே இருந்தது; இன்னுமிருக்கிறது. இதனாலேயே இயற்கைப்பொருள்களைக் குறித்த சாஸ்திரங்கள் குறைந்து மானசிக தத்துவநூல்களாகிய ஞானநூல், தருக்கநூல், சந்மார்க்கநூல் முதலியவை அதிகரித்தன. செய்யுள்ரூபத்தில் நூல்கள் அமைத்துவந்த போதிலும் கவியின் உண்மை லக்ஷணத்தையும், நோக்கத்தையும், கற்றுவல்லாருங்கூடப் பிழைபட வுணர்ந்தார்கள். செய்யுளுக்குரிய விஷயங்களைத் தெரிந்தெடுத்தோ அல்லது அதனை இயற்றவேண்டும் ரீதிகளை விசாரித்துணர்ந்தோ நம்மவர்கள் நூல்செய்தார்களில்லை. இக்குறை இலக்கிய மதிப்பாசிரியர்கள் இல்லாததால் வந்ததேயன்றி வேறன்று. தமிழ்ச்சங்கப் புலவர்களும் பிற்கால ஆசிரியர்களும் இலக்கியங்களைத் தக்கவாறு ஆராய்ச்சிபுரிந்து மதிப்புரை தந்தார்களில்லை. ஆராய்ச்சி வல்லாரது கழகமொன்று ஏற்படாதபடியால் தமிழிலக்கியமென்னும் அகன்ற பிரதேசம் சிற்சில அலங்காரமாளிகைகளால் அழகுபெறுவதோடு நமக்கு அருவருப்புத்தரத்தக்க குடிசைகளையும் குப்பைமேடுகளையும் காட்டி விகாரமடைந்துமிருக்கின்றது. தமிழிலக்கியத்தின் குறைபாடுகளிங்ஙனமிருக்க, தமிழ்க்கவியின் குறைகளைமட்டுமே இங்கே எடுத்து விசாரிப்போம்.

கவியின் பொதுவிலக்கணங்களையும் சிறப்பிலக்கணங்களையும் அறிந்துகொள்ளாது காவியம் அமைக்கத்தொடங்கும் ஆசிரியர் அரங்கின்றி வட்டாடல் தொடங்கும் சிறுவரைப்போல் இடர்ப்படுவர். நற்கலைகளின் ஒரு பிரிவாகிய கவி, நற்கலைகள் எல்லாவற்றிற்கும் பொதுவாகவுள்ள நோக்கத்தைத் தழுவியே நிர்மிக்கப்படல் வேண்டும். நற்கலைகளின் பொதுநோக்கம் இன்பம் பயத்தலே.

இவ்வின்பத்தைச் சித்திரம் சிற்பம் முதலியன ரூபவழியாகவும், இசை அல்லது சங்கீதம் ஒலிவழியாகவும், கவி சொல்வழியாகவும் ஊட்டு கின்றன. 'செஞ்சொற்கவியின்பம்' என்ருர் கம்பநாடரும். இவ் வின்பம் எங்குக் கெடுகின்றதோ அங்கு நற்கலையென்பதே இல்லா தாகின்றது. தமிழ்க்கவிக்கடலிற் சற்று இறங்கி நோக்குவோமானுல் அங்கே ஆரவாரமும் கொந்தளிப்பும் நுரை நிரைகளுமே ஏராளமாகக் காண்போம். கம்பராமாயணம் போன்று பலவகையானும் சிறந்த காவியங்கள் கிடைப்பது அருமையினுமருமை.

முதன்முதல், நம்முடைய கவிஞர்கள் காவியம் புனையுமுன் காவி யத்திற்காம் விஷயத்தைத் தெரிவதிற் கவனம் செலுத்துகிருர்களில்லை. இஃதொரு பெருங்குறை. பௌதிகசாஸ்திரங்களும் தத்துவநூல்களும் காவியநிர்மாணத்திற்கு இடங்கொடுக்குமா? கணிதம், சோதிடம், வைத்தியமுதலிய சாஸ்திரவிஷயங்கட்கும் காவியத்தாற் பிரதிபாதிக் கப்படவேண்டும் விஷயங்கட்கும் எத்துணை வித்தியாசம். இதை அறியமாட்டாமையினுலன்ருே வேதாந்த சித்தாந்த சாஸ்திர வுண்மைகளெல்லாம் காவியத்துறையிலுட்படுத்தப்பட்டன! காவிய இன்பம் தருதற்கொவ்வாக் கணிதத்தையும் கவியிற் புனைந் தனரன்ருே! மருந்தைப்பற்றி இயற்றிய கவிகளெல்லாம் மருந்தினும் கசப்பே! ஞான காவியமெல்லாம் மோன காவியமாகவே முடிந்தன! சோதிடப் பாக்களோவெனின் வாதிடவேண்டிய பாக்களே!

கவியின்பம் கேடுறுவதற்கு இரண்டாவது காரணம் கவித்திறம் சிறிதும் அமையப்பெருத அறிவிலிகளாலும் போலிக்கவிகளாகிய சித்தர் முதலியோர்களாலும் கவியியற்றப்பட்டமையே. பல்லிசாஸ் திரம், பக்ஷிசாஸ்திரம், பாம்பாட்டிச் சித்தர்பாடல், ஞானவெட்டி முதலிய நூல்களை எடுத்துக்கொள்ளுங்கள். இவைகளிற் 'கேளப்பா' என்று தொடங்கி ஏனைய அடிகளில் 'நாளப்பா' 'தாளப்பா' 'மாளப்பா' என்று எதுகை சேர்த்துக் கவியை முடித்துவிடுவார்கள். 'பொருள்' இக்கவிஞர்களுக்கு ஓர் பொருளன்று. சித்தர்களெல்லாம் கவியின் அழகைக் கெடுக்க வந்த பிரசித்தர்களே யென்று அன்னுர் இயற்றிய நூல்களை வாசிக்கும் ஒவ்வொருவரும் ஒப்புக்கொள்ளா தொழியார்.

மூன்ருவதாக, வித்துவான்களென்று மதிக்கப்படு மெவரும் க எழுதப் புகுந்தது கவிச்சிறப்புக் குன்ற வேருெரு காரணமாயிற்று. **கவி பாடுந்திறம் ஒருவனிடம் இல்லையெனின் அவனை ஒரு தமிழ் வித்துவான் என மதித்தலே கூடாதென்ற தப்பெண்ணம் நம்மிடம் வேரூன்றி நிற்கிறது.** இதனுல் உத்தமக்கவிகளாகிய நென்மணி களோடு போலிக்கவிகளாகிய பதர்களும் விரவிக்கிடக்கக் காரண மாயிற்று.

இயற்கையிலேயே கவிவாசனை அமையப்பெருத வித்துவான் களது கவிகளிற் கவிச்சுவை சிறிதும் காணுதலரிது. அவைகள் பல கல்வித் துறையினும் அவர்களுக் குள்ள திறமையினைக் காட்டு

மாயினும் ரசமில்லாக் கனிபோல் இன்பம் சிறிதும் பயவா. அதிவீர ராமபாண்டியனது 'நைடதம்', சிவஞான சுவாமிகளின் 'கம்பரந்தாதி', மகா வித்துவான் மீஞுக்ஷிசுந்தரம்பிள்ளையவர்களின் 'திருத்தில்லை யமகவந்தாதி', முருகதாச ரென்னும் தண்டபாணி சுவாமிகளின் ஒலியலந்தாதி' முதலிய நூல்கள் நான் சொல்லும் உண்மையை விசதமாக்கும். இக்கவிஞர்கள் புத்தி சாமர்த்தியத்திலோ பாண்டித்தியத்திலோ குறைந்தவர்களென யாரும் சொல்லத் துணியார். ஆயினும் அவர்களது பாடல்களை இன்பம் ஒழுகும் பாக்களாக நற்கலையுணர்ச்சியுடையார் மதிப்பரோ? மேலான கவிமாதுரியம் அமையவேண்டுமாயின் ஒரு கவிஞனிடம் இரண்டு விசிஷ்ட தர்மங்கள் ஒருங்கே அமைந்திருத்தல்வேண்டும். அவற்றி லொன்று பிறப்புவிசேடத்தினு லமைவது. அழகில் ஈடுபடும் உணர்ச்சி நலன், அவ்வழகினைக் கருத்தினல் நூதன ரூபங்களில் அமைக்கவல்ல மனோதர்மம், முதலிய குண விசேஷங்கள் ஒரு கவிஞனிடம் பிறவியிலேயே பொருந்தியிருத்தல் வேண்டும். உலகத்திலுள்ள மகாகவிகள் எல்லாரும் இவ்வகைப் பிறப்பு விசேஷமுடையவர்களே. மற்றொன்று அநுபவவிசேடத்தினு லமைவது. லோகாநுபவத்தால் மக்களைப்பற்றியனவும் பிரகிருதியைப்பற்றியனவுமாகிய உண்மைத்தொகுதிகளை உணர்ச்சிவழியே அறிந்தவனுதலோடு காவியப்பயிற்சியும் நிரம்ப உடையனுதல். இவற்ருற் காவியத்திற் பிரதிபாதிக்கவேண்டிய உண்மைகளும் அவ்வுண்மைகளைத் தக்க அழகோடு வெளியிட வேண்டிய பாஷாபரிஞ்ஞானமும் ஏற்படும். இந்த விசேஷகுணமும் மகாகவிகள் எல்லாரிடமும் காணப்படுவனவே.

நான்காவதாகப் பொருளைக்காட்டினும் உருவத்திற்கு அதிகச் சிறப்பு நமது கவிஞர்கள் கற்பித்துவிட்டார்கள். சந்தப்பாக்களும் ஏகபாதங்களும் கோமூத்திரி முதலிய சித்திரக் கவிகளும் பாற்கடலி லெழுந்த விஷமென்று சொல்லலாமேயன்றிப் பிறிதென்சொல்வது? ரதபந்தம், நாகபந்தங்க ளெல்லாம் கவியின் மனோபந்தங்களே யல்லாமல் வேறென்ன? 'மாலைமாற்று' என்பது உண்மைக்கவியின் வேலைமாற்றே! 'சுழிகுளம்' என்பது கவிஞர் மூழ்கும் இழிகுள மல்லவோ! 'காதைக்கரப்பு' என்று கூறுவதைக் காட்டிலும் கவிஞரின் போதகரப்பு என்று சொன்னுற் றவறில்லையே! 'பிறிதுபடு பாட்டு'ச் சமைக்கப் புகும் கவியின் பாடு சிறிதுபடு பாடோ! ஐயோ! இக் கவிஞர்கள் எல்லாரும் வாயையும் மூக்கையும் மூடிச் செவிவழி சுவாசம் விட்டு மாளுகின்ருர்களே! சிவஞானசுவாமிகள் செய்த காஞ்சிப்புராணத்திற் சுரகரீசப்படலம் நோக்கிச் சித்திரப்பாக்களின் விசித்திரங்களைத் தெரிந்துகொள்ளுங்கள். நிரம்பவழகிய தேசிகர் செய்த சேதுபுராணத்தில்,

> 'நேசமோ டுதகமூழ்கி நிலைமொழி தன்னை நீத்தான்
> பூசுர னென்று தொக்க புணர்மொழி யிரண்டு தம்மில்'
>
> — வேதாளவாதச் சருக்கம்

எனவும்,

'வெறுங்கையா ரென்னும்பேரின் மென்மையை வன்மை [செய்யும்

— இலக்குமிதீர்த்தச் சருக்கம்

எனவும் வரும் செய்யுட்களிற் கவியின்பம் உளதாகக் கருதுவாரும் உளரன்றே!

ஐந்தாவதாக, நம்மிடையே கவி, இலக்கண வித்துவான்களால் வரையறுக்கப்பட்டு வளர்ச்சிகுன்றிப் போய்விட்டது. இதனாற் காவியத்துறையில் நூதனக் கருத்துக்களும் நூதன அணிகளும் தோன்றாமற் போயின. சங்க காலத்து இலக்கிய கர்த்தர்கள் இக் கட்டுப்பாட்டினால் வருந்தினார்களில்லை. பிற்காலத்துப் புலவருக் கோவெனின் முன்னோர்களது இலக்கிய இலக்கணநூல்கள் 'சுருதி' போன்று இன்றியமையா ஆதாரங்களாய் முடிந்தன. நூல்கள் இன்னின்ன மொழிகளிற்றொடங்கி, இன்னின்ன மொழிகளில் முடிய வேண்டுமென்றும், உவமானங்கள் இன்னின்ன பொருள்களில் அடங்கியிருக்கவேண்டு மென்றுமுள்ள நிபந்தனைகள் கவிஞனது மனோதர்மத்தை வளரச்செய்யுமா? இலக்கண விளக்கமென்னும் சிறந்த நூல், மலைமகள் என்று அமங்கலப் பொருள்படத் தொடங்கு தலை ஆக்ஷேபித்துப் புலவரேறு என மதிக்கப்படும் சிவஞான சுவாமி கள் குறைகூறினாரென்பதை அறியாதார் யார்? இதைத் தற்காலத்துக் கல்வி வல்லார் அங்கீகரிப்பரோ? மேற்கூறிய சுவாமிகள் செய்தது போன்ற குதர்க்கவாதச் சண்டமாருதத்தினாற் கவியென்னும் பசுங் கொம்பு முற்காலத்திற் சிதற அடிக்கப்பட்டதென நாம் அறிய வேண்டும்.

ஆறாவதாக, நமது காவியங்களெல்லாம் மதசம்பந்தமாக எழுந் தனவாயுள்ளன. பாரதம், இராமாயணமென்னும் இதிகாசங்களும், பெரியபுராணம், கந்தபுராணம், திருவிளையாடற்புராணம் முதலிய புராணங்களும் காஞ்சிப்புராணம், குற்றாலப் புராணம் முதலிய ஸ்தல புராணங்களும் தேவாரம், திருவாசகம், திருவாய்மொழி முதலிய திருமுறைகளும் தாயுமானவர், பட்டினத்தார் முதலியோரது தோத் திரப்பாக்களும் பதிகம், பரணி, பிள்ளைத்தமிழ், கலம்பகம், கோவை, உலா, அந்தாதி முதலிய பிரபந்தத்தொகைகளும் சைவ வைஷ்ணவ வைதிக மதங்களைத் தழுவி இயற்றப்பட்டனவேயாகும். சிந்தாமணி, மணிமேகலை, சூளாமணி முதலிய நூல்களினும் ஜைன புத்தமதக் கொள்கைகள் நிரம்பப் பயின்றுவந்திருப்பதைக் காணலாம். ஆனால், சங்க நூல்களில் இவ்வாறு காணுதல் அரிது. புறநானூறு, கலித் தொகை முதலிய தொகை நூல்களை நோக்கினால் இங்கே கூறியதன் உண்மையறியலாம். இந்தச் சமயப்பற்று ஆரியரோடு ஊடாடின பிறகுதான் திராவிடர்களிடம் அளவுக்கு மிஞ்சி அதிகரித்து விளங் கியதெனத் திட்டமாகக் கூறக்கூடும். உதாரணமாக அக்காலத் திருந்த தமிழர்களுடைய பெயர்களையும் தற்காலத்துத் தமிழர் களுடைய பெயர்களையும் ஒப்பிட்டுப்பார்த்தால் நாம் மதத்தால் முற்றும் விழுங்கப்பட்டோமென்பது அறியலாகும். ஜீவிதத்தி

லேயே மதப்பற்று அளவுகடந்து நிலைபெற்றால் அது சமுதாயத் தாரது இலக்கியத்திலும் புகாதிருக்குமோ? பிற்காலத்துத் தமிழ் நூல்களெல்லாம் மேற்கூறிய காரணத்தால் மதநூல்களேயாயின. சிதம்பரம் — இராமலிங்கசுவாமிகளின் கவித்திறம் அருட்பாவை வாசித்து அதில் ஈடுபட்டோர் யாரும் எளிதிலுணருவர். எனினும் இவரது அருமையான கவித்திறத்தைப் பக்திக் கடலின்மட்டும் கவிழ்த்தனரேயன்றி மனிதரது உலகவாழ்க்கைத்குத் துணையான வேறுகாவியத்துறைகளிற் காட்டினாரில்லை. இது மிகவும் விசனிக்கத் தக்கதே.

ஏழாவதாகச் சங்கச்செய்யுட்களை யொழித்த பிற்காலத்துக் காவியங்களில் 'உண்மை' முழுதும் மறக்கப்பட்டது. அவைகளிற் பிரகிருதிவருணனை தவறாகவே இருக்கும். அரசர்கள் கூடவேண்டு மாயின் ஐம்பத்தாறு தேசத்தரசர்களும் கூடிவிடுவார்கள்! 'திணை' 'திணைமயக்கம்' முதலிய வருணனைகள் கவிஞனது சொல்வளத்தைக் காட்டவேண்டியதே தவிர நிலவளத்தைக் காட்டவேண்டியதில்லை. 'வரம்பெலா முத்தம் தத்தும் மடையெலாம் பணிலம்' என்ற மாதிரி எங்கு நாம் கண்ணைத்திருப்பினும் பொற்குன்றமும் முத்தின்குவையும் பவளத்திரளுமேயல்லாது வேறொன்றுமில்லை! பசையற வறந்த பாலை நிலமேயானாலும் கவிசாதுரியத்திற்காக அது பாலும் தேனும் பொங் கித் ததும்பும்! உருவத்தால் எப்புருடனும் மன்மதனாதலும் எப்பெண் ணும் இரதியாதலும் சர்வசாதாரணம்! வறுமைநோயால் நலியப்பட்ட மாந்தரும் குபேரராய்விடுவார்கள்! சுருங்கச் சொல்லிற் கவிஞ னுடைய இயற்கை வருணனைகளை அலங்காரமாக நாம் எடுத்துக் கொள்ளவேண்டுமே தவிர உண்மைக் கூற்றாக நினைத்துவிடக் கூடாது அலங்கார சாஸ்திரத்தில் 'உயர்வு நவிற்சியணி' என்று ஒரு அணியிருப்பதாக அறிவீர்களே. அது மிதமாகக் கையாடப்படு மானாற் கவிக்கு ஒருவித அழகும் மனதிற்கு ஒருவித இன்பமும் கொடுக்குமென்பதிற் சந்தேகமில்லை. ஆனால் இந்தியக்கவிகள் அதனை அளவுகடந்து உபயோகப்படுத்தி அருவருக்கத்தக்க விதத்தில் ஆக்கிவிடுகின்றனர். அளவுக்கு மிஞ்சினால் அமிர்தமும் நஞ்சல்லவோ? ஆங்காங்குச் சிற்சில இடங்களில் உபயோகப்படுத் தினால் அணியாகும்; இல்லாவிட்டால் அது மகிழ்ச்சியைக் கொல்லும் பிணியாகவே முடியும்.

எட்டாவதாக, நமது காவியங்களிற் சந்மார்க்க நாசத்திற்கேது வான கதைகளும் வருணனைகளும் மலிந்து கிடக்கின்றன. பாதாதி கேச வருணனையில் ஸ்திரீகளின் ஒவ்வொரு அவயவமும் வருணிக்கப் படாவிடிற் குற்றமாக முடியுமாம். கலவிப்போரைப் பாரதத்திலும் பெரியபோராக விரித்து வருணிக்கின்றார்கள் அதிவீரராமபாண்டியன் முதலிய புலவர்கள். வாலியைக்கொன்ற இராமனது வஞ்சனையும் பாரதப்போரில் சூரியனை மறைத்த கிருஷ்ணனது வஞ்சனையும் இகழத் தக்கனவாயிருந்தும் மதக்கோட்பாட்டின் மருட்சியாற் புகழப் பட்டன. சாதாரணக் கவிஞர்கள் இங்ஙனம் இழுக்கினும் சைவ சித்தாந்த பானுவாய் விளங்கித் திராவிட மகாபாஷ்யம் வகுத்த முனி

புங்கவரும் இராமாயண நாந்திச்செய்யுட்கு நூறு குற்றங்கூறித் தமது பெருமையை நிலைநாட்டினவருமாகிய சிவஞானசுவாமிகள் தமது காஞ்சிப் புராணத்திற் சுரகரீசப்படலத்திற் கூறியுள்ளது போன்ற ஆபாசக்கதைகளைக் கூறுதல் தகுதியாகுமா? சைவசமய ஆசாரியர்களின் தலைவரான ஞானசம்பந்தருங்கூடப் பாண்டிமாதேவியை வருணிக்குமிடத்து, 'பையரவ . .. ...பாண்டிமாதேவி' என்று கூறி நம்மைப் பிரமிக்கச்செய்கின்றார்.

இக்குறைகளாகிய கொப்புளங்களாற் காவியம் என்னும் மெல்லணங்கின்றேகம் விரூபமடைத்திருக்கின்றதென்பதை யாரும் சம்மதிக்கவேண்டும். இம்மாதிரிப் பல குற்றங்களும் அம்மெல்லியலைப் பீடிக்கத் தக்க காரணங்கள் உண்டென்றே சொல்லுவேன்.

(i) *சமுதாயத்தாரது அறிவின் வறுமை*:—சிறந்த காவியங்கள் அமையவேண்டுமாயின் அவற்றிற்குத்தக்க கருத்துச் செல்வம் மிகுதியாக விருத்தல்வேண்டும். கருத்துச்செல்வம் உண்டாவது சமுதாயத்தாரது பலதிறப்பட அநுபவ முதிர்ச்சியைப் பொறுத்திருக்கிறது. அநுபவ முதிர்ச்சியென்பது அறிவு முதிர்ச்சியே. ஆதலால் அறிவு முதிர்ச்சியில்லாதே அஞ்ஞானம் என்னும் இருளிற் கிடந்து தத்தளிக்கும் மனிதர்களிடையிற் பெருங்காவியங்கள் உதிப்பது அருமை. இயற்கையிலேயே அதி நுட்ப புத்திவாய்ந்த புலவர்களும் தம் காலதேசங்களினுற் கட்டுண்டு கிடக்கவேண்டியதாய் ஏற்படுகின்றது. தம் சமுதாயத்தாரோடு ஒட்டியொழுகுதல் வேண்டுமே தவிர அவரைப் புறமே நிராகரித்துத் தள்ளி மேற்சொல்லுதல் சாலாது. ஆகையினுற்றான் ஒவ்வொரு கவிஞனது நூலினும் அவனது சமுதாயத்தின் நிலையும் ஒருவாறு தோன்றி நிற்கிறது.

(ii) *கவியைப்பற்றிய தப்பெண்ணம்*:—கவியின் பொதுவான இலக்கணத்தைப்பற்றியும் சிறப்பிலக்கணத்தைப்பற்றியும் தவறான எண்ணம் நம்மில் அநேகர் இன்னும் வைத்திருக்கின்றனர். கவி நற்கலைகளில் ஒன்றென்றும் அதன் நோக்கம் இன்பம் பயப்பதே என்றும் முன் கூறியுள்ள உண்மையை இன்னும் அறியாதார் மிகப்பலர். மாத்தியு ஆர்னல்டு (Mathew Arnold) என்ற ஆங்கில ஆராய்ச்சியாளர் ஜீவித மகத்துவங்களை ஆராய்ந்து விளக்கும் கருவியே கவியாம் என்று கூறியதனுன் மாத்திரம் கவி நற்கலையாகாமற்போய் விடுமா?

(iii) *அளவுகடந்த மதப்பற்று*:—இதனுல் மதவிஷயங்களை எடுத்துக் காவியம்புனைவார் நற்கலையுணர்ச்சிகளை விருத்தி செய்யுமாறு கவிபுனையாது மதவுணர்ச்சியை மட்டிலும் விருத்தி செய்யக் கூடிய செய்யுட்களை இயற்றியிருக்கின்றனர். இதற்குப் பெரிய புராணம் கந்தபுராணம் முதலிய புராணங்களே சான்றாகும். இவைகள் உண்மைக் கவியின்பம் தரத்தக்கவையல்ல. இராமசரித்திரம் என்னும் ஒரே விஷயத்தை எடுத்துத் துளசீதாசரும் கம்பரும் காவியஞ் செய்துள்ளார்கள். துளசீதாசரது காவியம் பக்திச்சுவை துளும்பு

தலின் மதவுணர்ச்சியை விருத்திசெய்வதும், அதுபோலாது கம்பரது காவியம் கவிச்சுவை துளும்புதலின் நற்கலையுணர்ச்சியை விருத்தி செய்வதுங் காணலாம். ஆங்கிலேய கவிஞராகிய மில்டனும் (Milton) இத்தாலியக் கவிஞராகிய டாண்டேயும் (Dante) மதவிஷயத்தைக் காரியார்த்தமாக எடுத்துகொண்டபோதிலும் அவர்களுடைய சிறந்த கவித்திறத்தால் உயர்தரமான காவியங்கள் இயற்றியிருக்கின்றார்கள்.

இங்கே கூறியதுபோன்ற பலகாரணங்களினால் நமது காவியங்களில் ஏற்பட்டிருக்கும் குறைபாடுகளை முழுதும் நீக்கிக் கவியை ஓர் உந்நத நிலைக்குக் கொண்டுவரவேண்டிய வழிகளைப்பற்றி இனி ஆலோசிப்போம். காவியம் இயற்றப்போகும் கவிஞன் இரண்டு முக்கிய விஷயங்களைக் கவனிக்கவேண்டும். அவையாவன :—

(i) காவியத்திற்காம் விஷயங்களைத் தெரிந்தெடுத்தல்.

(ii) அவ்விஷயத்தைக் குறித்துச் சிறந்த காவியம் புனையும் முறைகளையறிதல்.

இவ்விரண்டினும் ஒருபடியே கவனஞ்செலுத்தாவிடிற் காவியம் அழகு குன்றிவிடுதல் நிச்சயம். ஆதலாற் கவிஞர்கள் இவ்விரண்டினும் கவனஞ் செலுத்தக் கடமையுள்ளாராகின்றார்கள்.

காவியத்திற்குரிய விஷயங்களை எடுத்துக்கொள்வதில் பொதுவாகக் கவிஞனது அறிவுமுதிர்ச்சியும் அவனது வழுவுதலமையா உணர்ச்சிப் போக்குமே வழிகாட்டியாயிருப்பினும், புறமேயிருந்து சிலவிதிகளை ஏற்படுத்திக்கொள்வது நலமாகும். முதலாவது :— இன்பம் பயக்கும் விஷயங்களையே தெரிந்து எடுத்துக்கொள்ள வேண்டும். இவ் விதிக்குமாறாகவே ஆங்கில நாடகக் கவிஞராகிய ஷேக்ஸ்பியரது (Shakespeare) டைட்டஸ் அன்டிரானிக்ஸ் (Titus Antironicus) என்ற நாடகமும் பெரியபுராணத்திற் சிறுத்தொண்டர் சரித்திரமும் கவிஞர் கையிற்புகுந்த வாள்மாதிரி வாசிப்போர் மனத்தை அறுத்துப் போழ்கின்றன. தற்காலம் அபிநயக்கப்படும் புதிய நாடகங்களை நடித்துக்காட்டும் நடர்களோ எந்தக் கதையாலும் நிமிஷநேரத்தில் நாடகமாக்கிவிடுவர்! ஒரு ராஜாவும் ஒரு விதூஷகனும் ஒரு ராக்ஷஷனும் ஒரு ரிஷியும் ஒரு கலியாணமும் வேண்டும்; கதை எவ்வளவு அசம்பாவிதமாயிருந்தாலுஞ் சரி; அது அவர்கள் கையில் நாடகமாகிவிடும்! அரபிக்கதையில் வருகிற அதியற்புத விநோத கதைகளெல்லாம் அவர்களுக்கு நாடகத்திற்காம் கதைகளே! அறிவு முதிர்ச்சியில்லா, இந்நடர்கள்போலாது கவிஞர் தாமியற்றும் காவியத்துக்கு விஷயம், நற்கலையுணர்ச்சி வழியால் ஆராய்ச்சி செய்தே எடுத்துகொள்ளவேண்டும். இரண்டாவது :—சாஸ்திர விஷயங்களோ, சரித்திர விஷயங்களோ எடுத்துக்கொள்ளப்படினும் அவைகளில் உதிக்கும் உண்மைகளைக் காவிய இன்பமெனும் அமுதளாவியே படைக்கவேண்டும். ஷெல்லி (Shelly) யெனும் ஆங்கிலக்கவி இயற்றிய 'மேகம்' (Cloud) என்னும்

கவிதையை வாசிப்போருக்கு இவ்வுண்மை நன்ருகப் புலப்படும். மூன்ருவது :—இன்பவுணர்ச்சிக்கு இடங்கொடுக்காத விஷயமோ அல்லது துன்பவுணர்ச்சியை மட்டும் தரத்தக்க விஷயமோ எடுத்துக் கொள்ளப்படின் அவற்றைக் குறித்து விஸ்தரியாமல் அவற்ரேடு சார்புள்ள வேறு இனிமை தரத்தக்க விஷயங்களையும், அதுவும் சாத்தியமில்லையெனக் கண்டால் அவ்விஷயத்தினின்றெழும் நமது கருத்துக்களையும் உணர்ச்சிகளையும் இன்பவழிப்படுத்தி வருணிக்க வேண்டும். கிரே (Grey) என்னும் ஆங்கிலக்கவிஞரின் 'எலிஜி' (Elegy) என்று சொல்லுகிற இரங்கற்பா முன்னதற்கும், கூப்பர் (Cowper) என்பவரின் 'சோபா' (Sofa) பின்னதற்கும் உதாரணமாய் எடுத்துக்கொள்ளலாம். நான்காவது :—எடுத்துகொள்ளப்படும் விஷயம் இயன்றவரையிற் புதிதாயிருப்பின் நலம். எப்பொழுதும் புது விஷயம் கவிஞர் எடுத்துக்கொள்வதில்லை. ஏனெனில் ஜனங்கள் ஏற்கெனவே அறிந்திருக்கும் விஷயமாளுல் அதைக்கொண்டெழுந்த காவியம் ஜனங்களுடைய மனதில் நன்ருகப் பதிந்து இன்பங் கொடுக்குமென்று கவிஞர்கள் நம்புகிருர்கள். இது மறுக்கக்கூடியதன்று. எனினும் நூதன விஷயங்களாக விருப்பின் ஜனங்களுக்கு முன்னதினும் பல மடங்கு ஆநந்த முண்டாமென்பதற்குச் சந்தேகமில்லை.

ஒரு தக்க விஷயம் தெரிந்தெடுத்துக் கொண்டபின் காவியம் இயற்றும் முறையிற் கவிஞன் சிற்சில விதிகளைக் கையாடல்வேண்டும். இவைகள் :—

1. காவியத்தின் பொருளைப்பற்றியன
2. காவியத்தின் உருவத்தைப்பற்றியன

என்று இருவகைப்படும்.

பொருளைக் கவனிக்குமிடத்து, முதலாவது :—கவிஞன் காவியம் புனையும் ரீதியில் ஆலோசனை செய்யவேண்டும். கதையின் போக்கை முற்பட வகுத்துக்கொண்டு அம்முறை வழுவாது ஒரேரீதியில் அதனை அமைக்கவேண்டும். சில இடங்களில் அநாவசியமாக விரித்தும் சிலவிடங்களில் அநாவசியமாகச் சுருக்கியும் கதை நடைபெறச் செய்தல் கூடாது. நைடதமென்னும் காவியம் சென்று தேய்ந்திறுதல் என்னும் குற்றத்திற்கு இலக்கானது, இவ்விதியை ஆசிரியர் கவனியாதபடியால்தான். மேலும் பெருங்காப்பியங்களுள், சிறு கதைகள் ஆங்காங்குக் கிளைகளாகப் பிரியவேண்டுமாளுலும் முக்கிய கதையின் ருெடர்ச்சியை அவை முறித்துவிடாவண்ணம் கதைகள் இயக்கப்படவேண்டும்.

இரண்டாவது :—காவியத்தில் வரும் இயற்கை வருணனையோ, நாயகன் நாயகி முதலிய பாத்திரங்களின் வருணனையோ, உண்மையோடு முரணுதிருக்கவேண்டும். இவை உண்மையினின்று பிறழுமாயின் நற்கலையின் முக்கிய நோக்கமான இன்பம் இல்லாதொழிகின்றது. இவ்விதியை ரஸ்கின் (Ruskin) என்ற ஆங்கில கலாசாஸ்திரி

விரிவாகத் தமது நூல்களிற் பலவிடத்தும் கூறுகின்றார். ஆனால், இன்பம் பயத்தலைக்கருதி உண்மையை அலங்கரித்து மாற்றிக் கூறுவதனாற் கவிஞன் உண்மையைக் கைவிட்டவனாகமாட்டான். காமத்தை ஒரு வெப்ப நோயாக வருணிப்பது தமிழ்க்கவிஞரின் மரபு; அதனாற் கிடக்கை மலர் கரிந்துபோவது வெப்பத்தின் கொடுமையைக் காட்டக் கவிஞர் எடுத்துக்கொள்ளும் கற்பனை. இதனைப் பொய்யென்று தள்ளவேண்டிய ஆவசியமில்லை. ஓரணியாக மாத்திரம் மதிக்கவேண்டும். கற்பனை ஆவசியங்களுக்கல்லது இயற்கையுண்மைகள் சிதைய ஒருவன் கவி இயற்றுவானாகில் அது இன்பம் பயக்கும் கவியின் மூல லக்ஷணமே பொருந்தாதாகிவிடும்.

மூன்றாவது :—சொல்லைப்பார்க்கிலும் பொருளிற் கவனம் செலுத்தப்படல்வேண்டும். சிறந்த பொருளமைதியில்லாக் கவி உயிரில்லா உடம்பு போலாம். இவ்வகைச் செய்யுட்களை ஆங்கிலத்தில் (Verse) (யாப்பு) என்றும், அதை இயற்றுகின்றவரை (Versifir) யாப்புறுப்போர் என்றும் கூறுவர். கவியிற் பொருள் நயம் ஏற்படுதற்கு முக்கிய காரணமாவது கவிஞனது மனோதர்மமே. இதில் ஒரு பகுதியை ஆங்கிலேயர் (Creative Imagination) கற்பனாசக்தி என்று பெயரிட்டு வழங்குகின்றனர். இந்தச் சக்தியோடு ஒரு கவிஞனுக்கு ஏராளமான காவியக் கருத்துக்களும் (Poetical ideas or Concepts) வேண்டும். இது உணர்ச்சி வழியொழுகும் புத்திசாதுரியத்தினால் வரவேண்டிய பாகம். இவ்விருவகை மானஸ தத்துவங்களாலும் பொருட்செறிவும் பொருள் வனப்பும் கவியில் ஏற்படும். இப்படிக்கன்றிப் பொருளை முழுதும் விளக்கிக் காட்டுவது கவியின் லக்ஷணமாகாது. ஒரு சரித்திரகர்த்தா கதைத்தொடரைச் சாங்கோபாங்கமாக விரித்து ஒன்றையும் விடாது கூறக் கடமைப்பட்டவராகிறார். கவிஞனோ அங்ஙனம் செய்தல் கூடாது. சிற்சில விடங்களிற் கதைத் தொடரையும் அதில் வரும் சம்பவங்களையும் கதா புருஷர்களின் மனோபாவங்களையும் அவர்களது சம்பாஷணைகளையும் சிறிது சூசிப்பித்து விட்டுவிடவேண்டும். இவ்வித சூசனைகளிலிருந்து காவியம் வாசித்தோ கேட்டோ உணர்வார் மனதில் அநேக தொனிப்பொருள்கள் தோன்றுமாறு கவிபுனைதல் வேண்டும். இதனையே ஆங்கில நூலார் (Suggestiveness) என்றும், வடநூலார் வியங்கியம் என்றும் கூறுவர். இதுவே கவியின் உயிர்நிலையென் றெண்ணுங்கள். கம்பராமாயணத்திற்குப்பின் வந்த புராணகர்த்தகளில் அநேகர் இவ்வரிய இலக்கணம் பெறாது கவிஞர் என்னும் பெயருக்கே உரியரல்லராய் விடுகின்றனர்.

நான்காவது :— காவியத்திற் சந்மார்க்கவழு ஏற்படாதிருக்க வேண்டும். வாய்மை, பொறுமை, தயை முதலிய நற்குணங்களுள்ளார் இன்புறுதலும் அவையில்லார் துன்புறுதலும் ஆவசியமே. இதனையே மேற்றிசையோர் (Poetical Justice) காவியநீதி என்று சொல்லுவர். ஆயினும் சிற்சில இடங்களில் தருமம் தாழவும் அதருமம் தழைக்கவும் காண்கின்றோம். இம்மாதிரிக் கதைகளைக் கவிஞர் எடுத்துக் கொள்வார்களேயானால் அவைகளை விஸ்தாரமாகக் கூறுமிடத்துக் கேட்போர் வாசிப்போர் மனதில் அவை ஒரு குறைபாடான

நிலையைக் குறிக்கின்றன என்று தோன்றுமாறே அறிவுறுத்தல் வேண்டும். சந்மார்க்கத்தோடு முரணிக் காவியம் புனைவது நலம் பயக்கவேண்டியதோர் சக்தியைத் தீயவழியிற் செலுத்துவதாகும். பைரனுடைய (Byron) டான் ஜுவான் (Don juan) என்னும் ஆங்கில காவியமும் தமிழில் அகத்திணையிற் களவினைச் சிறப்பித்துக் கூறும் நூல்களும் இவ்விதிக்கு மாறுபாடாகவே எழுதப் பெற்றனவென்று அறியக்கிடக்கின்றன. விறலிவிடுதூது என்ற நூல் சிறுவரை நன்னெறியில் ஊக்குமென யார்தாம் சொல்லுவர். இதையொட்டி அதிவீரராமபாண்டியர், கம்பர் இவ்விருவரையும் ஒப்பிட்டு நோக்குங்கள். நளனும் தமயந்தியும் அநுபவித்த சுகத்தை எத்தனையோ செய்யுட்களில் விரித்து வருணிக்கின்றார் முன்னவர். கம்பரோவெனின், சீதைபால் இராமன்றுய்த்த இன்பத்தை, 'மார்க்கட லன்ன மனத்தவ ளோடும், கார்க்கடல் போல்கரு ணைக்கடல் பண்டைப், பாற்கட லன்னதோர் பள்ளி யணைந்தான்' என்றவளவே சூசிப்பித்துள்ளார். ஒரு உயர்தர கவிஞன் சந்மார்க்கபோதனாகவும் ஏற்பட வேண்டியவனாதலால் அறநெறி வழுவாவண்ணம் சில சம்பவங்களை மறைக்கக் கடமைப்பட்டவனாக ஆகின்றான்.

இனி, காவியம் புனையும் முறையில் உருவத்தைப்பற்றியுள்ள விதிகளை யாராய்வோம். முதலாவது :—ஜனங்களிடை வழங்குகின்ற சொற்களையும், சொற்றொடர் முறைகளையும் அநுசரித்தே காவியம் புனைதல் உசிதமாகும். ஆனால் அங்ஙனம் புனையுங்காலத்து பாஷையைச் செய்யுள் நடையாக்கிக் கொள்ளுதற்குத் தக்க வேறுபாடுகள் முறையறிந்து செய்து கொள்ளப்படல் வேண்டும். சுவபாஷாரீதியைச் சற்றுங் கவனியாது, சிறிதும் தொடர்பில்லாத அந்நிய பாஷாரீதியிலே தமிழிற் காவியமியற்றப் புகுவோமானால், அது வீண் முயற்சியாகவே முடியும். 'லீல நாடகம்', 'இரவிவர்மா' என்ற நாடக நூல்கள் இதனை உண்மைபடுத்தும். இப்படிச் சொல்லுவதனால் முழு மாமூலைப் பின் தொடர்ந்தே கவியியற்றல் வேண்டுமென்று நான் சொல்ல வரவில்லை. நமது காவிய அமைப்பிற் சிற்சில விடங்களில் மாற்றம் செய்தால் நலமாகவே யிருக்கும். அவைகளை இங்கே விரிவாக எடுத்துக்காட்ட வேண்டாமென்று நினைக்கிறேன். பாயிரம், காப்பு, அவையடக்கம், பதிகம், நாட்டுப்படலம், நகரப் படலம் முதலிய நாலுறுப்புக்கள் இனிவருங் காவியங்களில் இதுவரை உள்ளனபோலவே இருக்கவேண்டுவது ஆவசிகமில்லை. இப்படிக் கருப்பிடித்துக் கொடுத்தனாற்றான் கவிஞரது மனோதர்மம் அவைகளிற் கட்டுண்டு காவியங்கள் ஒரே மாதிரியில் வார்க்கப்பட்டு வந்தன. இவ்வழக்கத்தினாற் புதியன புனையும் ஆற்றல் (Originality) அறவே கெட்டுவிட்டது.

இரண்டாவது :—கவியை அலங்கரிக்கும் அணிகள் புதியனவாகவும் பொருத்த முடையனவாகவும் மனதிற்கு இன்பம் தரத்தக்கனவாகவு மிருக்கவேண்டும். 'பிறைநுதல்' என்று சொல்லிச் சொல்லி நுதலினது விசேஷ அழகைக் கெடுத்தார்களேயன்றி அதனை மேம்படுத்தினார்களில்லை. முற்காலக் கவிஞர்களைத் தொடர்ந்தே பிற்

காலக் கவிஞர்களும் அலங்காரங்களை அமைத்துக்கொள்ள வேண்டு மென்பது ஆவசிகமில்லை. மேற்றிசைக் கவிஞர்கள் அணிபுனை வதிற் றத்தம் மனோதர்ம வழியே சென்றிருக்கின்றார்கள். இதனால் அவர்களுடைய காவியங்கள் நூதன அணிகளால் அலங்கரிக்கப் பெற்று வாசிப்போரது மனதைக் கவருகின்றன. தமிழ்க் கவிஞர் களிற் பிற்காலத்தார் புனைந்துள்ள காவியங்களோ ஒரு அச்சிலே யிட்டு அடித்த பிரதிகள் மாதிரி ஒரே தன்மையுடையனவா யிருக் கின்றன. இதனால் அவற்றிற் காவியச்சுவை குன்றிவிடுகின்றது.

மூன்றாவது :—சொற்களைப் புணர்த்திச் சிருஷ்டிக்கும் காவிய நடையிற் முக்கிய குணங்க ளமைதல் ஆவசிகம்.

(1) முதன்முதல், தெள்ளிய நடையாக விருக்க வேண்டும். கவியினது பொருள் வாசிப்போர் மனதில் எளிதிற் பதியத்தக்கதாக விருத்தல் வேண்டும். பொருளைப்பற்றி மயங்குதற்கோ திகைப்ப தற்கோ கவியிடங்கொடுக்கக் கூடாது. இந்தத் தெளிவு என்னும் கவியின் உத்தம குணத்தைக் கம்பர் தமது இராமாயணத்திற் பல விடங்களிலும் அழுத்திக் கூறுகின்றார். ஒரு கவியிற் 'புன்கவி யெனத் தெளிவின்றி' என்றனர். பம்பை வருணனையில் அந்நீர் நிலையின் தெளிவையும் ஆழத்தினையும் வியந்து 'கற்பக மனையவக் கவிஞர் நாட்டிய சொற்பொரு'ளோடு உவமிக்கிறார். கோதாவரியை வருணிக்குஞ் சந்தர்ப்பத்திலும் 'சவியுறத் தெளிந்து தண்ணென் றொழுக்கமுந் தழுவிச் சான்றோர் — கவியெனக் கிடந்த கோதா வரி யினை வீரர் கண்டார்' என்று எடுத்துக் கூறுகின்றார். கவியில் இத் தெளிவு ஏற்பட வேண்டுமானாற் கவிஞரது கருத்துக்கள் தெளிவு பெற்றிருப்பதோடு அக்கருத்துக்களைத் தக்க சொற்றொடர்களில் அமைத்து நமக்குப் புகட்டவும் சக்தி ஏற்படவேண்டும். இவற்றில் முன்னது இயற்கை நலத்தாலும், பின்னது காவியம் முதலிய நூற் பரிசீலனையினாலும் வருமே தவிர வேறல்ல.

(2) ஒழுகிசை நடையினவாகவும் கவிகள் இருத்தல் வேண்டும். இந்நடை கம்பராமாயணத்திற் பலவிடங்களிலும் பயின்றுள்ளது. ஒழுகிசை நடையென்றால் வாசிப்போனது நாத் தடையுறா வண்ணம் ஆற்றொழுக்குப்போலக் கவியோடிச் செல்வது. இராமாயணத்திற் கங்கைப் படலத்து முதல் நான்கு கவிகளையும் வாசித்து அவற்றின் ஒழுகிசையை யறிந்து ஆனந்திக்க வேண்டியதே :

'வெய்யோனொளி தன்மேனியின் விரிசோதியின் மறையப்
பொய்யோவெனு மிடையாளொடு மிளையானொடும் போனான்
மையோ மரகதமோ மறிகடலோ மழைமுகிலோ
வையோவிவன் வடிவென்பதொ ரழியா வழகுடையான்.'

கலன்காண் படலத்தில் 34-வது கவிதொடங்கி இறுதிவரை வாசித்துப் பார்க்க. பள்ளத்துப் பாயும் நன்னீர் போலவே தட்டுத் தடையில்லாமல் விரைந்து செல்லும் கவியினிசையில் உங்கள் மனதும் இழுக்கப்பட்டுப் போய்விடும்.

'வெங்கணாளி யேறுமீளி மாவும்வேக நாகமும்
சிங்கவே றிரண்டொடுந் திரண்டவன்ன செய்கையார்
தங்குசால மூலமார் தமாலமேல மாலைபோற்
பொங்குநாக முந்துவன்று சாரலூடு போயினர்.'

கார்முகப் படலத்தில் 47-வது கவி முதல் 55 வரையுள்ளன வெல்லாம் ஒழுகிசையினை விளக்கும் செய்யுட்களே.

'நாணுலாவு மேருவோடு நாணுலாவு பாணியும்
தூணுலாவு தோளும்வாளி யூடுலாவு தூணியும்
வாணிலாவி னூலுலாவு மாலைமார்பு மீளவும்
காணலாகு மாகினுவி காணலாகு மேகொலாம்.''

கைகேசி சூழ்வினைப் படலத்தில் 46-முதல் 63-வரையுள்ள பாடல்களும் இவ்வொழுகிசையை நன்கு காட்டும்.

(3) நடை சந்தர்ப்பந்தத்திற்குத் தக்கதாகவுமிருத்தல் வேண்டும். இராக்கத வேஷத்தை விடுத்து ஸ்ரீராமனை வசீகரிக்கத்தக்கதான அழகியதோர் மெல்லுருவம் தாங்கிச் சூர்ப்பணகை வருதலைக் கம்பர் கீழ்வருமாறு வருணிக்கின்றார் :

'பஞ்சியொளிர் விஞ்சுகுளிர் பல்லவ மனுங்கச்
செஞ்செவிய கஞ்சநிமிர் சீறடிய ளாகி
அஞ்சொலிள மஞ்சையென வன்னமென மின்னும்
வஞ்சியென நஞ்சமென வஞ்சமகள் வந்தாள்.'

இதன் பின்வரும் ஆறு கவிகளும் சூர்ப்பணகையின் வசீகர சக்தியைத் தெள்ளிதிற்காட்டும். தாடகையின் கோரவுருவத்தையும் கோபக் குறியையும் வருணிக்குமிடத்து வல்லின எழுத்துக்கள் மிக்கு வரச் செய்யுளியற்றியுள்ளார்.

'இறைக்கடை துடித்தபுரு வத்த ளெயிறென்னும்
பிறைக்கடை பிறக்கிட மடித்தபில வாயள்
மறக்கடை யரக்கிவட வைக்கன லிரண்டாய்
நிறைக்கடன் முளைத்தென நெருப்பெழ விழித்தாள்.'

இரவிற் றுயின்றவரை மெல்லிய ஒலியாற் காலையிலெழுப்பும் பல வாத்தியங்களும் அயோத்தியா நகரில் எவ்விதம் முழங்கினவென்று கூறுமிடத்துக் கம்பர்தரும் அழகிய செய்யுளை முன்னதோடு ஒப்பிடுக. மெல்லின இடையின வெழுத்துக்களே இதில் மலிந்து வருகின்றன.

'வங்கியம்பல தேன்வி ளம்பின வாணி முந்தின பாணியின்
பங்கியம்பர மெங்கும் விம்மின பம்பை பம்பின பல்வகைப்
பொங்கி யம்பல வுங்க றங்கின நூபு ரங்கள் புலம்பவெண்
சங்கியம்பின கொம்ப லம்பின சாம கீதம் நிரம்பவே.'

பரசுராமன் கோபாக்கினியால் ஜொலிக்கும்போது உலகமானது பயத்தாற் பீடிக்கப்பட்டு நடுக்குற்றுத் தளர்வதைக் கீழ்வரும் கவியில் வருணிக்கின்ருர். பெரும்பயத்தால் ஏற்படும் தேக நடுக்கும், பயம் அளவு கடந்துபோகும் போதுண்டாம் ஸ்தம்பிதம் அல்லது நடுக்க மின்மை இவையாவும் அக்கவியடிகளிற் குதித்துநிற்கக் காணலாம்.

'கம்பித் தலையெறி நீருறு கலமொத் துலகுலையத்
தம்பித் துயர்திசை யானைக டளரக் கடல்சலியா
வெம்பித் திரிதர வானவர் வெருவுற் றிரிதரவோர்
செம்பொற் சிலைதரி யாவயின் முகவா ளிகடெரிவான்.'

விரைவுக்குறிப்பைக் காட்டவேண்டிக் கம்பர் எடுத்துக்கொண்ட 'சந்தமும்' 'சொற்சுருக்கமும்' மிகவும் பாராட்டத் தக்கன.

'மாலு மக்கணம் வாளியைத் தொட்டதும்
கோல விற்கால் குனித்ததுங் கண்டிலர்
காலனைப் பறித்தக் கடியாள் விட்ட
சூல மற்றன துண்டங்கள் கண்டனர்.'

இதுபோலவே கார்முகப்படத்திலும்,

'தடுத்திமை யாம லிருந்தவர் தாளின்
மடுத்தது நாணுதி வைத்தது நோக்கார்
கடுப்பினில் யாரு மறிந்திலர் கையால்
எடுத்தது கண்டனர் இற்றது கேட்டார்.'

(4) கவியினது நடை அதனை இயற்றும் கவிஞனுக்கே உரித்தான விசேஷ வனப்பு வாய்ந்த நடையாக விருக்கவேண்டும். இதனை ஆங்கில நூலார் Individuality of Style என்று கூறுவர். மகா காவியங்களிலெல்லாம் இக்குணம் ஏற்படாமலிராது. கம்பரது கவிப் போக்கை யாண்டும் அறிந்துகொள்ளலாமென்பதே எனது துணிபு. இந்த நடை விசேஷத்தை வைத்தே அவரது காவியத்தில் இப்போது உள்ள இடைச்செருகற் செய்யுள்களை இரத்தினங்களுடன் கலந்த பருக்கைக்கற்களைப் போல எளிதிற் பிரித்தெடுத்து விடுதல்கூடும்.

"விசையுறு பறவையும் விலங்கும் வேற்றவும்
அசைதொழி லஞ்சின சித்தி ரத்தினே." 32

182. "இன்னபோ திவ்வழி நோக்கு மென்பதை
உன்னலர் கரதலம் சுமந்த உச்சியர்"
என்னரா வணனர சிருக்கை கூறவே
அன்னவ னடல்பிறி தறைய வேண்டுமோ? 33

183. "யாவரு மிறைவரென் றிறைஞ்சு மேன்மையோர்
மூவரு மொதுங்கினு ருனக்கு மொய்ம்" பென
மேவரு மிராவணன் மிடலுங் கொற்றமும்
தாவறக் கூறலைத் தாண்டல் சாலுமோ? 34

[வேறு]

184. "எழுமி ருக்கு மிரைக்கு மிரக்கமுற்
றழும ரற்று மயர்க்கும் வியர்க்கும்போய்
விழும்வி ழிக்கும் முகிழ்க்கும்தன் மேனியால்
உழும் நில"மெனி னேனுடை யாதுயிர்? 35

கும்பகன்னன்

185. இல்ல வாகொள் ளரக்கனை ராமனை
"வெல்ல லென்பதும் வேயிளந் தோளியைப்
புல்ல லென்பதும்" போலி நினைப்பெனக்
கல்லத் தூண்டுகன் னனுரை காண்பிரால். 36

186. "என்னை வெல்லின் இலங்கையர் காவலா
உன்னை வெல்லுத லுண்மைய தாமெ"னச்
சொன்ன வாக்கிற் றெனிக்கு மிலங்கையின்
மன்னைக் கன்னன் மதித்த வகையரோ! 37

---

181. யுத்த. இராவணன் மந்திரப். 10.

182. ஆரணிய. மாரீசன்வதைப் (சூர்ப்பணகை சூழ்ச்சிப்) 8.

183. யுத்த. இராவணன் மந்திரப். 23.

184. யுத்த. இராவணன் சோகப். 15.

185. யுத்த. கும்பகருணன் வதைப். 81.

186. யுத்த. கும்பகருணன் வதைப். 97

[வேறு]

187. 'ஆசில்பர தாரமவை யஞ்சிறை யடைப்பேம்
மாசில்புகழ் காதலுறு வேம்வளமை கூரப்
பேசுவது மானமிடை பேணுவது காமம்'
ஆசியமிம் மாற்றநனி மூசியதும் ஆய்மின். 38

[வேறு]

188 "கருத்திலா இறைவன் தீமை கருதின லதனைக் காத்துத்
திருத்தலா மாகி னன்றே திருத்துதல் தீரா தாயின்
ஒருத்தரில் முன்னஞ் சாதல் உண்டெமக் குரிமை" யென்றான்
பெருத்த தந்திரநீர் நீந்தித் தன்பெரும் பலத்தைச் சார்ந்
[தான். 39

189. "உந்தையை மறைந்தோ ரம்பால் உயிருண்டு உதவி யோற்குப்
பந்தனைப் பகையைச் செற்றுக் காட்டலை யென்னிற் பாரோர்
நிந்தனை செய்வ" ரென்றே நிரப்பினன் வாலி சேய்க்கு
வந்திடும் வெறுங்கை யன்மேல் சூலம் வாங்காத சூரன். 40

[வேறு]

190. 'எள்ளி எற்றலு மெயிறிளித் தோடின
வானரக் குலமெல்லாம்
உள்ள கையினு மற்றவெங் கரத்தையே
அவையஞ்ச வுய்த்திட்டான்
புள்ளி வீரனும் வாலியைப் பூக்கவர்ந்
துணியெனப் புகன்றும்வில்
வள்ளல் ராமனை வடிக்கணைச் சேவகம்
வலித்தும்' நில் வயவீரன். 41

[வேறு]

191. இந்திர சித்தினோ டிராவ ணன்திறல்
முந்தின ராயினு மிவனைப் போல்முனைப்
'பந்தியிற் பந்தியிற் படையைச் சிந்துதல்
தந்திர மன்'றெனச் சாற்றினர் கொலோ? 42

விபீஷணன்

192. "அறிஞரே யாயினு மரிய தெவ்வரைச்
செறிஞரே யாவரேற் கெடுதல் திண்ண"மென்
றுரைசெயும் வாசக முறுத்து மேபகைத்
துறைநின்றார் பயனென்றுந் தோய்கி லாரென. 43

---

187. யுத்த. இராவணன் மந்திரப். 52.
188. யுத்த. கும்பகருணன் வதைப். 157.
189. யுத்த. கும்பகருணன் வதைப். 193.
191. யுத்த. கும்பகருணன் வதைப். 89.
192. யுத்த. வீடணன் அடைக்கலப். 73.

193. "மறந்துறந் தவர்தரு வரத்தி னல்தவம்
நிறம்திறம் பாவகை யியற்று நீர்மையால்
அறந்துறந் தமரரை வென்று ளே"மெனச்
சிறந்தறப் பயனைவீ டணன்தெ ரித்தனன். 44

[வேறு]

194. "உண்டிலன் நறவம்பொய்மை உரைத்திலன் வலியா லொன்றும்
கொண்டிலன் மாய வஞ்சம் குறித்திலன் பிறனில் வைகும்
பெண்டிரிற் றிறம்பி னற்பின் னின்றில" னென்ற வாய்மை
எண்டிசை யிசைவ தாம்வீ டணனிசை இசைக்கு மன்றே. 45

இந்திரசித்து

[வேறு]

195. "அரஞ்சுடர் வேற்றன தனுச னிற்றசொல்
உரஞ்சுட எரியுயிர்த் தொருவ னேங்கினன்;
புரஞ்சுட வரிசிலைப் பொருப்பு வாங்கிய
பரஞ்சுடர் ஒருவனைப் பொருவும் பான்மையன்." 46

196. 'எல்லையிற் சேனைகொண் டெதிர்ந்த இந்திரன்
ஒல்லையி லுடைந்தனன் உய்ந்து' ளானெனில்
அல்லவன் பிழைத்ததோ அமுதின் வண்மையால்;
ஒல்லுமோ இவனுர மொடுக்கல் ஊழியில்? 47

197. 'இவனருந் திறலினு லியன்ற போர்ச்சதிர்
சிவனல அயனல செங்கண் மாலல
எவனிவற் கிறையென உறைப வனல
புவனத்தி லொருவராற் பொருந்த லாவதோ? 48

[வேறு]

198. "முரட்டடந் தண்டு மேந்தி மனிதரை முறைமை குன்றிப்
பிரட்டரிற் புகழ்ந்து பேதை யடியரின் இரந்து பின்சென்
றிரட்டுறு முரச மென்ன இசைத்ததே யிசைத்தா" யென்னத்
திரட்டுறு மாற்ற மிந்திர சித்திகழ் தெரிக்கு மன்றே. 49

199. அல்லானு மரக்கர் வேந்தன் அணியென்கோ மகுட மென்கோ
மல்லாளும் வலக்கை யென்கோ மாளொணு உயிரே என்கோ
வில்லாள ரெண்ணில் முன்னர் விரல்வரும் வீரன் வென்றி
சொல்லாளத் தகுமோ சூழ்ச்சித் துறையெலாங் கடந்த
[சூரன். 50

---

193. யுத்த. இராவணன் மந்திரப். 69.
194. யுத்த. நிகும்பலையாகப். 174.
195. சுந்தர. பாசப். 2.
198. யுத்த. நிகும்பலையாகப். 164.

இலக்குமணன்

[வேறு]

200. "நீருள வெனினுள மீனும் நீலமும்
நாருள தனுவுளாய் நானும் சீதையும்
ஆருள ரெனினுளேம்? அருளு வாயெனச்"
சீருள அன்பியல் தெரித்த செவ்வியன். 51

[வேறு]

201. முன்னின் றுரை விலக்கி முடுகுவேல்
தன்ன ருந்தட மார்பினிற் றாங்கிய
மன்னி லக்குவன் காட்டிய மட்டிலா
இன்ன ருட்டிற மென்றும் ஒழிவதோ? 52

பொது

அனுமான்

202. "மன்னிற் றேன்றினேம் மாண்டுளேம் இற்றைநாள்
நின்னிற் றேன்றினேம் நீதியிற் றேன்றினாய்"
என்ன ராம னிசைக்கு மிசைகொளும்
பொன்தொ ழும்புப் புமான்புகழ் பொய்ப்பதோ? 53

கும்பகன்னன்

203. 'தம்பி கோறத் தவிரான் தகவிலான்
உம்பி யோடு முன்னேடு மனுமனே
டெம்பி யைவைத் தினிதளித் தி'யென்ற
கும்ப கன்னன்கூர் அன்பும் குணிப்பதோ? 54

இராவணன்

204. 'முன்னை மாண்டார் முடிப்பர் பகையென்றும்
உன்னை வென்றி யுதவுமென் றுன்னிலேன்
என்னை நோக்கியே இப்பகை தேடினேன்'
என்னு மிராவணன் ஈடு மிசைப்பதோ? 55

---

200. அயோத்தியா. நகர்நீங்கு. 152.

201. யுத்த. வேலேற்ற படலத்தில் - இராவணன் விபீடணன்மேல் எறிந்த வேலை இலக்குவன் தன் மார்பில் ஏற்ற நிகழ்ச்சி குறிக்கப்படுகிறது. வேலேற்ற. 30 - 32.

202. யுத்த. மருத்துமலைப். 202.

203. யுத்த. கும்பகருணன் வதைப். 359.

204. யுத்த. இந்திரசித்து வதைப். 8.

இந்திரசித்து

205. 'சேலி யற்க ணியக்கியர் இராவணி
கோல விற்குரல் கேட்டுக் குலுங்கித்தம்
தாலி யைத்தொட்டுத் தாங்கருஞ் சூரனின்'
பாலி யைந்த படுபயம் நோக்குதிர். 56

வாலி

206. 'செயலைச் செற்றுப் பகைதெறு வான்பெரும்
புயலைப் பற்றுமப் பொங்கரி போக்கியோர்
முயலைப் பற்றிய வீரன் முயற்சியின்'
இயலைக் கூறி யிகழ்ந்ததும் எண்ணுதிர். 57

207. 'கனித்த வின்கனி கள்ளினிற் காட்டலும்
இனித்த பாக்கிய மிழிபித் தியற்றலும்
மனித்தர் தந்நிலை மாற மனத்திடைச்
சனித்த வேற்றுமை' சாற்றலும் போற்றுதிர். 58

பரதன்

208, "எண்ணில் கோடி இராமர்க ளென்னினும்
அண்ணல் நின்னரு ளுக்கரு காவரோ?"
கண்ணிக் கூறுமிக் கௌசலை வாசகத்
துண்ணி லைக்கு முயர்குணம் உன்னுதிர். 59

கௌசலை

209. "சிறக்குஞ் செல்வம் மகற்கெனச் சிந்தையிற்
பிறக்கும் பேருவ கையொன்றும் பேணலள்,
துறக்கும் மன்னவ னென்னுந் துணுக்கமே"
கறக்க லானதக் கௌசலை காதலை. 60

காதல் காம வேற்றுமை

210. இலங்கு காதல் இனியநீ ரோடையும்
கலங்கு காமக் கலுழியும் வேறுறப்
பொலங்கு ழையின் புனிதநல் வேட்கையில்
விலங்க ரக்கி விழைவிற் றழையுமே. 61

---

205. யுத்த. இராவணன் சோகப். 21.

206. கிட்கிந்தா. வாலிவதைப். 94

208. யுத்த. மீட்சிப். 230.

209. அயோத்தியா. மந்தரை சூழ்ச்சிப். 5.

210. பால. மிதிலைக்காட்சிப் படலம்; ஆரணிய. சூர்ப்பணகைப் படலம்.

211. "இந்த இப்பிற விக்கிரு மாதரைச்
சிந்தை யாலுந்தொ டே" னெனுஞ் செம்மலும்
நொந்த காமநுங் காவி யரக்கனும்
தந்த வேற்றுமை பொன்மனும் தாங்குமோ? 62

அடிமைத்தனம், நட்பு, சகோதரவாஞ்சை

212. அடிமை யிற்பெரி யானனு மன்குகன்
நெடிய கேள்சுக் கிரீவன் விபீடணன்
படியுஞ் சோதரர் பாரதன் லக்குவன்
வடியக் கூறி வகுத்த குணங்களால். 63

இராக்கதவீரர் தம்முள் வரும் வேற்றுமை

213. சுத்தனுங் கன்னன் சூரமும் இந்திர
சித்தன் மாயம் திணிதிறலும் லங்கைக்
கத்தன் காட்டுங் கடுமனத் திண்மையும்
எத்தெத் தன்மை இசைந்திசை யாவென்றான். 64

தாரையும் மண்டோதரியும்

214. வாலி மாள மனத்தயர் வுற்றும்பின்
தாலி யற்றுயிர்த் தாங்கின தாரைசீர்
வேலி யற்கண் மண்டோதரி ராவணன்
மேலி யற்றும் விளிவில் விளியுமே. 65

6. மெய்ப்பாட்டு வருணனைப் படலம்

215. "கூல மாமரத் திருஞ்சிறை புலர்த்துவ குரண்டம்
ஏலும் நீர்நிழல் இடையிடை யெறித்தலிற் படிகம்
போலும் வார்புனல் புகுந்துள வாமெனப் பொங்கி
யாலு மீன்கண மஞ்சின" துரைத்ததோர் புடையே. 1

216 'அணையி லேறின சிலசில, ஆழியை நீந்தப்
புணைகள் தேடின சிலசில, நீந்தின போன
துணைக ளோடுபுக் கழுந்தின சிலசில, தோன்றாப்
பணைக ளேறின' கவிப்பயம் பகர்ந்ததோர் புடையே. 2

---

211. சுந்தர. சூடாமணிப். 34.

212. அடிமையிற் சிறந்தார்: அனுமன், குகன். நட்புக்குச் சுக்கிரீவன், விபீடணன். சகோதரவாஞ்சைக்கு பரதன், இலக்குவன்.

213. கன்னன் - கும்பகருணன்.

215. கிட்கிந்தா. பம்பைவாவிப். 19.

216. யுத்த. மூலபலவதைப். 28.

217 இலகச் சேதுவை யியற்றிய காலையிற் கடலிற்
'குலம டந்தையர் போற்கொடி மரங்களைத் தொடர்ந்த,
விலகு வேசையர் போற்கரி வண்டுவிட்' டென்ன,
உலக மாதரி னெழுக்குவ மித்ததோர் புடையே. 3

218 'தாயொக் குமன்பில் நலம்பயப் பிற்றவ மொக்கும்
சேயொக் கும்பினர் செல்கதி யுய்க்கின்ற நீரால்
நோயொக் குமெனின் மருந்தொவ்' மென்று நல்வேந்தர்
வாயும் நன்னெறி வழுத்தவந் ததுவுமோர் புடையே. 4

219 'உளப்ப ரும்பிணிப் புற்றிடா லோபமென் றென்றே
அளப்ப ருங்குண மனைத்தையுங் கிளையொடு மழித்து'
விளைப்ப வாம்பயன் வீட்டுதீ மைக்குமு லமெனக்
கிளப்ப ரும்விதம் கிளந்தளந் ததுவுமோர் புடையே 5

220 'சொல்லொக் கும்வேகச் சுடுசரம் கொடியதா டகையின்
கல்லொக் குநெஞ்சிற் றங்கிடா தப்புறங் கழன்று
புல்லர்க் குநல்லோர் புகல்பொருள் போனபோ' லென்று
நல்லு ரையிற்கீழ் நடைநவின் றதுவுமோர் புடையே. 6

221 "உருண்ட வாய்தொறும் பொன்னுருள் உரைத்துரைத் தோடி
இருண்ட கல்லையும் தன்னிறப் படுத்திய ரதம்போல்
தெருண்ட மேலவர் சிறியவர்ச் சேரினு மவர்தம்
மருண்ட தன்மைமாற் றலை"மிலைந் ததுவுமோர் புடையே. 7

222. 'வியர்த்த மேனியன் விழிபொழி மழையன் முவினையைச்
செயிர்த்த சிந்தையன் தெருமர லுழந்துழந் திழிவான்
அயிர்த்து நோக்கினும் தென்றிசை யன்றிவே றறியான்'
பயத்த துன்பிவை பரதனைப் பகர்ந்ததோர் புடையே. 8

223. 'தேறி னார்களுந் தியங்கினர் மயங்கினர் திகைத்தார்
வேறு நாஞ்சொலும் வினையிலை மெய்யிலம் புலனும்
ஆறி னார்களு மஞ்சினர்' ஆக்கிட அரக்கன்
ஏறி னன்பெருந் தேரென இசைத்ததோர் புடையே. 9

---

217. யுத்த. சேதுபந்தனப். 59, 60.
218. பால. அரசியல். 4.
219. பால. தாடகைவதைப். 25.
220. பால. தாடகை வதைப். 50.
221. பால. சந்திரசயிலப். 8.
222. யுத்த. மீட்சிப். 208, 209.
223. யுத்த. இராவணன் தேர் ஏறு. 25.

224. 'தோற்பித் தீர்மதி யாரெழில் மேனியைச் சுட்டீர்
வேர்ப்பித் தீர்தென்றல் மீதுற மெலிவித்தீர் தோளை
ஆர்ப்பித் தீர்வேலை, அறிவித்தீ ரின்னலெ'ன் றயர்ந்த
மாற்பித் தேறும்ரா வணன்வெறி வலித்ததோர் புடையே. 10

225. 'பெண்பி றந்தவ ரருந்ததி யேமுதற் பெருமைப்
பண்பி றந்தவர்க் கருங்கல மாகிய பாவாய்
மண்பி றந்தக முனக்குநீ வானில் வந்தா' யென்
றெண்பி றந்தபெண் சிறப்பியம் பினதுமோர் புடையே. 11

226. "உலக மேழினோ டேழும்வந் தவனுயிர்க் குதவி
விலகு மென்னினும் வில்லுடை வாளியின் வீட்டித்
தலைமை யோடுநின் னுரமும் உனக்கின்று தருவேன்
புலமை யோ"யெனப் புனிதனட் புரைத்ததோர் புடையே. 12

பெருமிதநடை

227. "ஊழி பேரினும் பேர்வில உலகங்க ளலைந்து
தாழுங் காலத்துந் தாழ்வில" எனநனி தழைந்து,
"சூழ மொன்றினுக் கொன்றியோ சனைபல வுண்டென்"
றுளும் வர்ணனை யடையுங்கம் பீரத்தி னடையே. 13

228. 'மாகா ரினமினற் கொடிகையி லடுக்கினர் மடக்கி
மீகா ரத்தெவண் நறுந்துகள் விளக்கினர் வீசும்
ஆகா யந்தரு கங்கையங் கையிலளித் தெளித்தார்
பாகா யவிஞ்சொல் லவ'ரெனல் பெருமிதப் பண்பே. 14

229. 'ஆழித் தேரும்மா அரக்கரும் உருக்கிடும் செங்கட்
சூழி வெங்கதத் தும்பியும் துவன்றிய சேனை
ஊழி வெங்கன லொத்தது நடுநின்ற அனுமன்
பாழி மேரெ'னப் பகர்ந்ததும் பெருமிதப் பண்பே. 15

230. 'இறைவர் மூவரென் றெண்ணிடா தியம்பின ரென்னே
அறைக மூலனு மானொடு நால்வரா' மென்றே
பிறைஎ யிற்றிரா வணன்மகன் பேணிய பேச்சின்
முறையில் வந்ததும் அற்புதாற் புதத்தினோர் முடிவே. 16

---

224. யுத்த. மாயாசனகப். 11.
225. யுத்த. மீட்சிப். 123.
226. கிட்கிந்தா. நட்புக்கோட். 70.
227. கிட்கிந்தா. மராமரப். 3.
228. சுந்தர. ஊர்தேடு. 3.
229. சுந்தர. பாசப். 39.
230. சுந்தர. பிணிவீட்டுப். 67.

231. ‘ஊரி னிந்நெடுங் கோபுரத் துயர்ச்சிகண் டுணர்ந்தால்
மேரு வெங்ஙனம் விளர்க்குமோ முழுமுற்றும் வெள்கி’
மாரு திசொல்லிவ் வாசகத் தற்புத வரம்பு
யார்க டந்துளார்? அணியுமோ ரணிபெற்ற தாமே. 17

232. ‘நிலம்வி சும்புசெய் நெடியவன் படையுநின் றுனை
வலஞ்செய் தேகுவ தெனின்வலி மற்றினி யுண்டோ?
சலஞ்செய் யும்உல கெலாமிலக் குவன்முடிப் பா’னென்
றுலஞ்செய் தோளவன் உரைத்ததும் அற்புதோற் பனமே. 18

சினக்குறி

233. ‘சிலம்பு கள்சிலம் பிடச்செறித் தனகழ லோடும்
நிலம்பு கமிதித் தனள்நெடுங் கொடுமிடற் றூலம்
பலம்பு கப்பகை படுத்திட விடுத்திட அழன்றுள்’
சலம்பு கத்தருந் தொடையிதிற் சினத்தழல் ததும்பும். 19

234. ‘என்ற றத்துறை கேட்டலு மிருபது நயனம்
மின்றி றப்பன வொத்தன வெயில்விடு பகுவாய்
குன்றி றத்தெழித் துரப்பினன் குறிப்பதென் காமன்
தன்றி றத்தையுங் கடந்தது சீற்றத்தின் தகைமை.’ 20

வீரத்திறல்

235. ‘யாரே னுந்தானே ஆகுக, யான்தனி ஆண்மைப்
பேரே நின்றிடப் பெறுவனே வென்றியும் புகழும்,
நேரே செல்லுவன், கொல்லுமேல் நிமிர்தரு வென்றி
வேரே நிற்கு’ மென் னுரைவரும் வீரத்தின் விழுப்பம். 21

236. ‘வாங்கி வெஞ்சிலை கோதையை வீக்குகை விரலால்
தாங்கி நாணினைத் தாக்கினன் தாக்கிய தமரம்
ஓங்கு முக்கணன் தேவிசெய் ஊடலோட் டிடுமேல்
வீங்கு வீரன்விற் றிறத்தடல் விளம்பவே றுளதோ?’ 22

237. ‘நென்னற் கண்டமே னியும்பிறி தாய்நிலை தளர்வான்
தன்னைக் கண்டிரங் காதொலித் திடுந்தடங் கடல்வாய்
பின்னல் வெண்டிரைத் தவழிளந் தென்றல்கள் ளுயிர்க்கும்
புன்னை பொற்சுணம் பூசுதல்’ கருணையின் பொலிவே. 23

---

232. யுத்த. இந்திரசித்துவதைப். 4.
233. பால. தாடகை வதைப். 30.
234. சுந்தர. காட்சிப். 137.
235. யுத்த. இராவணன் வதைப். 135.
236. யுத்த. வருணனை வழிவேண்டு. 16.
237. யுத்த. கடல்காண். 5.

238. 'கானி னோங்குகற் பகமுயிர்த் திடுங்கதிர் வல்லி
மேனி பெற்றுகா மன்நெறி விளைத்தபூ வாசத்
தேன்மொ ழியுற்றே இனியசெவ் வியுநனி பெற்றே
மான்வி ழிநலாள் மருட்டலைத்' தெருட்டுவ தெவரே? 24

239. ''ஆளை யாவுனக் கமைந்தன மாருதம் அறைந்த
பூளை யாயின கண்டனை இன்றுபோய்ப் போர்க்கு
நாளை வாவென நல்கின'' செயலினாற் பெருவிற்
காளை காட்டினன் கருணையின் கொழுந்தொடு கனியே. 25

நகைச்சுவை

240. 'வில்லி னார்க்கெலாம் மேலவன் வெஞ்சமம் விளிய
செல்லி டாயினி யரசிரா வணற்கெனத் தேவர்
எல்ல ருந்தத்தம் தூசினை எறிந்துட னார்த்தார்'
சொல்ல ரும்வண மிதுதரும் நகைச்சுவை மிகையே. 26

241. ''நாமம் நாட்டிய சவமெனில் நானெனு மொருவர்
ஈம னாட்டிடை யிடாதுதன் வயிற்றிடை யிடுவன்
தூம னாட்டவன்'' என்றரு நகைச்சுவை துளும்ப
வீமம் நாட்டிய வீரரை விளக்கினர் சிலரால். 27

242. 'அந்த மில்துயர்க் காதியா யமைந்தியா தொன்றும்
சிந்தி யாதவள் தீமை செயாதவள் போன்று
மந்த ரையெனுங் கூற்றமும் வழிச்செலு மவரோ
டுந்திப் போன'அவ் வுரைவரும் உவகையக் கரையே. 28

243. 'மாதிரம் ஒன்றும் நோக்கிடான் வளநகர் நோக்கான்
காதலர் தம்மை நோக்கிடான் கடற்படை நோக்கான்
பூதல மென்னும் நங்கையே நோக்கியில் புக்க'
தீத கன்நடை செப்புமே நாண்தரு செயலே. 29

244. 'கூன லாமுது குடைச்சிறு குரங்கொடும் வெல்வார்
ஆன வரையோ மானுடர் ஆண்மை நம் பாலே
ஏனி லையிஃ தினிதினி' தென்றெடுத் தியம்பும்
வான ரசடல் மாற்றினான் உரைவஞ்சப் புகழே. 30

---

238. ஆரணிய. சூர்ப்பணகைப். 33.
239. யுத்த. முதற்போர்புரி. 255.
240. யுத்த. இந்திரசித்துவதைப். 56.
241. யுத்த. இலங்கை கேள்விப். 44.
242. அயோத்தியா. ஆறுசெல். 54.
243. யுத்த. கும்பகருணன் வதைப். 3.
244. சுந்தர. பாசப். 44.

245. 'ஊன வில்லிறுத் தோட்டைமா மரத்துளம் போட்டி
யானி ழைத்திட இல்லிழந் தின்னுயிர் சுமக்கும்
மானி டன்வலி நீயலா தியார்மதிப் பாரெ'ன்
றானிடம்வரும் இகழ்ச்சியி னிழியு மௌனமே. 31

246. 'செவிக ளைத்தளிர்க் கையினாற் சிக்குறப் பொத்திக்
கவினும் வெஞ்சிலைக் காகுத்தன் விழைகற்பி னாளை
புவியொ ழுக்கற நச்சிடல் புனிதரால் எரிசெய்
அவியை யொன்றுநாய் வேட்டெ'னல் அருவருப் பொறுப்பே.

[வேறு]

247. மனத்துறு வுணர்ச்சியின் மலிவைப் பற்பல
இனத்துறை யாக்குவ ரியற்கை நூலினார்
முனைத்துறை கதைதரு முடிபின் மக்களின்
அனைத்துறு நிலைமையு மளந்து காட்டினன். 33

சினம்

248. பாவமென் றறிஞராற் பகுத்து நாட்டிய
கோபமென் றொருகுணம் குணிக்க லாம்குறி
ஏவரு மறிதர இன்ன தீதெனத்
தீபம்போ லாங்கதன் திறம்வி ளக்கினன். 34

காதல்

249. உள்ளமென் றோரரண் இடிப்ப உட்புகும்
கள்ளக்கண் வாயிலைக் கடந்து காமவேள்
எள்ளரு முறையிலு மிழிந்த போக்கிலும்
தள்ளருஞ் சமர்தருஞ் சமர்த்தைச் சாற்றினன். 35

துயர்

250. பொறிவழி புகுந்துள புன்மைத் தேனும்பின்
அறிவழி யடலினால் அவலம் செய்தலால்
செறிவழி உயிர்செலாச் செறுத்தலால் உள்ளக்
குறியழி கொடுந்துயர்க் குவிவைக் கூறினன். 36

அச்சம்

251. உச்சிமென் பணையொடும் ஊசி வேரொடும்
பிச்சுளக் காவினைப் பிதிர்த்து மாற்றலால்
இச்சையுய்த் துழன்றடித் திடிக்கு முதையாம்
அச்சத்தின் கிளர்ச்சியும் அறிந்து தீட்டினன். 37

---

245. யுத்த. இராவணன் மந்திரப். 109.

246. ஆரணிய. இராவணன் சூழ்ச்சிப். 67

247-253. சினம், காதல், துயர், அச்சம், மகிழ்ச்சி, அற்புதம் என்னும் மனத்துறு உணர்ச்சி மிகுதியின் போக்குத் தொகுத்துரைக்கப்படுகிறது.

மகிழ்ச்சி

252. தனத்தினிற் புகழினிற் றைய லார்களில்
இனத்தினின் மக்களில் எளியர்த் தாங்கலிற்
கனத்தினின் நட்பினிற் கயவர்க் கோறலில்
மனத்தினின் வருமகிழ் வகுத்துக் காட்டினன். 38

அற்புதம்

253. புற்புதம் போற்புலை வாழ்க்கை மாக்களின்
மற்பொரு வலியினான் மதியி னாலுடற்
பொற்பினாற் புனிதநன் னெறியி னாற்றரும்
அற்புத வுணர்ச்சியு மளக்க லாயினன். 39

சினம்

[வேறு]

254. "கூறின மாற்றம் சென்று செவித்தொளை குறுகா முன்னம்
ஊறின வுதிரம் செங்கண் உயிர்த்தன வுயிர்ப்புச் செந்தீ
ஏறின புருவம் மேன்மே லிரிந்தன சுடர்க ளெங்கும்
கீறின தண்ட" மென்று கிளர்சினம் கிளத்தல் காண்டிர். 40

255. 'என்றலு முனிவு தூண்ட எழுந்துல கிறுதிக் காலம்
அன்றென ஆமென் னத்தே வயிர்த்தனர் வெயில் கரந்த
நின்றன திரிந்த மீது நிவந்தொளிர் புருவம் நெற்றிச்
சென்றன நகையும் வந்த' காதிசேய் சீற்றம் காண்டிர். 41

256. 'இறைக்கடை துடித்து நின்ற புருவத்தா ளெயிறென் றேதும்
பிறைக்கடை பிறங்கத் தன்பேழ் வாயினை மடித்து ளாள்நீர்
நிறைக்கட னின்றிரண்டு வடவைத்தீ நிமிர்வ வேபோல்
மறக்கடை அரக்கி தீகண் மண்டிட அழலல்' காண்டிர். 42

257. 'விண்ணும் கீழ்விழவோ வன்றிப் படிமேல் கீழ் படர வேயோ
எண்ணுங் கீறுயிரை யெல்லாம் எமனார்வா யிடவோ என்னோ
புண்ணுங்கீ றுதிர யாறு பொழிவபோற் பொங்கி யங்கி
கண்ணுங் கீறியவி ராமன்' கடுஞ்சினக் காந்தல் காண்டிர். 43

258. 'புண்டுளங் கியவாம் கண்கள் பொங்கிடக் கனலும் கார்சூழ்
விண்டுளங் கிடவி லங்கல் குலுங்கிட வெய்ய வெய்யோன்
கண்டுளம் கதிரும் தீயக் கார்நெடுங் கடல்சு லாவும்
மண்டுளங் கிட'வி ராதன் வயின்சுடர் வெகுளி காண்டிர். 44

---

254. ஆரணிய. சடாயு உயிர்நீத்த. 114
255. பால. கையடைப். 14; காதிசேய்-விசுவாமித்திரன்.
256. பால. தாடகைவதைப். 31.
258. ஆரணிய. விராதன் வதைப். 7.

259. 'காய்ந்தன சலாகை யன்ன உரைவந்து கதுவா முன்னம்
தீய்ந்தன செவிகள் உள்ளம் திரிந்தது சிவந்த சோரி
பாய்ந்தன கண்கள் ஒன்றும் பரிந்திலள் உயிர்ப்பு பெண்கட்
கேய்ந்தன வல்லா மாற்ற மியம்பினள்' சீற்றம் காண்டிர். 45

துயரம்

260. 'துடித்திலன் உயிர்ப்பு மில்லன் இமைக்கிலன் துள்ளிக் [கண்ணீர்ப்
பொடித்திலன் யாதுமொன்றும் புகன்றிலன் பொருமி யுள்ளம்
வெடித்திலன் விம்மிப் பாரில் வீழ்ந்திலன் வெயர்த்தா னல்லன்
அடுத்துள துன்ப' மெல்லாம் யாரளந் தொதுக்கற் பாலார்? 46

261. 'விழுதல் விம்முதல் வெதும்பல் மெய்யுற வெளிறல் பல்கால்
எழுதல் ஏங்குத லிரங்கல் இராமனை யெண்ணி யெண்ணித்
தொழுதல் சோருதல் துளங்கல் துயருழந் துயிர்த்தல் வெம்பி
அழுதலே யமைந்த' சீதை துயரையார் அறியற்பாலார்? 47

262. 'ஆற்றவெந் துயரத் தன்னுள் ஆண்டுறு மலக்க ணெக்கின்
ஏற்றமென் னினைக்க லாகும்? எதிரெடுத் தியம்ப லாகும்?
மாற்றமொன் றில்லை, செய்யும் வகையில்லை, அரக்க னுய
கூற்றெதிர் சீதை யுள்ளக் குலைவையார் குணிக்கற் பாலார்? 48

263. 'மக்களை மறந்தார் மாதர், வருத்தத்தால் தாயரானார்
புக்கிட மறிந்தி லாரே புதல்வரும், பூச லிட்டு
உக்கனர் உயங்கி நைந்தார், உருகியுள் ளுலைந்து சோர்ந்தார்,
துக்கத்தால் அறிவு நீத்தார் துயர்சொலத் துணிவர் யாரே? 49

மகிழ்ச்சி

264. 'பொடித்தன ரோமம், மூடிப் பொழிந்தன கண்ணீர் பொங்கித்,
துடித்தன மார்பும் தோளும், தோன்றின வெயர்வின் றுள்ளி,
மடித்தது மணிவா யாவி வருவது போவ தாகித்
தடித்தது மேனி' யென்னத் தழைமகிழ்ச் சலுகை நோக்கீர். 50

265. 'இழந்தநன் மணியை நாகம் எதிர்ந்ததோ வென்ன லானாள்.
பழந்தன மிழந்து பின்னர் அதுபடைத் தவரை யொத்தாள்,
குழந்தையை யரிதிற் பெற்ற மலடியைக் கடுத்தல் கொண் [டாள்',
உழந்தபின் சீதை யுற்ற உணர்வுமாய் ஓகை என்னே? 51

---

259. சுந்தர. காட்சிப். **115.**
260. யுத்த. மாயா சீதைப். **56.**
261. சுந்தர. காட்சிப். **5.**
262. ஆரணிய. இராவணன் சூழ்ச்சிப். **64.**
263. அயோத்தியா. நகர்நீங்கு. **196.**
264. சுந்தர. திருவடி தொழுத. **48.**
265. சுந்தர. உருக்காட்டுப். **65.**

266. 'அழுதனர் சிலவர் முன்னின் றுர்த்தனர் சிலவ ரண்மித்
தொழுதனர் சிலவ ராடித் துள்ளினர் சிலவ ரள்ளி
முழுதுற விழுங்கு வார்போல் மொய்த்தனர் சிலவர் சுற்றும்
தழுவினர் சுமந்து சென்ற' கவிமகிழ்த் தருக்கு மென்னே ! 52

அச்சம்

267. 'எறுப்பினம் கடைகொண் டுள்ள யானையே முதல வாய
உறுப்புடை யுயிர்க ளெல்லாம் உலைந்தலைந் தொடுங்கிச்
[சாய்ந்த,
வெறிப்புற நோக்கு கின்ற, விம்மியே வெருவு கின்ற,
பறிப்பருங் கவந்தன் கைக்குட்' படுமுயிர்ப் பதர்த்தம் பாரீர்.53

268. 'நீரிடு துகில ரச்சர், நெருப்பிடு நெஞ்சர்' நெக்குப்
பீரிடு முருவர், தெற்றிப் பிணங்கிடுந் தாளர், பேழ்வாய்
ஊரிடு பூச லாராய் உளைத்தனர் ஓடி யுற்றார்,
பாரிடு பருவத் தேவர்' படுபயப் பனிப்பும் பாரீர். 54

அற்புதம்

269. 'நன்னக ரதனை நோக்கி நளினக்கை மறித்து நாகர்
பொன்னக ரிதனை யொக்கும் என்பது புல்லி தம்மா !
இன்னக ரண்ட மாள்வான் இருப்பதற் கேதீ' தென்னச்
சொன்ன மாருதியி னுள்ளம் ருேன்றதி சயத்தான் மாய்ந்த ! 55

270. 'வில்லிடைக் கழித்த வாளி மிடலினை வெருவித் தத்தம்
பல்லிடைக் கிழித்துப் பாயும் கவியினுற் பயனுய்ப் பா'யென்
றெல்லிடை யிருண்ட மேனி இந்திர சித்தன் கூறும்
சொல்லிடை வீரற் கேய்ந்த நகைச்சுவை துளும்பு மன்றே. 56

இரக்கம்

[வேறு]

271. "உண்ணீர் வேட்கை மிகவே உயங்கு மெந்தைக் கொருநீ
தண்ணீர் கொடுபோ யளித்தென் சாவு முரைத்தும் புதல்வன்
விண்மீ தடைவான் தொழுதான் எனவு மவர்பால் விளம்"பென்
றெண்ணீர் மையினுன் சொல்லே இரக்கத் தகவி னெல்லே. 57

---

266. சுந்தர. திருவடிதொழுத. 4.
267. ஆரணிய. கவந்தன். 2.
268. சுந்தர. பொழிலிறுத்த. 55.
269. சுந்தர. கடல்தாவு. 92.
271. அயோத்தியா. நகர்நீங்கு. 78.

[வேறு]

272. அகத்துள வுணர்ச்சி யாவும் அங்கமோர் ஆடி போல
மிகுத்துள குறிகள் கொண்டே வெளியுற விளக்கும்; மெய்ந்நூல்
வகுத்துள மரபின் பெற்றி வருபவை வரைவ ரன்றி
நகைதர இயற்கை நைய நலிவரோ புலவர் நாடி? 58

273. வாலினை யுயர்த்தி யஞ்சி மறுகின மதமா[1] வென்னே,
காலினும் விசையிற் பாய்ந்த காலின்மா மதலை[2] யென்னே,
கூலமா ருதியின் மாற்பிற் குத்தக்கை குவித்தா[3] னென்னே,
கோலமார் சீரை யாரக் குயின்றசித் திரங்க ளாமே. 59

உதாரணம்:

1. "மொய்யுறு செவிக டாவி முதுகுற முறைகா றள்ள
மையுறு விசும்பி னூடு நிமிர்ந்த வாலதிய மஞ்சின்
மெய்யுறத் தழீஇய மெல்லென் பிடியொடும் வெருவ லோடும்
கையுற மரங்கள் சுற்றிப் பிளிறின களிநல் யானை." (1)

2. "வால்விசைத் துக்கை நிமிர்த்து வாயினையும்
சிறிதகலம் வகுத்து மானக்
கால்நிலத்தி னிடையூன்றி யுரநெருக்கிக்
கழுத்தினையுஞ் சுருக்கிக் காட்டி
தோள்மயிர்க் குந்தளஞ் சிலிர்ப்ப விசைத்தெழுவா
னவ்விலங்கை துளங்கிச் சூழ்ந்த
வேலையிற்புக் கழுந்தியதோர் மரக்கலம்போல்
சுரித்துலைய விசயத் தோளான்." (2)

3. "உறுக்கித்தனி யெதிர்நின்றவன் உரத்தில்தன தொளிர்பல்
லிறுக்கிப்பல நெடுவாய்மடித் தெரிகண்டொறு மிழிய
முறுக்கிப்பொறி நிமிரப்பல விரன்மூரிய திசையக்
குறுக்கிக்கர நெடுந்தோள்புற நிமிரக்கொடு குத்த." (3)

[வேறு]

274. "திசையினை நோக்கும் நின்ற
தேவரை நோக்கும் வந்த
வசையினை நோக்கும் கொற்ற
வாளினை நோக்கும் சீதை

---

273. அழகு நிறை கவிச் சித்திரங்களாக இப்பாடலில் குறித்த மூன்றற்கும் கம்பராமாயண உதாரணமும் ஆசிரியர் எடுத்து எழுதியுள்ளார்.

1. சுந்தர. கடல் தாவு. 5.
2. யுத்த. மருத்துமலைப். 32.
3. யுத்த. முதற்போர் புரி. 181.

274. யுத்த. அதிகாயன் வதைப். 263.

நசையிடைக் கண்டா னென்ன
நகுமழும் முனியும் நாணும்"
விசையத் தோள்வீரற் செற்ற
வேறுவே றுணர்ச்சி காண்டிர். 60

275. "தலையினை நோக்கும் தம்பி
கொற்றவை தழீஇய பொற்றோள்
மலையினை நோக்கும் நின்ற
மாருதி வலியை நோக்கும்
சிலையினை நோக்கும் தேவர்
செய்கையை நோக்கும் செய்த
கொலையினை நோக்கி" ராமன்
கொளுங்கொளைக் களிப்பும் காண்டிர். 61

276. "உயிர்ப்புமுன் னுதித்த பின்னர்
உரோமங்கள் சிலிர்ப்ப வூறி
வியர்ப்புள தாகக் கண்கள்
விழித்தன மேனி மெல்ல
பெயர்த்துவாய் புனல்வந் தூற
விக்கலும் பிறக்க" காட்டி
அயர்த்தல்நீங் கனுமன் தேற்றம்
இயற்கையோ டணுகக் காண்டிர். 62

277. தீதியல் வாழ்க்கைச் சேர்க்கைத்
திருவிலி சூழ்ச்சி யாலம்
மாதினைக் கொணர்ந்து மன்னர்
அமர்க்களம் மடிந்தா ரென்ன
ஓதிக்காட் டுறலு மன்னாள்
உயிர்பதைத் துடன்வீழ் துன்ப
ஓதத்தின் திரைமொத் துண்டே
உடைந்துழன் றுலைதல் காண்டிர். 63

உதாரணம்

1. "அடித்தாள் முலைமேல் வயிறலைத்தாள்
அழுதாள் தொழுதா ளனல்வீழ்ந்த
கொடித்தா னென்ன மெய்சுருண்டாள்
கொதித்தாள் பதைத்தாள் குலைவுற்றாள்

---

275. யுத்த. இந்திரசித்தன் வதைப். 66.

276. யுத்த. மருத்துமலைப். 12.

277. இந்திரசித்தன் விட்ட பிரமாத்திரத்தால் இராமன் முதலியோரும் குரங்குப் படைகளும் மாண்டார் போல் வீழ்ந்து கிடந்த போர்க்களத்தைச் சீதைக்கு அரக்கர் மகளிர் காட்டியபோது அவள் உற்ற துன்பம் இங்குச் சுட்டிக் காட்டப்படுகிறது.

துடித்தாள் மின்போ லுயிர்கரப்பச்
சோர்ந்தாள் சுழன்றாள் துள்ளினாள்
குடித்தாள் துயரை உயிரோடுங்
குழைத்தாள் உழைத்தாள் குயிலன்னாள்." (4)

2. "விழுந்தாள் புரண்டாள் உடல்முழுதும்
வெயர்த்தாள் உயிர்த்தாள் வெதும்பினாள்
எழுந்தாள் இருந்தாள் மலர்க்கரத்தை
நெரித்தாள் சிரித்தா ளேங்கினாள்
கொழுந்தா வென்று ளயோத்தியர்தம்
கோவே யென்று ளெவ்வுலகும்
தொழுந்தாளர சேயோ வென்றாள்
சோர்ந்தா ளரற்றத் தொடங்கினாள்." (5)

7. சொல், நடை வனப்புப் படலம்

கலிவிருத்தம்

278. வில்லெ டுத்துமி ளிர்மணிக் கோவையோ?
மல்லெ டுத்தபூ மாரியோ? வேரியோ?
பல்லவப் பரப்போ? பண்ணின் மாலையோ?
சொல்லெ டுத்துத் தொடுத்த தொடையலே. 1

உதாரணம்

"வெய்யோனொளி தன்மேனியின்
விரிசோதியின் மறையப்
பொய்யோவெனு மிடையாளொடும்
இளையானொடும் போனான்
மையோ மரகதமோ மறி
கடலோ மழைமுகிலோ
ஐயோஇவன் வடிவென்பதோ
ரழியாவழ குடையான். (6)

279. மேல சந்தம் மணந்தரு மின்பவாய்
கால சந்த கடுநடை யில்லவாய்
நாலு சந்தத் தியற்றிய நாற்கவி
சாலு மென்மையி னுன்மனஞ் சாயுமே. 2

1. யுத்த. சீதை களம் காண். 8.
2. யுத்த. சீதை களம் காண். 9.

278. i. அயோத்தியா. கங்கைப். 1.

279. கடுநடை யில்லாதனவாய் கம்பன் பாடிய நான்குவகையான சந்தக் கவிகளை இப்பாடல் குறிப்பிடுகிறது. அந்தந்தச் சந்தங்களுக்கு ஏற்புடைய கம்பன் கவிகளும் உதாரண மாக எடுத்துத் தரப்பட்டுள்ளன.

உதாரணம்

1. "நந்த நந்த வனங்களில் நாண்மலர்
கந்த முந்திய கற்பகக் காவினின்
அந்தர் வந்தென அந்திதன் கைதர
மந்த மந்த மணந்தது வாடையே." (7)

2. "மந்தார முந்து மகரந்த மணந்த வாடை
செந்தா மரைவாண் முகத்திற் செறிவேர் சிதைப்ப
தந்தா முலகத்திடை விஞ்சையர் பாணி தள்ளும்
கந்தார வீணைக் களிசெஞ் செவிக்காது நுங்க." (8)

3. "பஞ்சியொளிர் விஞ்சுகுளிர் பல்லவ மனுங்கச்
செஞ்செவிய கஞ்சநிமிர் சீறடி யளாகி
அஞ்சொலிள மஞ்ஞையென அன்னமென மின்னும்
வஞ்சியென நஞ்சமென வஞ்சமகள் வந்தாள்." (9)

4. "வங்கியம்பல தேன் விளம்பின
வாணி முந்தின பாணியின்
பங்கியம்பர மெங்கும் விம்மின
பம்பை பம்மினப் பல்வகை
பொங்கியம் பலவுங் கறங்கின
நூபு ரங்கள் புலம்பவெண்
சங்கியம்பின கொம்ப லம்பின
சாம கீதம் நிரம்பவே." (10)

[வேறு]

வஞ்சி விருத்தம்

280. காவருங் கடிகான் வருந்தடப்
பூவருமணம் பொலித லோவென
மேவருங்கவி வாணர் நாவரும்
பாவரும்வணம் பரிம ளிப்பதே. 3

நெடில் வண்ணம்

281. ஊடுலாவுநீர் ஓடை யோவெறி
மாடுலாமகிழ் வாடை யோஒளிச்
சேடுலாங்கதிர்க் காலி ஞரமோ
நீடுலாவுசீர்ச் சூடு பாவரோ! 4

---

2. சுந்தர. கடல்தாவு. 74.
3. ஆரணிய சூர்ப்பணகைப்—31
4. அயோத்தியா, கைகேயி சூழ்வினைப். 64.

280. பாவின் மணமும் ஒழுக்கும்.

உதாரணம்

[வேறு]

1. "பாரு மேடாதுநீ டாதெனும் பாலதே
தூரு மேடாதுகூ டாதரோ சூரியன்
தேரு மோடாதுமா மாகமீ தேரினோர்
காரு மோடாதுநீள் காலுமோ டாதரோ." (11)

2. "ஆயமா னுகர்தா மூழியா னேயலால்
காயமா னயினன் யாவனே காவலா
நீயமா னோர்தியா னேருமா ரீசனுர்
மாயமா னயினன் மாயமா னயினன். (12)

3. "நாணுலாவு மேருவொடு நாணுலாவு பாணியும்
தூணுலாவு தோளும் வாளி யூடுலாவு தூணியும்
வாணிலாவி னூலுலாவு மாலைமார்பு மீளவும்
காணலாகு மாயின்ஆவி காணலாகு மேகொலாம். (13)

4. "நீடுநாக முடுமேக மோடநீரு மோடநேர்
ஆடுநாக மோட மான யானையோட வாளிபோம்
மாடுநாக நீடுசாரல் வானையோடும் வாவியூ
டோடுநாக மோடவேங்கை யோடும்யூகம் ஓடவே." (14)

5. "தெவ்விரா வகைநெடுஞ் சிகைவிரா மழுவினன்
அவ்விரா மனையுமா வலிதொலைத் தருளினன்
இவ்விரா கவன்வெகுண் டெழுமிரா வணையனும்
வெவ்விரா தனையிரா வகைதுடைத் தருளினன்." (15)

குறில் வண்ணம்

282. வெறிய தொங்கலுக் குரிய தென்னென
நறிய நன்மலர்ச் செறிவு நண்ணிய
குறிலெ டுத்தடுத் துத்தொ டுத்திசை
பெறுவர் குற்றிசைப் பெற்றி முற்றுற. 5

---

281. 1. பால. தாடகைவதைப். 9.
2. கிட்கிந்தா. நட்புக் கோட். 11
3. பால. கார்முகப். 47
4. கிட்கிந்தா வாலிவதைப். 4.
5. கிட்கிந்தா. நட்புக்கோட். 9.

282. குற்றெழுத்து இசையால் வந்த பாட்டுவகை.

உதாரணம்

1. குரவங் குவிகோங் கலர்கொம் பினெடும்
இரவங் கனுறும் பொழுதே கினரால்
சரபங் கனிருந் துதவங் கருதும்
மரவங் கிளர்கோங் கொளிர்வா சவனம்." (16)

2. தகவுமிகு தவமுமிவை தழுவவுயர் கொழுநர்
முகமுமவ ரருளும்நுகர் கிலர்க டுயர்முடுக
அகவுமிள மயில்களுயி ரலசியன வனையார்
மகவுமுலை வருடவிள மகளிர்க டுயின்றார். (17)

3. "விளிம்பு தெற்றி முற்றுவித்து வெள்ளிகட்டி யுள்ளுறப்
பளிங்குபொற் றலத்தகட் டடுத்துறப் படுத்தலின்
தளிந்தகற் றலத்தோடச் சலத்தினைத் தனித்துறத்
தெளிந்து ணர்த்து கிற்றுமென்றல் தேவராலு மாவதே." (18)

அகைப்பு வண்ணம்

283. சித்தி ரத்தொடு சேர கைப்பென
வைத்த வண்ணமும் மன்னெ டில்குறில்
ஒத்த வண்ணமா யோங்க டிக்குளே
உற்ற வோசைசீ ரிற்ற வோசையே. 6

உதாரணம்

1. "மாகந்தமும் மகரந்தமு மளகந்தரு மதியின்
பாகந்தரு நுதலாளொடு பவழந்தரு மிதழான்
மேகந்தனி வருகின்றது மின்னோடென மிளிர்பூண்
நாகந்தனி வருகின்றது பிடியோடென நடவா." (19)

2. "வந்தெங் கும்தன் னுயிரே யோபிறி தொன்றோ
கந்தந் துன்றும் சோர்குழல் காணார் கலைபேணார்
அந்தந் தோறு மற்றுகு முத்து மவைபாரார்
சிந்துஞ் சந்தத் தேமலர் நாடித் திரிவாரும்." (20)

3. "அந்தமா மதிற்புறத் தகத்தெழுந் தலர்ந்த நீள்
கந்தநாறு பங்கயத்த கானமான மாதரார்
முந்துவாண் முகங்களுக் குடைந்துபோன மொய்ம்பெலாம்
வந்துபோர் மலைக்கமா மதில்வளைத்தல் மானுமே." (21)

---

1. ஆரணிய. சரபங்கன் பிறப்பு நீங்கு. 1.
2. அயோத்தியா. தைலம் ஆட்டு. 15.
3. பால. நகரப். 20.

283. நெடிலும் குறிலுமாக ஓரடியில் அமைந்தெழும் ஓசை நயம்.
1. அயோத்தியா. கங்கைப். 4.
2. பால. பூக்கொய். 23.
3. பால. நகரப். 16.

வல்லிசை மெல்லிசை இயைபு வண்ணங்கள்

284. வல்லி சைகொடு மலியு வண்ணமும்
மெல்லி சையொடு மெலியு வண்ணமும்
எல்லி சைக்கிடை இயைபு வண்ணமும்
நல்லி சைஞரின் நாவின் மேவுமே. 7

வல்லிசை வண்ணம்

285. கரட்டுப் பொற்றை முரட்ட தர்க்கற்
றுறட்டிற் பட்டு வெருட்டி விட்ட
பறட்டைக் காற்சா டுருட்ட ரற்ற
விரட்டி சைசெவி டாக்கும் வல்லிசை. 8

உதாரணம்

1. இறைக்கடை துடித்தபுரு வத்தளெயி றென்னும்
பிறைக்கடை பிறக்கிட மடித்தபில வாயள்
மறக்கடை யரக்கிவட வைக்கன லிரண்டாய்
நிறைக்கடல் முளைத்தென நெருப்பெழ விழித்தாள்." (22)

2. "எட்டோ டெட்டுமத மாகரி யிரட்டி அரிமா
வட்ட வெங்கண்வரை யாளிபதி னறு வகையில்
கிட்ட விட்டிடை கிடந்தன செறிந்த வொருகை
தொட்ட முத்தலை யயிற்றெரு கைமிடற் கழுவொடே." (23)

மெல்லிசை வண்ணம்

286. பழுவம் வாய்கெழு பாசி பாசிலை
தழுவு தண்டலை சாய ஓய்வொடு
நழுவு மோடைநல் லோசை மூசலே
இழுகு மெல்லியத் தின்ப மென்பரால். 9

உதாரணம்

1. "செங்க ணங்க வரவின் பொருவில் செம்மணி விராய்
வெங்க ணங்க வலயங் களும்வி லங்க இரவி
சங்க ணங்கிய சலஞ்சலம் அலம்பு தவளக்
கங்க ணங்களு மிலங்கிய கரம்பி றழவே." (24)

---

284. வல்லிசை வண்ணம், மெல்லிசை வண்ணம், இடை இயைபு வண்ணம் என்னும் நல்லிசைகள் அமைந்த பாங்கு தெரிவித்தல்.

285. வல்லிசை இரட்டிவரும் ஓசைநயம் குறிப்பித்தவாறு.

1. பால. தாடகை வதைப். 31.
2. ஆரணிய. விராதன் வதைப். 5.

286. இழுகிய மெல்லோசை இன்பம் எடுத்துரைத்தல்.

1. ஆரணிய. விராதன் வதைப். 15.

2. "விரிந்தன நரந்தமுதல் வெண்மலர் வளாகத்
துரிஞ்சவரு தென்றலுயி ரின்புடை யுலாவ
சொரிந்தன கருங்கண்வரு துள்ளிதரு வெள்ளம்
எரிந்தன பிரிந்தவர்தம் எஞ்சுதலில் நெஞ்சம்." (25)

3. "சுவண வண்ண னொடு கண்ண னுறை தோளன் விசைதோய்
அவண விண்ணிடை நிமிர்ந்து படர்கின்ற வனறம்
சிவண தன்னசிறை முன்னவரோ டேகு செலவத்
துவண னென்னும்நெடு மன்னவனு மொத்த னனரோ." (26)

ஏந்தல் வண்ணம்

287. ஏய்ந்த சொற்கள் இருவிதப் பொருள்
ஏந்து மாறெதி ராய்ந்த சைப்பதே
ஏந்தல் வண்ணம் ஈதாக்கி ஞர்க் கொரு
ஏந்தல் நங்கவி வேந்த னென்பவே. 10

உதாரணம்

[வேறு]

288. 'கோடி யென்றனன் உள்ளமுங் கோடிய கொடியாள்'
'ஓடுயிரொடு உடையெலா முடையுமா லென்ருள்'
'வேடுமன்பினில் விலங்கினேன் விலங்கெனப் பட்டே'
பீடுடைமடக் கெத்தனை இவ்வணம் பிணித்தான். 11

289 "ஆர வாரத்தி னேடு மருவியே
ஆர வாரத்தி னேடு மருவியே"
ஆர வாரத் தனையோ டரும்பொருள்
ஆர வாரத் தடியி லணிந்துளார்? 12

290 "ஆறு சேர்வன மாவரை யாடுமே
ஆறு சேர்வன மாவரை யாடுமே"
கூறு செய்திடக் கூடிம் மடக்கினுக்
கூறு செய்திடங் கூடினு மாவதென்? 13

யமகம்

291 "இரும்ப சிக்கு மருந்தென எஃகினே
டிரும்ப சிக்கு மருந்து மெயிற்றினன்"
வரும்ப தத்துணை வைக்குமெ மகமே
வரும்ப தத்துணை வைக்குமெ மகமே. 14

---

2. கிட்கிந்தா. நட்புக்கோட். 9.

3. சுந்தர. ஊர்தேடு. 163.

287. இயைந்த சொற்கள் இருவிதப் பொருள்படுமாறு அமையும் ஏந்தல் வண்ணம் எடுத்துரைத்தல்.

291. யமகமும் உளம்பதியும் வகையில் அமைந்துள்ள பாங்கு. யுத்த. கும்பகருணன் வதைப். 64.

உதாரணம்

"அப்பு மாரி யழுந்திய மார்பைத்தன்
னப்பு மாரி யழுதிழி யாக்கையின்
அப்பு மாரி னணைக்கு மரற்றுமால்
அப்பு மானுற்ற தியாவ ருற்றாரரோ!" (27)

செழும் பொருள்-தொடர்

[வேறு]

292 "காட்டாதன காட்டிய தாதை"யெனத்
தீட்டாதன வாய செழும்பொருளைப்
பாட்டான் மறைகிற்பவர் பாவலரே
மாட்டாதவ ரேன்கவி மாட்டுறலே? 15

293. "சிரித்த பங்கய" மாஞ்செப்பின் செப்பினை
விரித்து ரைப்பது வீணென லாவதே;
வரித்த முத்தொடு மாமணி கொண்டுசிங்
கரித்த மாளிகை ஒளிகாணா ரெவர்? 16

294. 'கரும்பை யுஞ்சுவை கைப்பித்த சொல்லியர்
'அரம்பை யுமடி மைகொளுஞ் சாயலர்'
'இரும்பை யுங்கசி வித்த வியல்பினர்'
விரும்ப வேய்தொடர் இன்னணம் எத்தனை ? 17

295. "தையல் சிற்றிடை யாளொரு தாழ்குழல்"
"மைத வழ்ந்த கருங்கணோர் வாணுதல்"
"நையும் நொய்ய மருங்குலோர் நங்கை"யென்
றெய்தெ ழிற்றொடர் இயற்றிய தெத்தனை? 18

296. குருதி வாளெனும் செவ்வரி கட்குயில்"
'ஒருவில் பெண்மை யுடலினுக் கோருயிர்'
'தெரிவை மார்க்கொரு கட்டளை யாந்திரு'
அரிவை யர்க்குப்பே ரெத்தனை யள்ளினன்? 19

297. 'குவளை யினெழில் வேலின் கொடுமைகார்
திவளு மஞ்சனஞ் சேர்தரத் தீட்டிய
தவள வாணகை தாங்கு தடங்கண்ஏர்
இவரச் சொற்றொட ரெத்தனை ஏந்தினன்? 20

யுத்த. இராவணன் சோகப். 31.

293. அயோத்தியா. கைகேயி சூழ்வினைப். 54.

294. பொருள்பொதி சொற்றொடர் வளம்.

295. பால. உலாவியற். 20, 23, 36.

296. அயோத்தியா. சித்திரகூடப். 3, 14, 33.

297. அயோத்தியா. கைகேயி சூழ்வினைப். 74.

298. "உமைக்கு நாதனே டோங்கு புள்ளூர்தியும்
இமைப்பில் நாட்டங்க ளெட்டுடை யானு"மென்
றமைபோ லண்ட மழித்தளித் தாக்குவார்
அமைக்க வந்த அருந்தொடர் எத்தனை? 21

299. "செயிர்ப் பினுமெழில் செய்யுந் திருமுகம்"
"முயற்க றைபயி லாத மதிமுகம்"
வியக்க லாம்விதத் தின்னன போற்றொடர்
மயக்க லாயின மட்டில் வருபவோ? 22

[வேறு]

300. 'நஞ்சு தட்டுரு வுற்றிடை நடத்தல்'
'பஞ்சி மென்றமைப் பதந்தரும் பாவை'
'துஞ்சல் செய்யவோ தோள்தினும் சோம்பு'
எஞ்ச லிற்றொடர் எத்தனை தந்தான்? 24

301. 'கருநெ ருப்பிடை யெழுந்தவெண் ணெருப்பு
'அரக்கர் கான்சுட முளைகற்பின் கனலி'
'விருப்ப வெங்களி விழிக்கொரு விழவு'
திருப்புக இங்ஙன் செப்பினன் சிலவோ? 24

302. 'தாய ரற்பரி சேடியர்' 'பள்ளம்
பாய்நன் னீரினர்' 'பஞ்சின்றிப் பழுத்த
தூய காலினர்' 'குளம் தூவா நளினம்'
ஏய்மு கத்தியர் இயம்பினன் சிலரோ? 25

[வேறு]

303. "அரம்பையர் விஞ்சைநாட் டளகவல்லியர்
நரம்பினு மினியசொல் நாக நாடியர்
கரும்பியல் சித்தியர் இயக்கர் கன்னியர்"
வரம்பறு சும்மைநல் லார்சொல் லாறரோ! 26

304. இன்னணங் கூறிய இவரைப் பின்னரும்,
"பொன்னகர் மடந்தையர் விஞ்சைப் பூவையர்
பன்னக வனிதையர் இயக்கர் பாவையர்"
என்னவே றெருவண மிசைத்தல் மேயினன். 27

---

298. அயோத்தியா. மந்தரை சூழ்ச்சிப். 23.

299. யுத்த. ஒற்றுக் கேள்விப். 20.

301. பால. மிதிலைக் காட்சி. 76.

302. பால. மிதிலைக் காட்சி. 81.

303. சுந்தர. பிணிவீட்டு. 16.

304. சுந்தர. ஊர்தேடு. 49.

[வேறு]

305. "நீண்டு குழன்று நெய்த் திருண்டு
நெறிந்து செறிந்து நெடுநீலம்
பூண்டு புரிந்து சரிந்துகடை
சுருண்டு புகையு நறும்பூவும்
வேண்டு மல்ல வெனத்தெய்வ
வெறியே கமழும் நறுங்குஞ்சி"
ஈண்டிவ் வாறு எடுத்தோத
இயலா தோபே ரெழிலம்மா! 28

மாதர் வனப்பு

[வேறு]

306. "வாளை தாவுறு வாலியந் தடத்தினும் வாயா
நாளந் தாங்குறு நகையின்முத் தொளிநல்குமென்ன
வாள ரத்தவேல் வண்டொடு கெண்டைகள் மயங்கச்
சாள ரத்தினும் பூத்ததா மரைமலர்" தந்தான். 29

[வேறு]

307. "மழையினை நீல மூட்டி வாசமும் புகையு மாட்டி
உழையுழைச் சுருட்டி மென்பூ குவித்திடைக் கிடையூறென்று
பிழையுடை விதியார் செய்த பெருங்குழற் கருங்கட் செவ்வாய்
இழையணி மகளிர் கூந்தல்"எழில்செயும் வளனும் எண்ணீர். 30

308. தேனிடைக் கரும்பிற் பாலி லமுதினிற் கிளவி தேடி
மானிடைக் கயலின் வாளின் மலரிடை நயனம் வாங்கி
மேனடை யனைய மற்று நல்வழி நல்க வேண்டி
வானுடை யண்ணல் செய்த" வனப் பொரு வனப்போ
[வென்னப்—31

309. "பண்களாற் கிளவி செய்து பவளத்தா லதர மாக்கிப்
பெண்களா ளுர்க்கு ணல்ல உறுப்பெலாம் பெருக்கி நீட்ட
எண்களா லளவா மானக் குணந்தொகுத் தியற்றிக் கண்டார்"
கண்கொளா வனப்பைத் தீட்டும் கவித்திறக் காம்பும்காணீர்.

310. "ஆலையின் மலையின் சாரல் முழையினில் லமுத வாரிச்
சோலையிற் றுவச ரில்லிற் சோனக மனையிற் றூய
வேலையிற் கொளவொண் ணுதவேற்கணுள் குமுதச் செவ்வாய்
வாலெயிற் றூறு தீந்தேன்" எனப்பல வகைத்தேன் தந்தான். 33

---

305. சுந்தர. உருக்காட்டு. 57.
306. அயோத்தியா. மந்திரப். 53
307. யுத்த. நாகபாசப். 282.
308. யுத்த. நாகபாசப். 283.
309. யுத்த. மாயாசனகப். 7.
310. சுந்தர. ஊர் தேடு. 112.

311. "பூமழை புகழத்தக்க புனன்மழை புதுமென் சுண்ணம்
தூமழை தரளப்பந்தி சொரிமழை தோகைநல்லார்
தாமிழை நெரியத் தூளாய்த் தகர்பொனின் மழையே யின்ன
மாமழை மயங்கும் வீதி" எனப்பல மழையுந் தந்தான். 34

312. 'நஞ்சினுங் கொடிய நாட்டம் அமுதினும் நயந்து நோக்கல்'
வஞ்சிபோல் மருங்கு லாரிற் சிலர்தரும் வழக்க மென்றே'
அஞ்சொலை யமுதிற்கொண்ட அகலிகை கதையாற் காட்டி
நெஞ்சினுல் பிழையாள் கற்பி னெறியையுங் காத்துத் தந்தான்.

முரண் தொடை

[வேறு]

313. உலையு முள்ளத்துச் சூர்ப்ப ணகையுரை
'கலையு வாமதி' யாதிய நாற்கவி
மிலைமு ரண்தொடை வீறு மிறைக்கவிக்
கிலையென் றீங்கெடுத் தாளுதல் வேண்டுமோ? 36

[வேறு]

314. 'நொய்ய கழுத்தி னுனேநுன்
மகற்கு காப்பினுணெ' னலும்,
'தையல் கடனின் றெடுத்தவனைத்
தயிலக் கடலுய்த்' தாரெனலும்,
'வெய்ய தாம்வெற்ற ரசெய்தி
வீட்டர செற்கீய்ந்தா' னெனலும்,
செய்யத் தொடுத்த சொற்றொடரே
சிறப்பு நிரப்பு முரண்தொடையே. 37

[வேறு]

315. 'வெளுப்பன கறுப்ப வான
வேற்கணு ளொருத்தி யுள்ளம்
குளிர்ப்பொடு காண வந்தாள்
வெதுப்பொடு மீண்டா' ளென்றும்

---

311. அயோத்தியா. மந்தரை சூழ்ச்சிப். 44
312. பால. பூக்கொய். 7.
313. முரண்தொடை அமைந்த கவிகள்.
ஆரணிய. சூர்ப்பணகைப். 74, 75, 76, 77.
314. சிறப்பு நிரம்பிய முரண்தொடை :
அயோத்தியா. நகர் நீங்கு. 47.
அயோத்தியா. தைலம் ஆட்டு. 75.

'களிப் பொடு கடைகள் தோறும்
கருங்கடல் கடந்த காலால்
பொழிலிற் பூ வாவிச் செல்லும்
பொறிவண்டிற் போனு'னென்றும், 38

316. 'மக்களி லொருவன் கொல்ல
மாள்பவன் வான மேரு
உக்கிட அணுவொன் றேடி
உதைத்தது போலு'மென்றும்,
'அக்கிட அஞ்சி னேனச்
சீதையென் றமிழ்தாற் செய்த
நக்கிடு நஞ்சால் வேந்தன்
நாளையித் தகைய'னென்றும், 39

317. 'கலந்தவர்க் கினிய தாய
கள்ளுமாய் பிரிந்து போந்தே
உலந்தவர்க் குயிரை யுண்ணும்
விடமுமாம் நிலவே'யென்றும்,
'கலந்தரு கடலிற் கான
பெருமையுங் கடிவில் தாங்கும்
நிலந்தரு சிறிய மாந்தர்
நீர்மையுங் காண்பீ'ரென்றும், 40

318. 'விடனெக்குங் கொடிய நோக்கி
னமுதொக்குஞ் சொல்லா' ரென்றும்,
'மடனெக்கு மடவாள் காலின்
வந்துகைப் போனு'ளென்றும்,
கொடுந்துயர்க் கடலை நீந்திக்
கோடுகண் டவனும் பின்னர்க்
கடுங்களிக் கரையி லாத
கடலுளாழ்ந் தனனே' என்றும், 41

319. 'வீங்கினள் மெலிந்தாள் மேனி
குளிர்ந்தனள் வெதுப்பினுலே
ஏங்கினள் உயிர்த்தாள் சீதை
எய்திய தென்னே' வென்றும்,
'தீங்குசெய் மாகால் சீறச்
சிறுதென்றல் வந்த' தென்றும்
'வீங்கிய துன்பத் தோடும்
உவகைமே வுளத்தா' னென்றும், 42

---

317. பால. உண்டாட்டு. 2.

318. பால. கடிமணப். 37.

319. யுத்த. மாயாசனகப். 88.

320. 'பொருப்புவில் லிறுத்தாய் நீயிக்
கருப்புவில் லிறுத்தி' யென்றும்,
'பருப்பதம் போல்வீர் மாரித்
துளியிடைப் படர்வீ'ரென்றும்,
'விருப்புற விடத்தை விண்ணின்
அமுதாய்வேண் டினனே'யென்றும்,
திருப்புகச் செப்ப லெல்லாம்
முரண்தொடைச் செப்ப மாமே. 43

8. புலமைத்திறன் படலம்

321. மேதகு கவிஞராம் விலையின் மாட்சியர்
மீதுசெல் லாட்சியின் மிகைவி ரும்பினர்
போதினிற் றுதகை புள்ளி வண்டென
யாதுள நூற்கலை யாவுந் தேர்வரால். 1

322. சங்கிதம்[1] சோதிடம்[2] சமயம்[3] தத்துவம்[4]
இங்கித எழிற்கலை பரதம்[5] சிற்பஞ்[6]சீர்
தங்குதர் மம்,[7] சமம் தந்த தந்திரம்[8]
நுங்கிய மதியிந் நூல் நுணித்துக் காட்டுமே. 2

உதாரணம்

1. (அ) "நச்செனக் கொடிய நாகக் கள்ளொடு குருதி நக்கிப்
பிச்சரிற் பிதற்றி யல்குல் பூந்துகில் கலாபம் பீறிக்
குச்சரித் திறத்தி ேனைசை களங்கொளக் குழுக் கொண் [டீண்டிச்
சச்சரிப் பாணி கொட்டி நிறைதடு மாறு வாரும்." (27)

(ஆ) "தந்திரி நெறியிற் றுக்குறு கருவி
தூக்கின ரெழு விதச் சதியின்
முந்துறு குணி லோ டியைவுறு குறட்டிற்
சில்லரிப் பாண்டிலின் முறையின்
மந்திர கீதத் திசைப்பதம் தொடர
வகையுறு கட்டளை வழாமல்
அந்தர வானத் தரம்பையர் கரும்பிற்
பாடலார் அருகுவந் தகவ." (28)

---

320. பால. உலாவியற். 22.

322. சங்கீதம், சோதிடம் முதலியனவெல்லாம் கம்பன் காவியமும் காட்டும். சங்கிதம்–சங்கீதம் என்பதன் குறுக்கல் விகாரம்.

1. (அ) சுந்தர. ஊர்தேடு. 189.
(ஆ) சுந்தர. காட்சிப். 90.

2. "முத்தினின் முழுநில வெறிப்ப மொய்ம்மணிப்
பத்தியி னிளவெயில் பரப்ப நீலத்தின்
தொத்தின மிருள்வரத் தூண்டச் சோதிட
வித்தகர் விரித்தநா ளொத்த வீதியே." (29)

3. "பொருவரிய சமயங்கள் புகழ்கின்ற புத்தேளிர்
இருவினையு முடையார்போ லருந்தவநின் றியற்றுவார்
திருவுறையு மணிமார்ப நினக்கென்னை செயற்பால
ஒருவினையு மில்லார்போல் உறங்குதியா லுறங்காதாய்." (30)

4. "சாங்கியம் யோகமென் றிரண்டு தன்மைய
வீங்கிய பொருளெலாம் வேறு காண்பன
ஆங்கவை யுணர்ந்தவர்க் கன்றி யன்னவன்
ஓங்கிய மேனிலை யுணர்தற் பாலதோ?" (31)

5. "ஏனைய பிறவுங் கண்டார்க் கிந்திரசால மென்னத்
தானவை யுருவிற் றோன்றும் பாவனைத் தகைமை சான்றோர்
மானமை நோக்கினாரை மைந்தரைக் காட்டி வாயால்
ஆனையை விளம்பித் தேரை யவிநயத் தியற்றியுற்றார். (32)

6. (அ) "கல்லடித் தடுக்கிவாய் பளிங்கரிந்து கட்டிமீ
தெல்லிடப் பசும்பொன்வைத் திலங்குபன் மணிக்குலம்
வில்லிடக் குயிற்றிவாள் விரிக்கும் வெள்ளி மாமரம்
புல்லிடக் கிடத்திவச் சிரத்தகால் பொருத்தியே." (33)

(ஆ) மரகதத் திலங்கு போதி கைத்தலத்து வச்சிரம்
புரைதபுத் தடுக்கி மீது பொன்குயிற்றி மின்குலாம்
நிரைமணிக் குலத்தி னுளி நீள் வகுத்த வோளிமேல்
விரவுகைத் தலத்தி லுய்த்த மேதகத்தின் மீதரோ." (34)

(இ) "ஏழ்பொழிற்கு மேழ்நிலத் தலஞ்சமைத்த தென்ன நூல்
ஊழுறக் குவித்தமைத்த வும்பர் செம்பொன்
[வேய்ந்துமீச்... (35)

---

2. அயோத்தியா. மந்தரை சூழ்ச்சிப். 41.

3. ஆரணிய. விராதன் வதைப். 56.

4. யுத்த. இரணியன் வதைப். 60.

5. யுத்த. களியாட்டுப். 12.

6. (அ) பால. நகரப். 24.

(ஆ) பால. நகரப். 25.

(இ) பால. நகரப். 26.

7. (அ) "உற்றது கொண்டு மேல்வந் துறுபொரு ளுணரும்
[கோளார்
மற்றது வினையின் வந்த தாயினும் மாற்ற லாற்றும்
பெற்றியர் பிறப்பின் மேன்மைப் பெரியவர் அரிய
[நூலும்
கற்றவர் மான நோக்கிற் கவரிமா வனைய நீரார்." (36)

(ஆ) "காலமு மிடனு மேற்ற கருவியுந் தெளியக் கற்ற
நூலுற நோக்கித் தெய்வ நுனித்தறங் குணித்த
[மேலோர்
சீலமும் புகழ்க்கு வேண்டுஞ் செய்கையும் தெரிந்து
[கொண்டு
பால்வரும் உறுதி யாவுந் தலைவற்குப் பயக்குநீரார்."(37)

(இ) "தம்முயிர்க் குறுதி யெண்ணார் தலைமகன் வெகுண்ட
[போதும்
வெம்மையைத் தாங்கி நீதி விடாதுநின் றுரைக்கும் வீரர்
செம்மையிற் றிறம்பல் செல்லா தேற்றத்தார் தெரியுங்
[காலம்
மும்மையும் உணர வல்லார் ஒருமையே மொழியு நீரார்."
(38)

8. தேராயிர மாயிர கோடிதன் மாடு செல்லப்
போரானை புறத்தி னவற்றி னிரட்டி போதத்
தாரார் புரவிக் கடல்பின் செலத்தானை வீரப்
பேராழி முகஞ்செலச் சென்றனன் பேர்ச்சி யில்லான்." (39)

[வேறு]

323. மாத வத்தி லொழுகலேம், மாமறை
யோதலேம், ஓது வார்க்கு முதவலேம்,
முதெரி வளர்க்கேம், முறை நீங்கினேம்,
ஏது றாஉ' மெனு மந்தணர்த் தந்தனன். 3

324. "கரிய மாலினுங் கண்ணுத லானினும்
உரிய தாமரை மேலுறை வானினும்
விரியும் பூதமோ ரைந்தினும் மெய்யினும்"
பெரிய அந்தணர் பீட்டினை நாட்டினன். 4

---

7. (அ) அயோத்தியா. மந்திரப். 6.
(ஆ) அயோத்தியா. மந்திரப். 7.
(இ) அயோத்தியா. மந்திரப். 8.
8. யுத்த. நாகபாசப். 26.
323. ஆரணிய. அகத்தியப். 14.
324. அயோத்தியா. மந்தரை சூழ்ச்சிப். 15.

325. "சூது முந்துறச் சொல்லிய மாத்துயர்
நீதி மைந்த நினக்கிலை யாயினும்
ஏத மென்பன எய்திடு மூல"மென் 5
றோத ரசுடை யூறுமு ரைத்தனன்.

326. "இனிய சொல்லினன் ஈகையன் எண்ணினன்
வினையன் தூயன் விழுமியன் வென்றியன்
நினையு நீதி நெறிகட வாதவன் 6
அனைய னேயர செ"ன்றெடுத் தாற்றினன்.

327. "தீதென் றுள்ளவை யாவையுஞ் செய்தமைக்
கோதென் றுண்டில ளித்தனை யேகுறை"
ஈது தொட்டே இராமற்குக் காதி சேய் 7
மாதர்க் காதும் வழக்குரை காண்பிரால்.

328. 'கொடியைப் பற்றி விதானம் கொளுத்திக்கீழ்
நெடிய தூணைத் தழுவி நெடுஞ்சுவர்
முடியச் சுற்றி முழுது முருக்கனற்' 8
கடுமை கூறுங் கவித்திறன் காண்பிரால்.

329. 'பூக்க ரிந்து முறிபொறி யாயடை
நாக்க ரிந்து சினைநறுஞ் சாம்பராய்
மீக்க ரிந்து நெடும்பணை வேருற 9
காக்க ரிந்த" கனற்சினம் காண்பிரால்.

330. "எள்ளு வவென்ன இன்னுயி ராயினும்
கொள்ளல் தீது கொடுப்பது நன்றெ"னு
வள்ளற் றன்மையை மாவலி கூறத்தன் 10
உள்ளத் தன்மையு ரைத்ததும் காண்பிரால்.

331. "கோல்வி ழுந்தழுந் தாமுனம் கூடியாம்
மேல்வி ழுந்திடி னுமிவன் வீயு"மென்
றேலெ ழுந்தபெருந்தொகை யாளரின் 11
பாலெ ழுந்தப வுருஷம் காண்பிரால்.

---

325. அயோத்தியா. மந்தரை சூழ்ச்சிப். 20.
326. அயோத்தியா. மந்தரை சூழ்ச்சிப். 26.
327. பால. தாடகை வதைப். 38.
328. சுந்தர. இலங்கை எரியூட்டு. 1.
329. சுந்தர. இலங்கை எரியூட்டு. 19.
330. பால. வேள்விப். 28.
331. யுத்த. மூலபலவதைப். 129.

332. "பருவ மங்கையர் பங்கய வாண்முகத்
துருவ வுண்கணை ஒண்பெடை யாமெனக்
கருதி யன்பொடு காமுறு வண்டெ"னத்
தெரிவை யர்விழி தீட்டலும் காண்பிரால். 12

333. 'இணரொ ளிக்கொண் டிருளைத் துரப்பன
மணிவி ளக்கல மாதரின் மேனி'யென்
றணிவ ளைக்கையா ரம்பொன் னழகினை
எணிவி ளக்கியன் னுரிசை ஏத்தினன். 13

334. 'காக துண்டம் நறுங்கல வைக்களி
யாக முண்ட தடங்கலு நீங்கலாற்
வேக டஞ்செய் மணியென மின்னின
பாக டர்ந்த"சொல் லாரைப் பயந்தனன். 14

335. "வஞ்சி நாண விடைக்கு மடநடைக்
கஞ்சி யன்ன மொதுங்க அடியன்ன
கஞ்சம் நீரி லொளிப்ப"அக் காரிகை
மஞ்ச னத்தின் வனப்பு மதித்தனன். 15

336. "பெண்ணி னோக்குஞ் சுவையிற் பிறர்பிறர்க்
கெண்ணி நோக்கி யியம்பரு மின்பத்தைப்
பண்ணி னோக்கும் பரவமு தைப்பசுங்
கண்ணி னோக்கும்"களிப்பைக் கனிந்தனன். 16

337. "கையைக் கையி னெரிக்குந்தன் காதலன்
வைகு மாலிலை யன்ன வயிற்றினைப்
பெய்வ ளைத்தளி ராற்பிசை யும்"புகை
வெய்து யுர்க்குமோர் விம்மல் விளம்பினன். 17

338. 'வாள ரம்பொரு மான்விழி யார்முகம்
சாள ரம்வரு சந்திர னு'மென
நீள ரங்குல கெங்கும் நிலவவான்
கோளி ரங்கக் குறித்தவன் யாவனோ! 18

---

332. பால. நாட்டுப். 23.
334. பால. நீர்விளையாட்டுப். 22.
335. அயோத்தியா. கங்கைப். 20.
336. அயோத்தியா. கங்கைப். 11.
337. அயோத்தியா. நகர் நீங்கு. 10.
338. பால. மிதிலைக் காட்சிப். 14.

339. "தேவ முதத்த னங்கன் திருத்திய
ஓவி யம்புகை யுண்ட வுரு"வெனக்
காவி யங்கணி சீதை கவினுறு
தேவி எங்கணி சேர்த்தவன் யாவனோ! 19

340. 'ஆத ரித்தமு தத்தில் அனங்கவேள்
கோதில் கோலினைத் தோய்த்தெழு தமுடி
யாது நின்று திகைப்புற் றழுங்கு'மச்
சீதை பேரெழிற் செப்பினன் யாவனோ! 20

341. "எள்ளில் பூவையு மிந்திர நீலமும்
அள்ளல் வேலையு மம்புச சாலமும்
விள்ளும் வீயுடைப் பானலு மேவுமெய்"
வள்ளல் வண்ணம் வகுத்தவன் யாவனோ! 21

342. "ஆம்ப லொத்தமு தூறுசெவ் வாய்ச்சியர்
தாம்ப தைத்துயி ருட்டடு" மாறுமா
றேம்ப லூட்டலா மின்னமு தென்னமு
தாம்பி ழும்பை யணிந்தவன் யாவனோ! 22

343. "பறிக்கு மார்பிற் பகழியைப் பன்முறை
முறிக்கு மூர்ச்சிக்கு மோக்கும் முயங்குமால்
எறிக்கு வெங்கதிரோடுல கேழையுங்
கறிக்குங்" காந்தலைக் காட்டினன் யாவனோ! 23

344. 'காலுற் றுச்சீதை கண்வழி காமனேய்
பாலுற் றபிரை யென்னப் படர்ந்தது'
மாலுற் றமயக் கோவின் ணினோடுமண்
மேலுற் றமிதி லைப்பொனின் பொன்னுரு. 24

படைவீரர்

[வேறு]

345. "ஒடிக்கு மேல்வட மேருவை வேரொடு மொடிக்கும்
இடிக்கு மேல்நெடு வானக முகட்டையும் இடிக்கும்
பிடிக்கு மேல்பெருங் காற்றையுங் கூற்றையும் பிடிக்கும்
குடிக்கு மேல்கட லேழையுங் குடி"படை குனித்தான். 25

---

339. சுந்தர. காட்சிப். 11.
340. பால. மிதிலைக் காட்சிப். 4.
341. பால. மிதிலைக் காட்சிப். 90.
342. பால. உலாவியற். 31.
343. யுத்த. இராவணன் சோகப். 32.
344. பால. மிதிலைக் காட்சிப். 41.
345. கிட்கிந்தா. தானைகாண். 25.

346. "அனும னாற்றலு மரசன தாற்றலுஞ் சாலா
கனியுங் காய்களு முணவுள முழையுள காக்க
மனித ராளினென் இராக்கத ராளினென் வையம்"
எனுமிக் கூற்றினுள் கவிப்படை படைகுண மிழைத்தான். 26

347. "ஈசன் மேனியை ஈரைந்து திசையினை யீண்டிங்
ஆசில் சேனையை ஐம்பெரும் பூதத்தை அறிவை
பேசும் பேச்சினைச் சமயங்கள் பிணக்குறும் பிணக்கைக்
கூச லல்லது குறிப்பரோ முடிவெனக்" குறித்தான் 27

348 "உலகிற் றோன்றிய மறுக்கமு மிமைப்பில ருலைவும்
மலையும் வானமும் வையமு மறுகுறு மறுக்கும்
அலைகொள் வேலைக ளஞ்சின சலிக்கின்ற அயர்வும்
அலகி லாதெறி துயர்க்கட லாழமும் அளந்தான். 28

349. "கண்ணன் நேமியுங் கண்ணுதல் கணிச்சியும் கமலத்
தண்ணல் குண்டிகைக் கலசமும் அழியினும் அழியாத"
திண்மை சான்றவத் தேரதன் அழிகலாச் சீரை
வண்மை சான்றிதன் மேலெவர் வழுத்துவர் வரம்பே. 29

350. "அகழி வேலையைக் காலத்தை யளக்கர்நுண் மணலை
நிகழு மீன்களை விஞ்சையை நினைப்பதே நின்ற
இகழ்வில் பூதங்க ளிறப்பினு மிறுதிசெல் லாத
புகழெ னச்சரம் தொலைவிலாத் தூணியும் பொறித்தான். 30

படைக்கலம்

[வேறு]

351. "மழுக்களும் அயிற்களும் வயிர வாட்களும்
எழுக்களும் தோமரத் தொகையு மீட்டியும்
முழுக்களு முசுண்டியுந் தண்டு முத்தலைக்
கழுக்களு முலக்கையுங் கால பாசமும்." 31

352. "குந்தமுங் குலிசமுங் கோலும் பாலமும்
அந்தமில் சாபமும் சரமும் ஆழியும்
வெந்தொழில் வலயமும் விளங்கு சங்கனு
பந்தமு"மெனப் பல படையுந் தந்தனன். 32

---

346. யுத்த, மூலபலவதைப். 43.
347. கிட்கிந்தா. தானைகாண். 36.
348. யுத்த. இராவணன் தேர் ஏறு. 32.
349. யுத்த. இராலணன தேர் ஏறு. 23.
350. யுத்த. இராவணன் தேர் ஏறு. 17.
351. ஆரணிய. கரன்வதைப். 34.
352. ஆரணிய. கரன்வதைப். 35.

பல்லியம்

353. "கும்பிகை திமிலையுங் குறடு செண்டையும்
பம்பொலிப் பாண்டிலும் பணவம் தூரியும்
கம்பொலி கரடிகை தக்கை கண்டையும்
அம்பலி கணுவையும் சகடை ஊமையும்." 33

354. "தாரையுஞ் சங்கமுந் தாளம் கொம்பொடு
வார்மிசை பம்பையு துடியும் மற்றவும்"
பேரியு மெனக்களன் பிளிறு பற்பல
தூரியம் அடுக்குறத் தொடுத்துத் தந்தனன். 34

[வேறு]

355. "சங்கொலி வயிரி ஞேசை யாகுளி தழங்கு காளம்
பொங்கொலி வரிகண் பீலி பேரொலி வேயின் பொம்மல்
சிங்கத்தின் முழக்கம் வாசிச் சிரிப்புதே ரிடிப்பு திண்கைம்
மங்குலி னதிர்வு" போரின் வழங்கொலி மயக்கு நோக்கீர். 35

356. "பண்டரு கிளவுச் செவ்விப் பல்லியத் தொழுகு தீந்தேன்
கண்டினிற் குயின்ற வீணை நரம்பொடு கமழுந் தேறல்
வண்டினிற் பொலியும் நல்யாழ் வழியுறு நறவம் வானத்
தண்டர்தம் செவியி னுண்ணும் அமுதிசை"யணிதல்
[நோக்கீர். 36

357. "தாதுகு நறுமென் சந்தம் குங்குமம் குலிகம் தண்ணென்
போதுகு பொலன்ரு தின்ன தொடத்தக்க யாவும் பூசி
மேதகு சொல்லின் மெல்லென் சொல்லெனும் பளிங்கின்
[வாயே
சீதுகு சாந்தம் தேக்கிச் செய்தளச் செல்வி நோக்கீர். 37

358. சுந்தரப் பவழச் செவ்வாய்க் கைகையி சூழ்ச்சி யாலம்
மந்தரம் புரையுந் தோளான் மயக்குற்று மறுகு மெல்லி
எந்தவா றகன்ற தென்ன எழில் பொழிந்தொழுகு சொல்லாற்
சந்தர்ப்பத் தகுதி நோக்கித் தந்த வர்ணனையும் நோக்கீர். 38

---

353. யுத்த. பிரமாத்திரப். 5.

354. அயோத்தியா. ஆறு செல். 33.

355. யுத்த. பிரமாத்திரப். 7.

356. யுத்த. பிரமாத்திரப். 8.

357. சுந்தர. கடல்தாவு. 9.

358. கைகேயியின் சூழ்வினையால் தசரதன் உள்ளம் அழிந்து பெருந்துயருற்ற இரவுப் பொழுது கழிந்த தன்மையை வருணிக்கும் பகுதி இங்குக் குறிக்கப்படுகிறது. அயோத்தியா. கைகேயி சூழ்வினைப். 46.

359. "தேவரும் முனிவர் தாமுந் திசைதொறு முறையிற் சிந்துங்
கேவல மலரால் வேறே ரிடமின்றிக் கிடந்த வாற்றல்
பூவெனு நாம மன்றிவ் வுலகிற்கும் பொருந்திற்"றென்ற
நாவனும் காட்டி னுன்நற் பொருளொரு மொழியுண்
[ணூட்டி. 39

360. "வீதிவாய் செல்கின் றுன்போல் விழித்திமை யாது நின்ற
மாதரார் கண்க ளூடே வாவுமான் தேரிற் செல்வான்
யாதினு முயர்ந்தோர் தன்னை யாவர்க்குங் கண்ண னென்றே
ஓதிய பெயரு"க் குற்ற பொருளுரைத்ததுவு மஃதே, 40

361. "இலக்குவ னென்னும் நாமம் உனக்கென்று மியைவ தென்று
இலக்குவன் கணைக்கு யானே ஆக்குவ னிடையிற் புக்கு
விலக்குவ னென்னப் பொங்கி விடையவ னுறினும் வீரம்
கலக்குவ"னென்னு மிந்திர சித்துரை வீறு மஃதே. 41

362. 'அண்டத்தி னளவு மின்ன பகர்ந்தழைத் தரக்கர் வேந்தன்
கெண்டையங் தடங்கண் ணுளுள் கிளுகிளுத் தொடுங்கும்
[வண்ணம்
பண்டைத் தன்னுமம் வந்த காரணம் பாரித் தா'னென்
றெண்டிசை வென்றூர்க் கேற்ப இயம்பிய குறிப்பு மஃதே. 42

363. 'செப்பிடுங் காலை மேலோர் சீறினுஞ் சிறப்பே யாதல்
தப்புமே, அதனைக் கண்டோம் சாகரத் திடையந் நாளே
உப்புடை வேலை யென்ற உலகுரை பழியை நீங்கி
அப்புடை வேலை யாகி யமைந்த' தென்பதுவு மஃதே. 43

364. 'பொசிவுறு பசும்பொற் குன்றிற் பொன்மதில் நடுவட் பூத்து
வசையற விளங்குஞ் சோதி மணியின லமைந்த மாடத்
தசைவில இலங்கை மூதூர் ஆரிரு ளின்மை யாலே
நிசிசர ரானு ரந்த நிருதரெ'ன் குறிப்பு மஃதே. 44

[வேறு]

365. "தழைத்த பொன்முலைத் தடங்கடந் தருவிபோய்த் தாழ
புழைத்த போலநீர் நிரந்தரம் பொழிகின்ற பொலிவால்
இழைக்கு நுண்ணிய மருங்குலாள் இணைநெடுங் கண்கள்
மழைக்கண்" என்னவோர் காரணங் குறித்தது மஃதே. 45

---

359. யுத்த. திருமுடி சூட்டு. 8,
360. பால. உலாவியற். 6.
361. யுத்த. பிரமாத்திரப். 64.
362. யுத்த. மாயாசனகப். 87.
363. யுத்த. வருணனை வழிவேண்டு. 33.
364. யுத்த. ஊர்தேடு. 99.
365. சுந்தர. காட்சிப். 6.

[வேறு]

366. "எல்லை யற்ற இடர்தரு வாயெ"ன
மெல்லி யற்கு இராமன் விளம்பலும்,
'இல்லை யாகி முடியலுற் றுன்திருச்
சில்லி யந்தேர்ச் செறிந்தன'னென்றலும், 46

367. 'இன்னல் செய்யு மிராவணன் தீமைபோல்
துன்னு கூனியும் தோன்றின' னென்றலும்,
'முன்னை நாளுயி ரோடு முளைத்த நோ'
யென்னச் சூர்ப்ப ணகையை இசைத்ததும், 47

368. பின்னர் வந்து பிணங்கு நிகழ்ச்சியை
முன்னர்ச் சுட்டி முடிக்குந் துறை; கதை
மன்னு மிம்முறை மாபுல வர்கவித்
துன்னு மென்ன நாம் சொல்லவும் வேண்டுமோ? 48

[வேறு]

369. 'கடுப்பினில் யாரு மறிந்திலர் கையால்
எடுத்தது கண்டனர் இற்றது கேட்டார்
தடுத்திமை யாம லிருந்தவர் தாமெ'ன்
றடுத்த விரைவை யறைந்துளர் யாரே? 49

370. 'மாலும் மதிக்கணம் வாளி தொடுப்பான்
கோல நெடுவில் குனித்தது காணார்
சூல மறத்துண் டங்கள் கண்டாரெ'ன்
றேலும் விரைவை இசைத்துளர் யாரே? 50

[வேறு]

371. "மன்னெடுங் குடைமிடைந் தடையவான் மறைதரப்
பொன்னிடும் புவியிடும் புனைமணிக் கலனெலாம்
மின்னிடும் வில்லிடும் வெயிலிடும் நிலவிடும்"
என்னிடாக் கதிரிவை எரித்தல்யார் விரித்துளார்? 51

---

366. அயோத்தியா. நகர்நீங்கு. 227.

367. அயோத்தியா. மந்தரை சூழ்ச்சிப். 47.
ஆரணிய. சூர்ப்பணகைப். 8.

368. பின்னர் வரவிருக்கும் ஒரு நிகழ்ச்சியைக் காவியத்தில் முன்னரே குறிப்பாக உணர்த்தும் கவிமரபு காவியத்தில் உள்ளமை கூறல்.

369. பால. கார்முகப். 34.

370. பால. தாடகைவதைப். 48

371. பால. எதிர்கொள். 11.

[வேறு]

372. "நஞ்சினின் நளிர்நெடுங் கடலின் நங்கையர்
அஞ்சன நயனத்தின் அவிழ்ந்த கூந்தலின்
வஞ்சனை யரக்கர்தம் வடிவிற் செய்கையின்
நெஞ்சினின்" எனவிருள் நிகர்ப்புத் தந்தனன்.' 52

373. "கொன்றையந் தாரநின் கோபம் பூண்பவர்
வன்றிறல் யமனையு மரசு மாற்றுவார்
வென்றிய மதகரி பிடித்து வீசுவார்"
என்றன னிலங்கைக்கா வலர்தம் மீட்டினை. 53

374. "சுள்ளியி னிருந்துறை குரங்கின் றேள்வலிக்
கெள்ளுதி போலும்நின் புயத்தை" என்பது
தள்ளரு வலியினுற் றருக்கி ராக்கதர்
உள்ளத்தில் வானரர் உவர்ப்புக் காட்டுமால். 54

9. அறவுரைப் படலம்

375. பல்லொ ழுக்கம் படரும் புவிக்கொரு
நல்லொ ழுக்கம் புகட்டலும் நாமநூல்
தொல்லொ ழுக்கத் தொடர்பெனவே ; கம்பன்
சொல்ல முத்திய தூநெறி மட்டில. 1

376. கலையி னேக்கமே நற்புல வர்கவித்
தலையி னேக்கமாய்ச் சாரினு முள்ளுறை
நிலையி னுக்கம்பால் நெய்யென நன்னெறி
விலையி லாக்கம் விரவித் தழைக்குமே. 2

377. "அருப்ப மென்று பகையையு மாரழல்
நெருப்பை யுமிகழ்ந் தாலது நீதியோ?"
'விருப்பத் தக்கோர் முதலொடு வீயினும்
மருப்புகு மரம்போல் வண்மை மாய்வரோ?' 3

---

372. கிட்கிந்தா. கார்காலப். 4.

374. யுத்த. இராவணன் மந்திரப். 25.

375. உலகிற்கு உயரிய நல்லொழுக்க நெறிகளை எடுத்துரைப்பது சிறந்த நூல்களின் உட்கோள் என்பது கம்பன் வாக்குகளிலும் விரவிவரக் காணலாம்.

[வேறு]

378. "ஒன்று வேண்டல ராயினு மொருவர்பா லொருவர்
சென்று வேண்டுவ ரேலவர் சிறுமையிற் றீரார்;"
'நின்றி டாநெறிச் சிறியவர் தீயன நிகழ்த்தின்
கன்றி டாவுளிற் பொறுப்பது பெரியவர் கடனே.' 4

379. 'மெய்யி னின்றபின் வேள்வியு மியற்றவேண் டுவதோ?
'உய்யத் தஞ்சென மாதரை யுள்ளிடார் தக்கோர்?
'வெய்ய கூற்றுவாய் வீரமுங் குறைவரோ இறையோர்?
'துய்ய சொல்மரு மக்களுற் றுர்துய ரற்றுர்.' 5

[வேறு]

380. "தீர்வரு மின்னல் தம்மைச் செய்யினுஞ் செய்ய சிந்தைப்
பேரரு ளாளர் தத்தம் செய்கையிற் பிழைப்ப துண்டோ?"
'பார்வரு முயிர்கள் நீதிப் பண்புமே ஞேக்கம் வைத்துச்
சேருதல் கிழமைத் தாகும் திறம்புதல் சீர்மைத் தாமோ?' 6

381. "தொல்லருங் கால மெல்லாம் பழகினும் தூயரல்லார்
புல்லலர்; உள்ளம் தூயார் பொருந்துவ ரெதிர்ந்த ஞான்றே;"
'நல்வினை யுடைய ராகி அறம்நலி யாதார்க் கெல்லாம்
பல்வினை நலனே எய்தும் படரோடீ றடைவ துண்டோ? 7

